கோகுலம்

GOKULAM
மார்ச் '95
ரூ. 5.00



அப்பா, பாடம் சொல்லித் தருவாரா?



கோகுலம்

1995
மார்ச்
மாத இதழ்
மலர் : 13
இதழ் : 2

உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல்வேணும். - பாரதியார்.

அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

தேர்வுகள் எல்லாம் தொடங்கும் நிலையில் இருக்குமே? இன்னும் படிக்க ஆரம்பிக்காதவர்கள் இப்பொழுதாவது கடுமையாக உழைத்துப் படிக்கத் தொடங்கினால் கண்டிப்பாகத் தேர்ச்சி பெற்று விடலாம்.

நான் கோகுலம் ஆசிரியரானால் பகுதிக்கு நிறையப் பேர் எழுதியனுப்பியிருக்கிறார்கள். இதில் ஒரு பெரிய குறை. பெரும்பாலானவர்கள் தங்கள் பெயரும் புகைப்படமும் வர வேண்டும் என்பதற்காக எதைஎதையோ எழுதியனுப்ப ஆரம்பித்து விட்டார்கள்! அத்துடன் ஒருவர் கூறிய அதே கருத்தையே திரும்பத் திரும்ப எழுதியனுப்புகிறார்கள். இவற்றை வெளியிட்டால் வாசகர்களுக்கு அலுப்புத் தட்டுவது நிச்சயம். எனவே, இந்தக் கருத்துத் தொடரை இரண்டு மூன்று இதழ்களுடன் முடிப்பது நல்லது என்று கருதுகிறேன்.


விடுகதைப் பகுதி ஒன்றைத் தொடங்க வேண்டும் என்று பல தம்பி தங்கைகள் எழுதிக் கேட்டு வருகிறார்கள். இவர்களுக்கென்று ஒரு பகுதி விரைவில் தொடங்க உள்ளது. முதலில் தந்தியைப் பற்றிய விடுகதைகளை ஒரு தபால் கார்டில் எழுதி அனுப்பி வையுங்கள். முழு முகவரியோடு உங்கள் வயதையும் குறிப்பிடுங்கள்.

இந்த இதழில் நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த சிறுகதைப் போட்டி முடிவு வெளியாகியுள்ளது. குழந்தைக் கவிஞரின் நினைவாக அறிவிக்கப்பட்ட சிறுகதைப் போட்டியின் முடிவு, அவரது நினைவு நாள் வரும் இந்த மார்ச் மாதத்தில் வெளியாவது எத்தனை பொருத்தமானது! அவரது சில நினைவுகளை கவிஞரின் மனைவியார் நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்.

வாண்டுமாமாவின் சித்திரத் தொடர்கதைக்குத்தான் எத்தனை வரவேற்பு! விறுவிறுப்புக் குறையாமல் எழுதக் கூடிய அவருடைய படைப்புகள் சிறுவர்களை மட்டுமல்லாமல் பெரியவர்களையும் ஈர்க்கக்கூடியது என்பது உறுதியாகி விட்டது.

முஸ்லிம் வாசகர்கள் அனைவருக்கும் ரம்ஜான் பெருநாள் வாழ்த்துகள். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,
ரேவதி
(கௌரவ ஆசிரியர்)



கோகுலம்

1995 மார்ச் இதழில்



* பூநாரை எப்படி இரை தின்னும்? - பக் 71




* கம்மர்கட் கண்ணப்பர் - பக் 91



* ரத்தினபுரி ரகசியம் - பக் 39





புறா திருமணம்!


''பரோடாவில் வாழ்ந்த மன்னரான 'காண்டேராவ்' தனது உறவினர்கள் புடை சூழ 42 ஜோடிகளுக்கு 120 இலட்சரூபாய் செலவழித்து (அந்தக் காலத்திலேயே) திருமணம் செய்து வைத்து மகிழ்ச்சியடைந்தார்! மணமக்கள் யார் தெரியுமா? புறாக்கள் தாம்! திருமணம் முடிந்து மணமக்களை யானை மூலம் அரண்மனைக்கு வெகுஜோராக அழைத்து வந்தார்!


–அ.முஸ்தபா


மணிக்கல் அடக்கம்

பச்சை மணிக்கல் மிகவும் உறுதியானது. இறந்தவர் உடலைப் பாதுகாக்க அது உதவும் என்று பண்டை சீனர்கள் நம்பினர். கி.மு. 125ல் டௌவான் என்ற அரசி இறந்தாள். அவளுடைய உடலைப் பாதுகாக்க அரசர் 2160 மணிக்கற்களை தங்கக் கம்பியில் கோத்து கவசம் போல உடைதயாரித்து அரசிக்கு அணிவித்து அடக்கம் செய்தார். கி.மு.112ல் இறந்த அரசருக்கு செய்யப்பட்ட மணிக்கல் கவசம் 2690 கற்களைக் கொண்டது. மேலும் பல விலையுயர்ந்த கற்களும் அதில் பதிக்கப் பட்டிருந்தன. 1968ஆம் ஆண்டில் மாஞ்செங் என்ற இடத்தில் இவை தோண்டியெடுக்கப்பட்டன.

–நல்லாலம் காசிதாசன்.







ரமலான் திருநாள்

நம் நாட்டில் உள்ள ஒவ்வொரு சமயத்தவரும் குறிப்பிட்ட ஒரு நாளை பண்டிகை தினமாகக் கொண்டாடி மகிழ்கின்றனர். இதே போன்று உலகெங்கும் வாழும் முஸ்லிம்கள் ரமலான் திருநாளை பண்டிகைத் தினமாகக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

இஸ்லாமிய மாதங்கள் பன்னிரண்டில் ஒன்பதாவது மாதமாக அமைந்திருப்பது ரமலான் மாதம். இம்மாதத்தில்தான் இஸ்லாமியத் திருமறையான திருக்குர்ஆன், இறைவனால் நபிகள் நாயகம் மூலம் உலகத்துக்கு வழங்கப்பட்டது.

ரமலான் பண்டிகை 'ஈ துல் ஃபித்ரு' எனவும் அழைக்கப்படுகிறது. பண்டிகை அன்று ஏழை எளியவர்கட்குப் 'ஃபித்ரா' எனும் தானத்தைக் கட்டாயமாக வழங்கிக் கொண்டாடுவதால் இது ஈகைத் திருநாளாகவும் போற்றப்படுகிறது.

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளான இறை நம்பிக்கையாகிய கலிமா, தொழுகை, நோன்பு, ஏழை வரியான ஜக்காத், ஹஜ் ஆகியவற்றில் ஹஜ் கடமை தவிர்த்து, ஏனைய நான்கும் இம்மாதத்தில் முழுமையாக நிறைவேற்றப்படுகின்றன.

'ரமலான்' என்ற சொல்லுக்கு 'கட்டெரித்தல்' என்பது பொருளாகும். இம்மாதம் முழுமையும் நோன்பு இருந்து 'தராவீஹ்' எனும் இரவு நேர சிறப்புக் கூட்டுத் தொழுகையை நிறைவேற்றுவதன் மூலம் பாவங்கள் சுட்டெரிக்கப்படுவதால் இப்பெயர் பெற்றது எனலாம்.

இஸ்லாமிய ஐம்பெரும் கடமைகளில் மூன்றாவது கடமையான 'நோன்பு' இம்மாதத்தில் முழுமையாக நிறைவேற்றப்படுகிறது. இதனால் இது நோன்புப் பெருநாளாகவும் கொண்டாடப்படுகிறது.

உலகத்தில் உள்ள எல்லா மதங்களும் நோன்பாகிய விரதத்தைக் கடமையாக்கியுள்ளன. இந்து சமயமும் விரதமிருப்பதைப் புனிதக் கடமையாக ஆக்கியுள்ளது.

பிற சமய விரதத்துக்கும் இஸ்லாமிய நோன்புக்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடு உண்டு. பிற சமயங்கள் மாதத்தில் ஒரு நாளோ அல்லது வாரத்தில் ஒரு நாளோ அல்லது சில மணி நேரமோ விரதம் இருக்கப் பணிக்கின்றன. அப்போது வழக்கமாக உண்ணும் உணவில் சிலவற்றை நீக்கியோ அல்லது முழுமையாக உண்ணாமலோ விரதம் கடைப்பிடிக்கப்

மணவை முஸ்தபா

படுகிறது. ஆனால், பெரும்பாலான விரதங்களில் நீர் பருக எவ்விதத் தடையும் இல்லை.

ஆனால், இஸ்லாமிய நோன்பில் ரமலான் மாதம் முழுமையும் முப்பது நாட்களும் நோன்பு நோற்க வேண்டும். அதிகாலை நான்கு மணிக்கு முன்னதாக உண்பதும் பருகுவதும் முழுமையாக நிறுத்தப்படுகிறது. மீண்டும் முன்னிரவு ஆறு மணிக்கு மேல்தான் உண்ணவும் பருகவும் முடியும். இடையில் பகல் முழுதும் ஒரு சொட்டு நீரும் பருகாமல் நோன்பு நோற்க வேண்டும். வழக்கமான ஐவேளை தொழுகையோடு இரவில் 'தராவீஹ்' எனும் சிறப்புக் கூட்டுத் தொழுகையையும் நிறைவேற்றுவதால் அம் மாதம் முழுமையும் இடையறா இறைச் சிந்தனையாளர்களாக முஸ்லீம்கள் ஆகி விடுகிறார்கள்.

ரமலான் நோன்பு நோற்பவர் உளவியல் அடிப்படையிலும் மருத்துவ அடிப்படையிலும் மிகப் பெரும் நன்மைகளை அடைகிறார். நாள் முழுமையும் எதையும் உண்ணாமலும் பருகாமலும் கட்டுப்பாட்டுடன் இருக்கிறார். தன் வழக்கமான பணிகளைத் தொய்வின்றி ஆற்றுகிறார். இதனால், மன உறுதியும் மனக் கட்டுப்பாடும் மிகுதியாகப் பெறுகிறார். 'எல்லா வகையிலும் மனத்தைக் கட்டுப்படுத்துவதுதான் தூய்மையான பெரும் போராட்டம் (ஜிஹாதுல் அக்பர்) என்றார் நபிகள் நாயகம்.

நோன்புக் காலத்தில் தீயதை எண்ணாமல், கெட்டதைப் பார்க்காமல், நுகராமல் ஐம்புலன்களை அடக்கி எப்போதும் இறைச் சிந்தனையோடு இருப்பதால் மனம் தூய்மை அடைகிறது. தூய உள்ளமே இறைவனின் இருப்பிடம்.

மாதம் முழுமையும் நோன்பு இருப்பதால் பசித் துன்பம் இன்னதென அறிய முடிகிறது. இதனால் பசித்திருப்போருக்கு உதவ மனம் விழைகிறது.

ஆண்டு முழுவதும் இடையறாது இயங்கி வரும் உடலின் ஜீரண உறுப்புக்கள் ரமலான் மாதத்தில் நோன்பு இருப்பதால் போதிய ஓய்வு பெறுகின்றன.

ஏழு வயது முதல் முஸ்லீம் ஆண்-பெண் அனைவருக்கும் ரமலான் மாத நோன்பு நோற்பது கட்டாயக் கடமையாகும். எனினும் நோயாளிகள், பயணிகள், கர்ப்பிணிப் பெண்கள், பால் குடிக்கும் குழந்தை உள்ள தாய்மார்களுக்கு நோன்பு நோற்க விலக்கு உண்டு.

மார்க் அடிப்படையிலும் உளவியல் மற்றும் மருத்துவ அடிப்படையிலும் மிகுந்த பயன்தரவல்லதாக ரமலான் நோன்பு அமைந்துள்ளது. இந்நோன்பை இடையறாது நோற்பதன் மூலம் தாங்கள் தெரிந்தோ தெரியாமலோ செய்த பாவங்களைச் சுட்டெரித்து, இறையருளையும் ஆன்மீக பலத்தையும் நோன்பாளிகள் பெறுகிறார்கள். முப்பது நாள் வெற்றிகரமாக நோன்பு நோற்று முடித்து இறையருளைப் பூரணமாகப் பெற்ற பூரிப்பில், வெற்றிக் களிப்புடன் புத்தாடை புனைந்து, புதுப்பொலிவோடு இறைவனுக்கு நன்றி கூறி, ஒருவருக்கொருவர் 'ஈத் முபாரக்' என வாழ்த்துச் சொல்லிக் கொண்டாடி மகிழ்கின்றனர்.





குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி 1994 முடிவு!

பள்ளி மாணவர்களுள் சிறுவர் இலக்கியம் படைக்கும் ஆற்றலும் திறமையும் உள்ளவர்களைக் கண்டுபிடித்து வெளிக் கொண்டு வந்து உற்சாகமளிக்கும் நோக்கத்துடன் இந்தச் சிறுகதைப் போட்டி அறிவிக்கப்பட்டது. வந்த சிறுகதைகளைப் பரிசிலனை செய்து பரிசுக் குரியவற்றைத் தேர்ந்தெடுப்பது நடுவர்களுக்குப் பெரிய சவாலாக இருந்தது என்றே கூறலாம். எத்தனை வகையான புதுமைக் கதைக் களன்கள்! கற்பனைகள்! பரிசிலனை செய்து பரிசுக்குரியவற்றைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை கோகுலம் கௌரவ ஆசிரிய ருடன், சிறுவர் இலக்கிய உலகில் சிறப்பான இடத்தைப் பெற்றவர்களும் கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகம் ஆனவர்களுமான திருமதி ஆனந்தியும், திரு பூவை அமுதனும் ஏற்று நடுவர்களாக இருந்தனர்.

* நடுவர் பரிசீலனை





* நடுவர் பரிசீலனை

புகைப்படங்கள் : ராஜு

முதல் பரிசாக ரூபாய் மூன்னூறு பரிசு பெறும் கதை

"எனக்கு அடிமை!"

எழுதியவர் - கே. கணேஷ்ராம், சேந்தமங்கலம்

இரண்டாவது பரிசாக ஒவ்வொன்றும் ரூபாய் இருநூறு பரிசு பெறும் கதைகள்

1. நல்லா வேஷம் போடறான்!

எழுதியவர் - பா. சரவணகுமரன். திருக்கண்ணங்குடி. P.O.

2. சத்தியம் செய்!

எழுதியவர் - பி. லட்சுமி, திருத்துறைப்பூண்டி..

மூன்றாவது பரிசாக ஒவ்வொன்றும் ரூபாய் நூறு பரிசு பெறும் கதைகள்

1. நான் பொறுப்பு!

எழுதியவர் - கே. யுவராஜ் (வாண்டுதாசன்), ஆரணி.

2. எனக்கா பரிசு!

எழுதியவர் - ச. இரவிச்சந்திரன் (அ.ள. சூரியன் நிலா), குட்டூர்.

3. தண்ணீரில் போடாதே!

எழுதியவர் - எஸ். சிந்துஜா, தஞ்சை - 5.

பரிசு பெற்ற கதைகள் அடுத்த இதழில் இருந்து வெளியாகும். பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்கள் அனைவருக்கும் நன்றி!

பிரசுரம் செய்ய ஏற்கப்பட்டுள்ளவை:

1. இரும்மா இரு!
எழுதியவர் : ஏ.வி. வைஷ்ணவி, மயிலாடுதுறை.
2. இதற்கெல்லாம்!
எழுதியவர் : எஸ். கவிதாதேவி, பொறையூர்.
3. தம்பிக்காக
எழுதியவர் : எஸ். ஸ்ரீராமன், குற்றாலம்.
4. என் உழைப்புதான்
எழுதியவர் : கே. தீபா, சென்னை - 23.
5. இது நடந்தால்!
எழுதியவர் : ஆர். புஷ்பராஜ், நெய்வேலி - 1.
6. அப்பாவை விடவா?
எழுதியவர் : அ. அனிஸ் அகமது, திருச்சி - 12.
7.பிள்ளையார் பிழைத்தார்!
எழுதியவர் : அ. கங்காதரன், கீழப்புலியூர்.
8. தனக்கு வந்தால்!
எழுதியவர் : D. விவேக், மயிலாடுதுறை.
9. நீயா கதிரேசா!
எழுதியவர் : பா. ஜெயக்குமார், வந்தவாசி.
10. நடு நிசியில்
எழுதியவர் : ஜே. ஸ்ரீதர், நெய்வேலி - 3.

????????????? கேளுங்கள் சொல்லப்படும் ?????????????

*** சிறுவர் பத்திரிகையின் ஆசிரியராக பெண்கள் யாரேனும் இருந்திருக்கிறார்களா? — மா.ஹென்றி பீட்டர், நாகர் கோவில்**

சென்னை சில்ரன்ஸ் கார்டன் பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றிய திருமதி எஸ். சாந்தலக்ஷ்மி அவர்கள் 'ரவி' என்ற சிறுவர் மாத இதழின் ஆசிரியராக இருந்திருக்கிறார். குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா அவர்கள் குழந்தை எழுத்தாளர் சங்கத்தைத் தோற்றுவித்த ஆரம்ப ஆண்டுகளில் இவர் சங்கத்திற்கு சிறப்பாகப் பணி செய்திருக்கிறார். இவர் ஒரு பள்ளி ஆசிரியர்; நாடகத் தயாரிப்பாளர்; பாடலாசிரியர்; இசையமைப்பாளரும் கூட.

*** இந்திய நீச்சல் வீரர் மிஹிர் சென்னைப் பற்றி தமிழில் குழந்தைகளுக்காக ஏதாவது புத்தகம் வந்திருக்கிறதா? —வா. பிரகதாம்பாள், காலடிப் பாக்கம்.**

நா. எதிராஜன் என்பவர் "நீச்சல் வீரர் மிகிர் சென்" என்ற தலைப்பிலேயே ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார். "தமிழ்ப் புத்தக நிலையம்" இதை 1969ல் வெளியிட்டுள்ளதாக புத்தக அட்டவணை தெரிவிக்கிறது. தமிழ்ப் புத்தகாலயம், துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5 என்ற முகவரிக்கு எழுதிக் கேட்டுப் பாருங்கள்.



*** நீரே அருந்தாத உயிரினம் இருக்கிறதா? —வெ.பெர்னாண்டஸ், கொத்தகிரி.**

ஆஸ்திரேலியாவில் காணப்படும் கோலாகரடி என்ற விலங்கு நீரே குடிப்பதில்லை. இதன் உணவு யூகலிப்டஸ் மர இலைகள் மட்டுமே. இந்த இலை ஈரமாக இருந்தால்கூட இது தின்னாதாம்!

*** இங்கிலீஷ் கால்வாயை முதன்முதலில் நீந்திக் கடந்த இந்தியப் பெண் யார்? —ஜோ.நிர்மலாஜோஸ், கோவை-6**

குமாரி அதிர்ஷா என்பவர் இந்தச் சாதனையைச் செய்துள்ளார்.

*** 22 காரட், 18 காரட், 14 காரட்**

என்று தங்கத்தைக் குறிப்பிடும்போது கூறுகிறார்களே. இவைகளுக்குள் என்ன வேறுபாடு? —சு.அறிவுடை நம்பி, காஞ்சி-2.

தங்கத்தின் மாற்றைக் குறிப்பிட, அளவுக்காக 24 காரட் என்று வைத்திருக்கிறார்கள். இதுதான் அளவு கோல். 14 காரட் என்றால், 14 பகுதி தங்கம், மீதி 10 பகுதி மற்ற உலோகங்கள். 18 காரட் என்றால் 18 பகுதி தங்கம். மீதி 6 பகுதி மற்ற உலோகம். 22 காரட் என்றால் 22 பகுதி தங்கம், மீதி பகுதி மற்ற உலோகம் என்று பொருள்.

*** 'லாக் அவுட்' என்று அடிக்கடி செய்திப் பத்திரிகையில் வருகிறதே. இதற்கு என்ன பொருள்? —கு.சாந்தப்பன், கோதுர்க்கம்.**

தொழிற் சாலை அல்லது ஒரு நிறுவனத்தின் முதலாளிகள் தொழிற்சாலையைத் தாங்களே மூடிவிடும் நிலையைத் தான் 'லாக் அவுட்' என்று குறிப்பிடுகிறார்கள்.

*** டிரான்ஸிஸ்டரை யார் கண்டு பிடித்தார்கள்? கண்டு பிடித்த ஆண்டையும் குறிப்பிடுங்கள்? — முகம்மது சு. அகமத் பாட்சா, விளாத்தி குளம்.**

டிரான்ஸிஸ்டரைக் கண்டு பிடித்த பெருமை பார்டீன், ஷாக்லி, பிராட்டைன் ஆகிய மூன்று அமெரிக்கர்களைச் சேரும். கண்டுபிடித்த ஆண்டு 1948.



சீண்ட முடுக்கு வெடிக்குமா?

*** பெட்ரோலின் விலை இத்தனை அதிகமாக இருக்கும்போது ஏன் நீராவியைக் கொண்டு கார், மோட்டார் சைக்கிள்களை இயக்க முயற்சிக்கக் கூடாது? —து. பூர்ணிமா, வல்லக் கோட்டை.**

நீராவியைக் கொண்டு காரை ஓட்டலாம் என்பதை 1769 ஆம்

ஆண்டிலேயே நிக் கோலஸ் குனாட் என்ற அமெரிக்கர் செய்து காட்டினார். ஆனால் இதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள், கொதிகலன் அளவு போன்றவை காரணமாக இது கைவிடப்பட்டது.

*** எண்ணெயில் இடப்படும் சீடை, முறுக்கு வெடிக்குமா? எங்கள் வீட்டில் சீடை, முறுக்கு பண்ணினால், பாட்டி இப்படிக் கூறிப் பயப் படுத்துகிறாளே? —வி.ராமசுப்ர மணியன், திருத்தணி.**

சீடை, முறுக்கை செய்கையில் மேலே உலர்ந்து உள்ளே காயாது விட்டு, எண்ணெயில் போட்டால் வெடிக்கும். உள்ளே உள்ள காயாத கெட்டி ஈர மாவு பொரிந்து வெப்பத்தால் விரியும் போது ஈரத்தை ஒரே மூச்சில் பலவந்தமாக வெளியே தள்ளுகிறது. இதன் வெளிப்பாடுதான் சத்தமும், எண்ணெய்ச் சிதறலும். ஈரம் காயாத வாணலியில் எண்ணெயை விட்டுக் காய வைத்தால் அது படபடவென்று சில நிமிடங்கள் சத்தமிட்டு அடங்குவதில்லையா? ஈரம் துளி துளியாக இருப்பதால் 'படபட' சத்தத்தோடு எண்ணெயின் வெப்பம் சிறிது சிறிதாக அதை வெளியே தள்ளுகிறது.



சீடையில், உள்ளுக்குள் ஈரம் கெட்டியாகத் திரட்டி வைக்கப்பட்டுள்ளதால், ஒரே மூச்சில் அது வெளியே தள்ளப்படுகிறது. மாவில் கெட்டியான சிறுசிறு கல் இருந்தாலும் எண்ணெயில் இட்டதும் வெடிக்கும். கல், வெப்பத்தால் பொரிந்து விரிந்து சிதறும் போது ஏற்படும் விளைவே இது.

*** படங்களில், பாராசூட்டின் நடுவே ஓட்டை காணப்படுகிறதே! இது ஏன்? —மா.வெங்கிடரமணன், திருப்பூர்.**

மனித உடம்பின் எடை கீழே இழுக்கப்படுவதால் பாராசூட் காற்றில் மிதந்தபடி கீழே இறங்குகிறது. இதை Balance செய்ய பாராசூட் குடை விரிந்து காற்றில் ஊசலாடுகிறது. காற்றின் ஓட்டமும் அழுத்தமும் ஒரே சீராகவா இருக்கிறது? அதை சீராக வைத்தால்தான், அதிர்ச்சி இன்றி பத்திரமாகக் கீழே இறங்க முடியும். அதற்காகவே பாராசூட் குடையில் ஓட்டை போடுகிறார்கள். அதிக அழுத்தமுள்ள காற்று அந்த ஓட்டை வழியே வெளியேறி விடும். இந்த ஓட்டை இல்லாவிட்டால் பாராசூட்டின் இறங்கு வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாது.

அப்பா, பாடம் சொல்லித் தருவாரா?



* பூர்ணிமா தேவி

* எஸ். அருண்


குழந்தைகளுக்குக் கதைகள் கூறிப் பாட்டிகள் மகிழ்வித்த காலம் மலையேறிப் போய்விட்டது. குழந்தைகளின் கல்வியில் அப்பாக்கள் சொல்லிக் கொடுக்கும் வழக்கமும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருகிறது.

கல்வி என்பது, பள்ளியில் ஆசிரியரால் மட்டுமே கற்பிக்கப்பட வேண்டியது; பெற்றோருக்கு அதில் பங்கு இல்லை என்ற நினைப்பு ஒரு காரணம். அப்பாவுக்கோ, அம்மாவுக்கோ நேரமில்லை என்பது மற்றொரு காரணம்.

பொறுப்புணர்வோடு ஆசிரியர்கள் கற்பிக்கும் முறையும் பல காரணங்களால் குறைந்து கொண்டே வருகிறது. பாடம் சரியாகப் புரியாததால் கல்வி மீது வெறுப்பு உணர்வு எற்பட்டு விடுகிறது. இவையெல்லாம் இன்றைய குழந்தைகளை நேரடியாகப் பாதித்து வரும் உண்மைகள். வீட்டில் தங்களுக்குப் பெற்றோர் பாடம் சொல்லித் தருகிறார்களா என்பதை இங்கே சில சிறுவர் சிறுமியர் கூறுகிறார்கள்.

புரியாட்டா விளக்கமா சொல்லித் தருவாங்க
- எஸ். அருண்

நான் பாலலோக் மெட்ரிக்குலேஷன் பள்ளியில் ஐந்தாம் வகுப்புப் படிக்கிறேன். எனக்கு அப்பா இல்லை. அதனால், என்னைப் பற்றி அனுதாபத்தோடு எல்லோரும் பார்க்கிறாங்க. என் மேல் தனி அக்கறை காட்டறாங்க. எங்க வீட்டில் அம்மா, தாத்தா, பாட்டி, சித்தி எல்லோரும் இருக்காங்க. நான் வீட்டுக்கு வந்ததும் என்ன பண்றேன்னு இவங்க எல்லோரும் கவனிச்சுக்கிட்டே இருக்காங்க. எங்க



• சதீஷ்பாபு

• அருண்

என்ன சொல்லித் தந்தாங்கன்னு அம்மா கேட்பாங்க - வினோதினி.

தாய் சத்தியா பள்ளில நான் ஐந்தாம் வகுப்புப் படிக்கிறேன். எங்க அப்பா கடை வைச்சிருக்கார். அதுனால அவர் வீட்டுக்குத் திரும்பவே ரொம்ப நேரமாயிடும். அதுக்கு மேல அவர்கிட்ட கேட்டுத் தெரிஞ்சுக்க நேரம் இல்லையே? அம்மாவுக்கு பாவம் வீட்டு வேலையே சரியாக இருக்கும். ஆனால், வீட்டுக்கு வந்ததும் அம்மாதான், பள்ளிக் கூடத்துலே என்ன பண்ணினே? மிஸ் சொல்லித் தந்தது எல்லாம் உனக்குப் புரிஞ்சுதான்னு கேட்பாங்க. எங்க மிஸ்ஸே ரொம்ப நல்லா கிளாஸ் எடுப்பாங்க. பலமுறை கேட்டு எல்லாருக்கும் புரிஞ்சுதான்னு கேட்பாங்க. அதனால புரியலேங்கறதுக்கே சான்ஸ் இல்லே. இருந்தாலும், அம்மாவுக்கும் அப்பாவுக்கும் பயம். அதனால எனக்கு டியூஷன் வைச்சிருக்காங்க. பள்ளிக் கூடத்துக்குப் போக முடியாம இருந்து, பாடங்கள் அதிகமா நடந்து, எனக்கும் புரியாம போச்சின்னாதான் டியூஷன் டீச்சர்கிட்ட கேட்பேன். ஆனா, எனக்கு தினமும் பாடம் சொல்லித் தர முடியலையேன்னு எங்கப்பாவுக்கு வருத்தம்தான்.

- பழ. வினோதினி.

சித்தி பெரிய படிப்பு படிச்சிருக்காங்க. அதுனால, எந்த சந்தேகம் வந்தாலும் அவங்ககிட்ட தான் கேட்பேன். பள்ளிக் கூடத்துல என்ன பண்ணினேன்னு வீட்டுக்கு வந்ததும் யாராவது கேட்பாங்க. எந்தப் பசங்களோடயாவது சண்டை போட்டாக் கூடத் தெரிஞ்சுடும். சித்திதான் தினமும் என் கூட உட்கார்ந்து நான் எப்படிப் புரிஞ்சுக்கிட்டேன்னு செக் பண்ணி, புரியாட்டா விளக்கமா சொல்லித் தருவாங்க. விளக்கறதைக் கவனிக்காம பராக் பார்த்தா அடிக்கக்கூட அடிப்பாங்க. அடிவாங்கினதும் கொஞ்ச நேரம் கஷ்டமா இருக்கும். அப்புறம் நம்ம நல்லதுக்குத் தானே இத்தனையும்னு இருந்திடுவேன். எனக்கு அப்பா இல்லேன்னா என்ன? வீட்டுல இருக்கிற வங்க எல்லாரும் நான் எப்படிப் படிக்கறேன்னு கவனிச்சு புரியா ததை எல்லாம் விளக்கி சொல்லித் தராங்களே? இன்னொரு சமாசாரம். வகுப்புல நடத்தறது புரியலேன்னாத் தானே இத்தனையும்? எங்க டீச்சர்தான் நல்லாப் புரியும்படி, ஒரு தடவைக்குப் பத்து தடவை சொல்லித் தராங்களே? அப்புறம் என்ன?

- எஸ். அருண்

அம்மா கிட்ட தப்பிக்க முடியாது! - சதீஷ் பாபு.

விருகம்பாக்கத்தில் இருக்கிற சத்யா பள்ளில நான் எட்டாவது படிக்கிறேன். எங்கப்பா அம்மா ரெண்டு பேருமே வேலை பண்றாங்க. அப்பாவுக்கு ஆபீசுலேருந்து வீடு திரும்பவே நேரமாயிடும். அதுக்கப்புறம் அவர் எப்படிப் பாடம் சொல்லித் தர முடியும்? எனக்கே

பார்த்தா பாவமா இருக்கும். ஆனாலும் எங்கம்மா டீச்சர். அதனால அவங்க கிட்டயே எந்த சந்தேகம் வந்தாலும் கேட்டுப்பேன். டி.வி. பார்க்கனுமேன்னு புரிஞ்ச மாதிரி தலையை ஆட்டினால் தப்பிக்க முடியாது. நான் சும்மா சொல்றேனா, இல்லே நிஜமா சொல்றேனான்னு அம்மா கண்டு புடிச்சுடுவாங்க. அம்மா கிட்டேருந்து தப்பிச்சுக்க முடியாது. ஆனாலும் அம்மாவுக்கு பயம். அதனால எனக்கு தனியா டியூஷன் வைச்சிருக்காங்க. பள்ளிலயும் ஆசிரியர் தனி அக்கறை காட்டி எங்களுக்குப் பாடம் சொல்லித் தராங்க. அதனால புரியாம பேச்சுன்னாங்கறதுக்கே இடமில்லே. உடம்பு சரியில்லாம மட்டம் போட்டு பாடம் போச்சுன்னாத்தான் கஷ்டம். ஆனா அதுக்கும் ஆசிரியர் உதவி பண்றார். போதாததற்கு டியூஷன் மிஸ் வேற இருக்காங்க. அப்பாவால் நமக்குப் பாடம் சொல்லித்தர முடியலையேன்னு நான் வருத்தப் பட்டதே இல்லே. மத்தவங்கதான் சேர்த்து வைச்சு கவனிச்சுக்கறாங்களே? அப்புறம் என்ன?

- டி. சதீஷ் பாபு.

எங்கம்மா தினமும் கேட்பாங்க.
- பூர்ணிமா தேவி.

விருகம்பாக்கத்துல இருக்கற ஏ.வி.எம். மெட்ரிக் பள்ளில நான் ஏழாம் வகுப்புப் படிக்கிறேன். நானே விடாம ரொம்ப கஷ்டப்பட்டு கவனமா படிப்பேன். அதோட எங்க பள்ளிலயும் ஆசிரியர் ரொம்ப நல்லா பாடம் எடுப்பார். எத்தனை தடவை சந்தேகம் கேட்டாலும் முகம் சுளிக்காம சொல்லி விளக்குவார். எங்கப்பா போலீஸ் டிபார்ட்மெண்ட்லே வேலை பார்க்கிறார். போலீஸ் டிபார்ட்மென்ட்டுன்னா வேலை எப்படி இருக்கும்னு உங்களுக்கே தெரியுமே? குறிப்பிட்ட நேரத்தில் போய், குறிப்பிட்ட நேரத்தில் வரதுங்கறது முடியாது. அதனால எங்கப்பாவால எனக்கு தினமும் பாடம் சொல்லித் தர முடியாது. அம்மாவுக்கு வீட்டுல பொறுப்பு ஜாஸ்தி. ஆனால் இங்கே ஊர்ல இருக்கும்போது எங்கப்பா கண்டிப்பாக என்னைக் கூட்டி வைச்சு சொல்லித் தருவார். என்னவெல்லாம் புதுப்பாடம் எடுத்தாங்க. எனக்கு அதெல்லாம் புரியுதான்னு கேட்டுப்பாரு. எங்கம்மாவும் தினமும் கேட்பாங்க. புரியலைன்னா பொறுமையா சொல்லித் தருவாங்க. அதோட கூட எனக்கு டியூஷன் வேற வைச்சிருக்காங்க. அப்புறம் என்ன? அம்மாவாலயோ, அப்பாவாலயோ சொல்லித் தர முடியலேன்னா மத்தவங்கதான் சொல்லித் தறாங்களே?

- நா. பூர்ணிமா தேவி.



• சரஸ்வதி • வினோதினி • ரத்தினப்ரியா

சலிக்காம சொல்லித் தருவார்! - ரத்தினப் பிரியா

நான் பால்ட்வின் பள்ளில எட்டாவது படிக்கிறேன். எங்கப்பா தொழில் பண்றார். அதனால ஊர்ல இருக்கறதே கஷ்டம். அம்மாவும் ஆபீசுக்குப் போறவங்க. அதுனால வீட்டுல பொறுப்பு அதிகம். ஆனால் ஊர்ல இருக்கறபோது அப்பா என்னுடைய கல்வியைப் பற்றிக் கேட்பார். என்ன புதுப்பாடம் எடுத்தாங்க; புரியுதா; அடுத்தாப்போல என்ன எடுக்கப் போறாங்கன்னு எல்லாம் விசாரிப்பார். இங்கே இருந்தாலும் தினமும் இரவில் கூப்பிட்டுக் கேட்பார். அசைன்மென்ட் நோட்டையெல்லாம் கொண்டு வரச் சொல்லிப் பார்ப்பார். அவசியமானால் திருத்துவார். சில சமயம் மொத்தமா எனக்கு சேர்த்து வைச்சு சொல்லிக் கொடுக்கும்படி இருக்கும். கொஞ்சம் கூட சலிக்காம சொல்லித் தருவார். ஆனாலும் எங்க பள்ளியிலயே, ரொம்ப நல்லா சொல்லித்தறாங்க. கவனிக்காம இருக்கவோ, புரியாம இருக்கவோ சான்சே இல்லே. இத்தனை பேரும் மாத்தி மாத்தி புடிச்சுக்கறதுனாலேயும், எனக்கும் ஆர்வம் இருக்கிறதனாலேயும் நான் நல்லா படிக்கிறேன். இரண்டாவது ரேங்க்ல இருக்கிறேன்.

- எஸ். ரத்தினப்ப்ரியா.

டி.வில நல்ல படம் இருக்கும் விடமாட்டார்! - அருண் குமார்.

நான் நாலாவது வகுப்புல படிக்கிறேன். ஏவிஎம் பள்ளியில்தான். எங்க பள்ளிக்கூடத்துலேயே நல்லா சொல்லித் தருவாங்க. எங்க அப்பா பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் வேலை பார்க்கிறார். தினமும் என்னுடைய பள்ளி சமாசாரத்தைக் கேட்கவோ, பாடம் சொல்லித்தரவோ அவருக்கு நேரம் இருக்காது. ஆனால், ஞாயிற்றுக் கிழமைகளிலும் மற்ற லீவு நாட்களிலும் என்னை உட்கார்த்தி வைச்சு, அதுவரை நடந்த பாடங்கள், கேள்விகள், நான் புரிஞ்சுக்கிட்ட விதம் எல்லாத்தையும் கேட்பார். தப்பிச்சுக்க முடியாது. நல்ல படம் டி.வில இருக்கும். இருந்தாலும் விடமாட்டார். எனக்கு முதல்ல ரொம்ப கஷ்டமா இருந்தது. அப்புறம் யோசிச்சேன். எங்கப்பா வாரம் முழுக்க ஓய்வில்லாம கடுமையா உழைக்கிறார். கிடைச்சிருக்கும் விடுமுறையைக் கூட பொழுது போக்கிக் கழிக்காம எனக்கு சொல்லித் தராரே! இது எத்தனை பெரிய காரியம்னு தோணித்து. அதுக்கு அப்புறம் எனக்கு டீ.வியை விடறது பெரிய குறையாவே தோணலே. இத்தனையும் அப்பா எனக்காகத்தானே பண்றார்? அப்பாவால் முடியலேன்னா அம்மா சொல்லித் தருவாங்க. இதையெல்லாம் பார்க்கும் போது நான் அதிஷ்டசாலிதானே?

- ச. அருண் குமார்.

தினமும் பாடம் சொல்லித் தருவார். - சரஸ்வதி.


பால்டுவின் மெட்ரிக் ஸ்கூல்ல நான் எட்டாவது படிக்கிறேன். பள்ளிக்கூடத்துல மிஸ்ஸே ரொம்ப நல்லா பாடம் சொல்லித் தருவாங்க. அவங்க கிட்ட சந்தேகம் கேட்டால் கண்டிப்பா எத்தனை தடவை வேணுமானாலும் சொல்லி விளங்க வைப்பாங்க. அப்படியும் சந்தேகம் போகலைன்னா, முதல்ல சொல்லித்தறதை படிக்காத கேஸ்தான். படிச்சத்தானே புரியும்? எங்க அப்பா இப்போ பீகார்ல இருக்கார். அங்கே மாத்தியிருக்கு. இங்கே இருந்தவரை தினமும் இரவில் எனக்குப் பாடம் சொல்லித் தருவார். நோட்டையெல்லாம் வாங்கி, எப்படி எழுதியிருக்கிறேன்னு பார்த்து இன்னும் சிறப்பா எழுத யோசனை சொல்லுவார். அவர் முயற்சியாலதான் படிப்பில் எனக்குத் தனியான ஆர்வம் ஏற்பட்டது. அப்பா இங்கே இல்லாதது எனக்குக் கஷ்டமாத்தான் இருக்கு. அதுனால உடனுக்குடன் பாடங்களைப் படிச்சு மிஸ்கிட்டே சந்தேகங்களைக் கேட்டுப்பேன். ஆனாலும் அப்பா ஊரில் இருந்து இங்கே வந்தால் சேர்த்து வைத்து சொல்லித் தருவார். அப்பா சொல்லிக் கொடுத்து பாடம் படிக்கிறது என்பது பெரிய பெருமைதான் என்பது என் கருத்து.

- வீ.ரா. சரஸ்வதி.

பேட்டி ஏற்பாடு : **பத்மா.**

அட்டையில் **எஸ். ராஜகோபாலன் & சிறுமி ரஞ்சிதா.**

வண்ணப்படம் & புகைப்படங்கள் :
காமிரா திருஞானம்




(A)

துணியால் ஆன ரோஜா

படத்தில் காணும் அழகிய ரோஜாவைப் பாருங்கள். இதை நீங்களே செய்யலாம்.

தேவைப்படும் பொருள்கள் :

1. கஞ்சி போட்டு சலவை செய்யப் பட்ட வண்ணத் துணி அல்லது கடையில் விற்கும் மொரமொரப்பான ஆர்கண்டி துணி. முதலில் அரை மீட்டர் வாங்கிக் கொள்ளுங்கள். பச்சை வண்ணம் வேண்டாம். ரோஸ், சிவப்பு, மஞ்சள் பொருத்தமானது.
2. மெல்லிய கம்பிகள்
3. நூல்
4. பெவிக்கால்
5. கத்தரிக்கோல்



(B)

செய்யும் முறை :

• முதலில் B படத்தில் உள்ள அளவை, டிரேஸ் பண்ணி, துணியில் வரைந்து வெட்டி எடுத்துக் கொள்ளவும். இப்படி எட்டு.

• B படத்தில் காட்டியபடி இவைகளை மூன்று மடிப்புகள் மடித்து எடுத்துக் கொள்ளவும்.

• மடித்த பிறகு C படத்தில் காட்டிய படி வரும். இதுதான் ரோஜா மலரின்

The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication : Madras
2. Periodicity of Publication : Monthly
3. Name of Printer : V. Murali
   Nationality : Indian
   Address : AA-117, Shanthi Colony, Anna Nagar, Madras - 600 040.
4. Name of Publisher : V. Murali
   Nationality : Indian
   Address : AA-117, Shanthi Colony, Anna Nagar, Madras - 600 040.
5. Name of Editor : K. Rajendran
   Nationality : Indian
   Address : 1, 5th Street, Lake Area, Nungambakkam, Madras - 600 034.

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital : **Bharathan Publications Private Limited, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Madras - 600 097.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.1995

V. Murali
Publisher




நிஜத்தின் நிலை...

அமெரிக்காவில் ஒருமுறை சார்லி சாப்ளினைப் போல நடிப்பவர்களுக்கு பரிசு என்று ஒரு போட்டி நடந்தது. அதில் நிஜ சார்லியும் கலந்து கொண்டார். அவர் போட்டியில் கலந்து கொண்டது இரகசியமாக வைக்கப்பட்டது. கடைசியில் என்ன ஆயிற்று தெரியுமா? நிஜமான சாப்ளினுக்கு போட்டியில் இரண்டாவது பரிசு தான் கிடைத்தது!

பாவம் உண்மையான சார்லி!

- ஜெயஸ்ரீ ராஜகுமார்

C




இதழ்களாக அமையும் பகுதி.

• கம்பியைத் தேவையான அளவு வெட்டிக் கொண்டு, நுனியில் அதே துணியைக் கொண்டு பெவிகால் தடவி, தீக்குச்சி நுனி அளவுக்கு சுற்றி முடிச்சுப் போட்டுக் கொள்ளவும். இது மலரின் நடுவே அமையும் பகுதி. இதை மொட்டுப் போலவும் செய்து கொள்ளலாம்.

• வெட்டி மடிக்கப்பட்ட இதழ்களை ஒவ்வொன்றாக மொட்டைச் சுற்றி கம்பியோடு நூலால் சுற்ற வேண்டும். மொத்தமாக வைத்துச் சுற்றக் கூடாது. இதை அடுக்கடுக்காக வைப்பதில்தான் உங்கள்

D



திறமை இருக்கிறது. முதலிலேயே சரியாக வரும் என்று எதிர்பார்க்க முடியாது. பழகப் பழக சரியாகி விடும்.

• ஒரு மலருக்கு எட்டு இதழ்கள் அழகாக இருக்கும். இந்த எண்ணிக்கையைக் குறைக்க வேண்டாம். அதிகமாக்கலாம்.

• எத்தனை பெரிதாக வேண்டுமானாலும் இதைச் செய்யலாம். துணியை அதற்கு ஏற்பக் கத்தரித்துக் கொள்ள வேண்டும்.

• இதை எங்கே வைத்தாலும் அந்த இடம் மேலும் அழகாகி உங்கள் கைத்திறமையைக் கூறும்!


- கே. குப்புராஜ்

ஒருநாள் மட்டும்...

வி. ஏ. சுப்பையன்

ஓர் ஊரில் சனீஸ்வர பக்தன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் அய்யாவு. அவன் அன்றாடம் சனீஸ்வரனுக்கு எள் தீபமேற்றி பயபக்தியுடன் வணங்கி வந்தான்.

உலகத்தில் பிறந்த அத்தனை ஜீவராசிகளையும் ஒருநாளாவது பிடித்து ஆட்டி வைக்க வேண்டும் என்பதுதானே சனீஸ்வரனின் கடமை? அதன்படி சனிபகவான் இந்த உலகத்தில் இருக்கும் அத்தனை பேரையும் ஒரு கை பார்த்தாயிற்று. இனி, அவருடைய பக்தன் அய்யாவு ஒருவன்தான் பாக்கி.



தன்னையே நம்பிக்கையுடன் வணங்கி வரும் தன்னுடைய பக்தனை எப்படிப் பிடிப்பது என்று சனீஸ்வரன் தயங்கினார். இருந்தாலும் அவருக்கு விதிக்கப்பட்ட கடமைப்படி பக்தனானாலும் அவனையும் பிடித்துத்தானே ஆக வேண்டும்? அதனால், மிகுந்த தயக்கத்துடன் மனதே இல்லாமல் தன் பக்தன் அய்யாவையும் பிடிக்க வந்தார் சனீஸ்வரன்.

அப்பொழுது இரவு நேரம். அய்யாவு நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான். அவனது கனவில் சனீஸ்வரன் தோன்றினார். "பக்தனே... நீ என்னையே வணங்குகிறவன். ஆனாலும் என் கடமையிலிருந்து நான் விலகக் கூடாது அல்லவா? உன்னையும் ஒருநாள் பிடித்தே ஆக வேண்டும். அதுதான் எனக்கு விதிக்கப்பட்டுள்ள கடமை. அதனால், நாளை இரவு ஒரு நாள் மட்டும் உன்னைப் பிடித்து விட்டுப் போய் விடுகிறேன். நான் சொல்கிறபடி நீ செய்" என்றார் சனீஸ்வரன்.

தான் அன்றாடம் வணங்கித் தொழும் சனீஸ்வரப் பெருமானே தன்னுடைய கனவில் தோன்றியதால்



பெரிதும் மனம் மகிழ்ந்த அய்யாவு, "பெருமானே, நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள். காத்திருக்கிறேன்" என்று கேட்டான்.

"நாளை இரவு உன் மனைவியை வீட்டுக்குள் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு உறங்கச் சொல்லி விட்டு, நீ வாசலில் படுத்துக் கொள்ள வேண்டும். நீ என்ன சத்தம் போட்டாலும் கதவைத் திறக்க வேண்டாமென உன் மனைவியிடம் சொல்லி விடு" என்றார் சனீஸ்வரன்.

"சரி"யென்று ஒப்புக் கொண்டான் அய்யாவு. அதே போல் அடுத்த நாளிரவு தன் மனைவியிடம் உள்ளே தாழ்ப்பாள் போட்டுக் கொள்ளச் சொல்லி விட்டு வாசலில் படுத்துக் கொண்டான்.

நடுச் சாமம். நன்றாக அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த போது அய்யாவுக்குத் தாகமெடுத்தது. எழுந்து கதவைத் தட்டி மனைவியைக் கூப்பிட்டான். அவள் கதவைத் திறந்தால்தானே? என்ன அழைத்தாலும் திறக்கக் கூடாது என்றுதானே உத்தரவு?

அய்யாவுக்கு நிமிடத்துக்கு நிமிடம் தாகம் அதிகமாகிக் கொண்டே வந்தது. என்ன செய்வது என்றே புரியவில்லை. தண்ணீர் குடிக்காவிட்டால் உயிரே போய் விடும் போலிருந்தது.

அப்போது அய்யாவுக்கு திடீரென ஒரு யோசனை தோன்றியது. பக்கத்துப் பண்ணையார் தோட்டத்தில் தொட்டி நிறையத் தண்ணீர் நிரப்பி வைத்திருப்பார்கள். அங்கே போனால் வேண்டிய அளவு எடுத்துக் குடித்து விட்டு வரலாம்.

நடுச் சாமமாகி விட்டதால் நேராகப் போக முடியாது. நாய்கள் கடித்துக் குதறி விடும். அதனால், 'வேலிக்குள் புகுந்து பின்பக்க வழியாகப் போகலாம்' என்று நினைத்துப் பக்கத்துத் தோட்டத்திற்கு ஓடினான் அய்யாவு.

அவசரம் அவசரமாக வேலியை விலக்கி உள்ளே புகுந்த அய்யாவு, நீர் நிறைந்த தொட்டியை நோக்கி ஓடினான். தொட்டியை அடைந்து ஆவலுடன் நீரைக் கைகளில் அள்ளினான். அப்போது பார்த்துத்தானா அந்த நாய் அவனை மோப்பம் பிடிக்க வேண்டும்?

"வள்... வள்" என்று

பயங்கரமாகக் குரைத்துக் கொண்டு அவன் மேல் பாய்ந்தது பிடாரி போன்றிருந்த நாய்.

"ஐயோ" என்று அலறிக் கொண்டே ஓட யத்தனித்தான் அய்யாவு. அதற்குள், சத்தம் கேட்டுக் கையில் தடியுடன் அங்கே ஓடி வந்தான் காவல்காரன். "அட திருட்டுப் பயலே! இத்தனை நாள் எனக்கு 'டிமிக்கி' குடுத்திட்டிருந்தியே? இன்னிக்கு வசமா சிக்கினியா?" என்று அவன் கோபத்துடன் திட்டிக் கொண்டே, கைத்தடியால் அய்யாவுவை நையப் புடைத்தான்.

சத்தம் போடக் கூடத் தெம்பு இல்லாமல் மயங்கி விட்டான் அய்யாவு. அவனை இழுத்துக் கொண்டு போய் ஒரு மரத்தில் கட்டி வைத்த காவல்காரன், உடனடியாகப் பண்ணையாருக்குச் செய்தியனுப்பினான்.

பொழுது விடிந்தபின், திருடனைப் பார்க்க ஆவலுடன் வந்தார் பண்ணையார். வந்து பார்த்தால் அவருக்கு நன்கு பழக்கப்பட்ட பக்கத்து விட்டு நண்பர் அய்யாவு!

காவல்காரன் புதிதாக வந்தவன். அதோடு இருட்டில் அடையாளம் வேறு தெரியவில்லை. அறியாமல் தவறு செய்து விட்டதாக அவன் அய்யாவுவிடம் மன்னிப்புக் கேட்டான். அய்யாவுவின் கட்டுகளை அவிழ்த்து விட்டு, முகத்தில் நீரைத் தெளித்து மயக்கம் தெளிவித்து "என்ன நடந்தது?" என்று கேட்டார் பண்ணையார்.

அய்யாவு, தன் கனவில் சனீஸ்வரன் தோன்றிக் கூறியதையும் அதனால் தனக்கு ஏற்பட்ட விளைவையும் கூறினான்.

ஒருநாள் இரவு பிடித்ததற்கே மனிதனுக்கு இப்படிப்பட்ட துன்பம் வருகிறதே! வருடம் முழுவதும் சனீஸ்வரன் பிடித்தால், அவர்கள் என்ன கஷ்டப்படுவார்கள்?" என்று பயத்துடன் வியந்தார் பண்ணையார்.



விடுதலையைத் தள்ளிப்போச் சொன்னவர்!



சிறையில் அடைபட்டிருக்கும் கைதிகள், தாங்கள் விடுதலை பெறும் தினத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பதுதானே வழக்கம்? ஆனால், 'உங்களுக்கு இன்று விடுதலை' என்று சொன்னதும், விடுதலையைச் சில நாட்கள் தள்ளிப் போடும்படி சிறையதிகாரியைக் கேட்டுக் கொண்ட ஒரு விசித்திரக் கைதியும் இருந்தார்.

அது எரவாடா என்னும் இடத்தில் உள்ள சிறைச்சாலை. அதில் கைதியாக இருந்தவர் ஒரு பெரும் தலைவர். அவர் பிரபலமான பெண்மணியும் ஆவார். நாடு விடுதலை பெறுவதற்காக காந்தியடிகளுடன் சேர்ந்து போராடியதற்காக அந்தத் தொண்டர் சிறைத் தண்டனை பெற்றிருந்தார்.

சிறையில் வசித்தபோது, அந்தக் கைதி அங்கே செடிகளை வளர்த்தார். காலையில் அந்தச் செடிகளின் முகத்தில் தான் கண்விழிப்பார். தினமும் தம் கையாலேயே அவைகளுக்கு நீர் ஊற்றி வந்தார் அவர்.

செடிகள் அரும்பு விட்டுப் பூக்கள் மலர்வதைக் காணவேண்டுமென்ற பேராவல் அவருக்கு இருந்தது.

அன்று அவருக்கு விடுதலை நாள். சிறையதிகாரி அவரைப் பார்த்து, "உங்கள் தண்டனைக் காலம் முடிந்தது. இன்று நீங்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்படப் போகிறீர்கள்'' என்ற செய்தியைத் தெரிவித்தார்.

கைதி மகிழ்ச்சியால் உடனே பூரித்துவிடவில்லை. அவரது விழிகள் செடிகளைப் பார்த்தன. அடுத்து சிறையதிகாரியை நோக்கின.

"என் சிறைத் தண்டனையை, தயவு செய்து இன்னும் சில நாட்கள் நீடிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

"ஏன் அம்மா அப்படி ஆசைப்படுகிறீர்கள்!" சிறையதிகாரி வினவினார் வியப்புடன்.

"இதோ, இவை நான் குழந்தையைப் போல வளர்த்த செடிகள். அவைகள் பூப் பூப்பதைப் பார்த்த பிறகு விடுதலை அடைய விரும்புகிறேன். அதுவரையில் நான் இங்கே இருக்க நீங்கள் அனுமதிப்பீர்களா?"

"என்ன அதிசயம்! விடுதலை கிடைக்கும் நாளை ஏங்கி எதிர்பார்க்கும் கைதிகளிலே நீங்கள் வித்தியாசமானவர், அம்மா!" என்றார் சிறையதிகாரி.


இந்தியாவின் கவிக்குயில் என்று புகழப் பெற்றவரான சரோஜினி நாயுடு அவர்களே அந்தத் தலைவி!

- புவனை கலைச்செழியன்

அரியணையில் வீற்றிருந்தார் அரசர். அது அந்த ஈக்குத் தெரிந்ததா? இல்லையே! அவர் மூக்கின் நுனியில் போய் அமர்ந்தது. தன் பின்னங்கால்களை ஒன்றை ஒன்று தேய்த்துக் கொண்டது. சிறகுகளை நீவிக் கொண்டது. சரி அதற்குப் பிறகாவது அப்படியே வாளா இருக்கக் கூடாதா?

அது அரசரின் மூக்கைச் சுவைத்துப் பார்க்கலாமே என்று எண்ணியது. எண்ணியதைச் செயல் படுத்தவும் துவங்கியது. தன் குத்தூசி போன்ற உறுப்பால் மூக்கைத் தடவிப் பார்த்தது. அது குத்தித் துளைக்க மிருதுவான இடத்தைத் தேட வேண்டும் அல்லவா?

அப்போது மூக்கில் குறு குறு என்று ஏதோ அரிக்கிறதே என்று அரசர் உணர்ந்து ஒன்றரைக் கண்ணால் மூக்கின் நுனியைப் பார்த்தார்.



ஈக்கு ஃ!

ஈ!

அரசரால் அப்படி உடனே ஈயை ஓட்டிக் கொண்டிருக்க முடியுமா? வெண் சாமரம் வீசுகிறவர்களை ஓரக் கண்ணால் பார்த்தார்.

இரண்டு பயல்களும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். ஒடிந்து தொங்கியது போல கழுத்து சாய்ந்து, தலை தோளின் மேல் கிடந்தது இருவருக்குமே!

வந்ததே கோபம் அரசருக்கு.

வாளை உருவினார். ஒரு போடு போட்டார்.

ஆனால் வெட்டுப் பட்டவன் சாகவில்லை. அரசரின் வாள்தான் துண்டு துண்டாகப் போய்க் கீழே விழுந்தது!

இதற்குள் அடுத்தவன் அலறிப் புடைத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தான்.

"அப்பா அப்பா, நான் தானப்பா நீங்கள் அவைக்கு வருமுன்னே உங்கள் வாள் உறையில் அட்டைக் கத்தியை மாற்றி வைத்தேன்" என்றான் குட்டி அரசகுமாரன்.

"ஏன்டா அப்படிச் செய்தாய்?" என்றார் அரசர்.

"கொல்லக் கூடாது. கொல்வது பாவம்."

"யாரடா, சொன்னார்?"


"தங்களுக்கும் இப்போது எனக்கும் குருவானவர்தானப்பா."

ஏனோ அரசருக்கு இன்னும் சினம் ஏறியது.

"அழைத்து வா குருவை" என்று ஒரு வீரனை அனுப்பினார். அரசர்.

'கொல்வது கூடாது, கொல்வது பாவம்' என்று கூறுவதே சட்ட விரோ

அழகி



நம் என்று எண்ணினார் அரசர். அந்த நாட்டின் சட்டங்களை மாற்ற முடியா மலும் திருத்த முடியாமலும் கல்லியே எழுதச் செய்து விட்டவர் அந்த அதிசய அரசர்.

ஒருவன் மற்றவன் கண்ணைக் குத்தி விட்டால் அந்நாட்டுச் சட்டப்படி அவ் வாறு செய்தவனின் கண்ணைக் குத்திப் பார்வை போகச் செய்து விடுவார்கள். 'கண்ணுக்குக் கண், கைக்குக் கை, காலுக்குக் கால்'- இப்படி பதிலுக்குப் பதில் சட்டங்கள்: 'பழிவாங்கும் சட்டங் கள்!

இப்படி அரசர் தாம் இட்ட சட்டங் களின் மகத்துவத்தை எண்ணிக் கொண் டிருந்தபோது குரு வந்தார்.

அவரை அமரக் கூடச் சொல்லாமல் அரசர் கேட்டார் இப்படி:

"குருவே, கொல்லக் கூடாது என்றீர் களாமே? நம் சட்டங்கள் என்ன ஆவது?"

குரு அமைதியாக சற்று நேரம் சுற்றுப் புறத்தை ஆராய்ந்தார்.

வெண்சாமரம் வீசுகிறவர்களைக் காண வில்லை. குட்டி அரசகுமாரன் நழும்பிப் போய் நின்று கொண்டிருந் தான்.

"மன்னா! சற்று முன் என்ன நடந்தது என்று நான் தெரிந்து கொண்டால், நான் தங்கள் கேள்விக்கு எளிதில் விடை தர முடியும்" என்றார் குரு.

"கவரி வீசியவன் தவறு செய்தான். வெட்டிப் போடப் போனேன். உங்கள் மாணவன் குட்டி அரசகுமாரன் கொல் லக் கூடாது என்றான். சொன்னவர் யார் என்றேன். தாங்கள்தான் என்றான். இப்போது நீங்களே பதில் கூறுங்கள்: கொல்வது கூடாதா?" என்றார் அரசர்.

"அரசே, சாமரம் வீசியவன் தவறு செய்தான் என்று தாங்களே கூறினீர்கள். தவறுக்குக் குறைந்த தண்டனையே உண்டு - மன்னிக்கக் கூடச் செய்ய லாம். ஆனால் அவனை வெட்டிப் போடும் அளவுக்கு அவன் செய்த குற் றம் என்ன?"

குட்டி அரசகுமாரன் குடுகுடு என்று ஓடி குருவின் காதுகளில் ஏதோ சொன் னான்.

குரு மீண்டும் தொடர்ந்து கேட்டார்: "தாங்களிட்ட சட்டங்கள் என்ன கூறுகின்றன?

"கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்" என்றார் அரசர் நிமிர்ந்து பார்த்தபடியே.

"அரசே, மூக்கில் ஒட்டிய ஈயை ஓட்டத் தவறிய வெண் சாமரத் தூங்கு மூஞ்சி செய்தது குற்றம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அப்படியானால் தண்டனை என்ன?- தலையை வெட்டி எறிவதா?"

"ஆம்" என்றார் அரசர்.

"அது எப்படி அரசே? அவன் குற்றவாளி என்றால் நம் சட்டபடி வேண்டுமானால், ஒரு ஈயைப் பிடித்து அவன் மூக்குக்குள் விட்டு விடலாம்."

குட்டி அரச குமாரன் கைகொட்டிச் சிரித்தான். அவையில் வேறு எவரும் சிரிக்கவில்லை – துணிவில்லாததால்.

அரசர் குட்டி அரசகுமாரனை கோபமாகப் பார்த்து விட்டு குருவை இன்னும் கோபமாகப் பார்த்தார்.

"ஆம் அரசே. நம் சட்டப்படி, செய்ததற்கு அதே செயலைச் செய்வதுதானே முறை? ஒன்றிற்கு மற்றொன்றை எப்படிச் செய்ய நம் சட்டம் இடம் தரும்? இதை விளக்க வேண்டும் என்றால் வாசலிலேயே தங்கள் தீர்ப்புக்காக ஒரு வழக்கு வந்து காத்துக் கொண்டிருக்கிறது அரசே. வரும்போதே அதை அறிந்து கொண்டு வந்ததால்தான் கூறுகிறேன்."

"என்ன அது?- யாரங்கே? வாசலில் வந்துள்ள வழக்கு சம்பந்தப்பட்டவர்களை உடன் உள்ளே வரச் சொல்!"

-இப்படி அரசர் ஆணையிட்டதும் ஒரு வீரன் ஓடினான்.

விரைவில் கையில் விலங்கிட்ட ஒருவனை காவலர்கள் அரசன் முன் நிறுத்தினார்கள்.

"இவன் செய்தது என்ன?" என்றார் அரசர்.

"இவன் ஒருவனின் பல்லை உடைத்து விட்டான் அரசே."

"எத்தனை பற்கள்?"

"இரண்டே இரண்டை மட்டும் அரசே."

"அப்படியானால் இவன் இரண்டு பற்களைப் பிடுங்கி எறிய வேண்டியது



தானே- இதற்குமா என்னிடம் வரவேண்டும்?" என்று அரசர் அமைச்சரைப் பார்த்தார்.

"அரசே, இவனுக்கு உடைந்து எறிவதற்கு ஒருபல் கூட வாயில் இல்லையே- பல் எல்லாம் போன பொக்கை வாயன் அரசே இவன்!"

அரசர் விழித்தார்.

"அரசே, நான் ஒன்று கூறலாமா?" என்றார் குரு.

"கூறுங்கள் குருவே" என்றார் அரசர். அவர் கோபம் தணிந்து நிதானம் பெற்றிருந்தார்.

"அடடா! தங்களை இவ்வளவு நேரம் நிற்கவா வைத்திருந்தேன்? அமருங்கள் குருவே, அமருங்கள்" என்றார் அவர் விரைந்து.

"அரசே, நான் கூற விழைந்ததை விளக்குவதற்கு அமைச்சரும் நானும் சற்று நேரம் உரையாட தாங்கள் அனுமதி தரவேண்டும்."

"அப்படியே ஆகட்டும் குருவே!"

அமைச்சரின் பக்கம் திரும்பினார் குரு:

"அமைச்சர் அவர்களே, இந்த வழக்கை நாம் தொடர்ந்து சென்று பார்க்கலாமா?"

"அப்படியே செய்யலாம் - ஆனால் எப்படி குருவே?"

"அமைச்சரே, பல் போனால் எது போகும்?"

"சொல் போகும் என்பார்கள் குருவே."

"அப்படியானால், சொல் பல்லைப் போன்றது என்று கொள்ளலாமா, அமைச்சரே?"

"கொள்ளலாம் குருவே"

"சரி. விஷயத்திற்கு வருவோம். இப்பொக்கை வாயனுக்குப் பல் இல்லாததால் தண்டனையாக இவனைச் சொல்லே இல்லாதவனாக; பேச இயலாதவனாக ஆக்கி விட்டால்?"

"அது எப்படி குருவே?"

"இவன் நாவைத் துண்டித்து விடுவது தான் அமைச்சரே."

"குருவே நம் சட்டங்களின்படி இது பொருந்தவில்லையே."

"அப்படியானால், அமைச்சரே இப்படிச் செய்யலாமா?"

"எப்படி குருவே?"

"இக்கிழவனின் மகனை வரவழைத்து அவன் பற்களை உடைத்து விட்டால் என்ன?... தந்தை பட்ட கடனை மகன் தானே செலுத்த வேண்டும்?"

"குருவே, இக்கிழவனுக்குப் பிள்ளைகளே இல்லையே- என்ன செய்வது?"

குரு அரசரிடம் திரும்பினார்.

"அரசே..." என்று சொல்லத் தயங்கினார் குரு. "தீர்ப்பு திசையறியாத முடிவுறாத ஒன்றாய்..."

"புரிகிறது குருவே. தாங்கள் கூறுவதைக் கூறுங்கள்."

"அரசே, அரசருக்கு வழக்குகள் வந்த வண்ணமிருக்கும். தினந்தினம் தீர்ப்புகள் கூற வேண்டிய அவசியம் ஏற்படும். சட்டங்கள் வழக்கைத் தீர்க்க உதவ வேண்டும். ஆனால் நம் சட்டங்கள் அவ்வாறு உதவுகின்றனவா? இல்லையே?"

"அவை எப்படி இருக்க வேண்டும்?"

"அரசே, வழக்குகளுக்குத் தகுந்தபடியும் மனிதர்களுக்குத் தகுந்தபடியும் தீர்ப்புகள் வழங்கும் விதத்தில் சட்டங்கள் இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் அவற்றை மாற்றவும் திருத்தவும் வேண்டும். தர்ம, நியாயங்களே தீர்ப்பில் முக்கியம்" என்றார் குரு.

மனிதர்களுக்காகச் சட்டங்கள் வளையாவிட்டால் மன்னனின் செங்கோல் வளைந்து விடும் என்று அரசனும், குட்டி அரசகுமாரனும் அன்றொரு பாடம் கற்றுக் கொண்டார்கள்.

கவரி வீசியவர்களுக்கு மன்னிப்பும் பல்லை உடைத்தவனுக்குச் சில நாள் சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டன.



"என்னடா திடீர்னு 'ரவா லட்டு' செய்து தரச் சொல்றே?"

"கிரிக்கெட் விளையாடப் போறோம்... 'பந்தைக் காணோம்!'"

—கு. அருணாசலம்

நான்காவது பரிமாணம்

– கே.பி.சாந்தி

நான்காவது பரிமாணமா? எனக்கு நீளம், அகலம் மற்றும் உயரம் எனப்படும் மூன்று பரிமாணங்கள் மட்டுமே தெரியும் என்கிறீர்களா? மெய்தான் நம்முடைய அறிவியல் பாடங்களும், கணித வகுப்பும் மூன்று பரிமாணங்களை மட்டுமே கற்றுக் தந்திருக்கின்றன.

பரிமாணம் என்பது அறிவியல் தொடர்புடைய சொல். அளவியலிலும் அறிவியலிலும் அவை குறிப்பிடுகின்ற உண்மைகளும், தேற்றங்களும் தெளிவாக வரையறுக்கப்பட்டவையாக இருக்க வேண்டும். உங்கள் பென்சிலின் உயரம் ஒரு அடி என்று சொல்கிறீர்கள். அடி என்ற அளவு தெளிவாக வரையறுக்கப்பட்டதாக இருக்க வேண்டும். எல்லா இடத்திலும் அது ஒரே அளவாக இருக்கிறது.


பரிமாணம் என்பது ஒரு பொருளின் தோற்றத்தினைக் குறிக்கிறது. ஒரு மெழுகுவத்தியின் நீளம், அகலம், உயரத்தை அளந்து கொள்ளுங்கள். ஐந்து நிமிடத்திற்கு அதை எரிய விடுங்கள். மறுபடியும் அதன் முப்பரிமாணங்களையும் அளங்கள்

உயரம் உதைக்கும். அதனால் பரிமாணம் என்பது தெளிவாக வரையறுக்கப்படுவதாக இருந்தால் இந்தப் பிரச்சனை இருக்காது இல்லையா? கொஞ்சம் சிக்கலான விஷயம்தான். ஒரு குட்டிக் கதையைக் கேளுங்களேன்.



கிச்சா ஒரு குட்டிப் பையன். அவனுடைய அம்மா முறுக்கு செய்து, அத்தைவீட்டில் கொடுத்து வரச் சொன்னாள். எல்லாச் சிறுவர்களையும் போலவே கிச்சா தீனிப்பிரியன். அதனால் முறுக்கெல்லாம் பத்திரமாக அத்தை வீட்டுக்குப் போய்ச்





மட்டும்தானே எழுதியிருந்தாள்? அவை ஐந்து சுற்று உடையவை என்று எழுதவில்லையே! எனவே, எல்லா முறுக்குகளிலும் ஒரு சுற்றை மெதுவாக உடைத்து எடுத்து சாப்பிட்டு விட்டான். ஐந்து சுற்று நான்கான கதை தெரியாமல் அத்தையும் பதில் எழுதி விட்டாள்.

பரிமாணக் கோளாறு என்பது இதைத்தான். தவறான அளவீடு என்று குறிப்பிடுவது இந்தக் கதையில் முறுக்கின் சுற்றில் உள்ள (அளவில்) பிரச்சினையை. முதலில் சொன்ன மெழுகுவத்தியில் உயரப்

சேருமா என்ற சந்தேகம் அம்மாவிற்கு எழுந்தது. ஒரு ஐடியா செய்தாள். "கிச்சாவிடம் ஐம்பது முறுக்கு கொடுத்தனுப்பியுள்ளேன். பெற்றுக் கொண்ட விவரத்தை எழுதியனுப்பவும்" என்று எழுதியனுப்பினாள்.

வழியில் கிச்சா முறுக்கை 'அபேஸ்' செய்து விடாமல் இருக்கவே இந்த ஏற்பாடு. முடிவில் என்னவாயிற்று? கிச்சா அத்தையிடம் பெற்று வந்த பதிலில் முறுக்குகள் ஐம்பதையும் பெற்றுக் கொண்டதாக இருந்தது. பையன் ஒழுங்காகச் சேர்ப்பித்து விட்டதாக அம்மாவும் நம்பினாள்.

'கிச்சாவால் முறுக்கு சாப்பிட முடியாமல் போய்விட்டதே' என்று நீங்கள் யாரும் வருந்தவேண்டாம். ஏனெனில் வழியில் கிச்சா வேண்டிய அளவுக்கு முறுக்கு சாப்பிட்டான்! எப்படித் தெரியுமா? அம்மா முறுக்குகளின் எண்ணிக்கையை



பட்டுவிடும். அதாவது "ஒரு அடி உயரமும் 10செ.மீ. விட்டமும் உள்ள மெழுகுவத்தி காலை பத்து மணிக்கு இருந்தது" என்பதே சரி.

காலம் என்கிற நான்காவது பரிமாணத்தையும் சேர்த்துக் குறிப்பிடும்போது ஒரு பொருளின் தோற்றமானது நன்கு வரையறுக்கப்பட்ட தாகிறது. இதுவரை புரிகிறதல்லவா? அப்படியெனில் பள்ளிப்பாடங்களிலோ நடைமுறை வாழ்க்கையிலோ இதை ஏன்



பிரச்சினை. ஒரு பொருளின் வடிவத்தைக் குறிப்பிடும்போது, அளவுகளையும் சரியாகக் குறிப்பிட வேண்டும் அல்லவா? அவற்றை எப்பொழுது சொன்னாலும் அவை சரியாக, மாறாததாக இருக்க வேண்டும். இந்தக் குறைபாட்டை உணர்ந்தபோது, அதை நிறைவு செய்ய அறிமுகப்படுத்தப் பட்டதுதான். 'காலம்' என்கிற நான்காவது பரிமாணம். இப்பொழுது புரிகிறதல்லவா?

மெழுகுவத்தியின் அளவுகளைக் குறிப்பிடும் போது, நேரத்தினையும் குறிப்பட்டால் இன்னும் தெளிவாக இது வரையறுக்கப்

இன்னமும் அறிமுகப்படுத்தப்பட வில்லை என்ற சந்தேகம் உங்களுக்கு எழலாம்.

இதற்கும் சரியான காரணம் இருக்கிறது. மற்ற அளவீடுகளைப்போல அல்லாமல், காலம் என்பது ஒரு ஒப்புமை அளவாக இருக்கிறது. இந்த ஒப்புமை அளவு என்பது என்ன? என் பேனாவின் உயரம்



ஒப்புமை அளவு என்கிறோம்.

இதுபோன்ற ஆதி அந்தம் இல்லாத நிலையில் காலத்தினைச் சரிவரக் கணிக்க முடிவதில்லை. தவிர இதெல்லாம் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு அளவாக இருக்கிறது.

இந்தியாவில் டிசம்பர் கடைசிநாள் நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு ஜனவரி 1 புது வருடம் ஆரம்பிக்கிறது எனில், ஆஸ்திரேலியாவில் சிட்னி நகருக்குக் கணக்கிட்டால் 4 மணி நேரம் முன்னதாகவே இது ஆரம்பித்து விடுகிறது. தவிர நாள் கணக்கு என்பதை பூமியின் சுழற்சியினைக் கொண்டு கணக்கிடுகிறோம். எந்த இடத்தில் டிகிரி0° என்பதும் கூட ஒப்புமை அளவாக இருக்கிறது. இப்படி எல்லாமே உருவகப்படுத்தப்பட்டவை (ASSUMPTIONS) யாக இருப்பதால் 'காலம்' என்பதைச் சரிவர விளக்க முடிவதில்லை. ஆனாலும்கூட வானவியல் ஆராய்ச்சியிலிருந்து, நாம் நம்ப மறுக்கின்ற ஜோதிட ஆராய்ச்சி வரை பல உண்மைகளை விளக்கும் அடிப்படை ஆதாரமாகக் காலம் விளங்குகிறது. இந்தக் 'காலம்' என்பதை மட்டும் சரியாக விளக்கி அதன் செயல் முறை அடிப்படையையும் துல்லியமாகக் கணக்கிட்டுவிட்டால் இந்த 4வது பரிமாணம் உங்கள் பாடபுத்தகங்களிலும் கண்டிப்பாக இடம் பெற்று விடும். அந்த நாள் அதிகத் தொலைவில் இல்லை.

100செ.மீ என்றால், இது பேனாவின் ஒரு முனையிலிருந்து இன்னொருமுனை வரை உள்ள அளவாகும். இது போலவே, இப்பொழுது நேரம் காலை பத்துமணி முப்பது நிமிடம் என்பதை நாள் தொடங்கிய கணக்குக்காக எடுத்துக் கொள்வோம். நாளைக் குறிப்பிடும் போது தேதியைச் சொல்வோம். இந்தத் தேதிதான் ஒப்புமை அளவாகிறது. கிறிஸ்து பிறந்த நாளிலிருந்து ஆண்டைக் கணக்கிடுகிறோம். இன்று தேதி 10.10.1994 எனில், கிறிஸ்து பிறந்து 1994 வருடங்கள் பத்து மாதங்கள் பத்து நாட்களாகின்றன என்று பொருள்.

ஆக, காலத்தின் ஆரம்பம் எப்போது என்று தெரியாது. ஆனாலும் ஏதோ ஒரு முக்கியமான சம்பவத்தை ஆரம்ப அளவாக வைத்துக் கொண்டு செயல்படுகிறோம். ஒப்பிட்டுச் சொல்லப்படுவதால் இதையே

கணபதிக்கு ஜே!

ராஜிராதா

கணபதி எட்டாவது படிக்கும் மாணவன்... அவனுடைய அப்பாவுக்கு தொழிற்சாலையில் வேலை. அதனால் எட்டு மணிக்கு வேலைக்குச் செல்லும் போது ஸ்கூட்டரில், கணபதியையும் அழைத்து வந்து பள்ளியில் இறக்கி விட்டுச் சென்று விடுவார்.

பள்ளி, ஒன்பதரை மணிக்குத்தான் ஆரம்பம். அதனால் அப்போது பள்ளியே வெறிச்சென இருக்கும். கணபதி மைதானத்திற்கு வந்து மரத் தடியில் அமர்ந்து ஹோம் ஒர்க் எழுதுவான். அல்லது படிப்பான். மாலையில் வேலை முடிந்ததும் அப்பா நேராகப் பள்ளிக்கு வந்து அவனைக் கூட்டிக் கொண்டு வீட்டிற்குப் போவார்.

அன்றும் அப்படித்தான். இருவரும் வழக்கத்தை விடச் சற்று முன்னதாகவே கிளம்பி விட்டார்கள். அப்பா பள்ளியில் இறக்கி விட்டதும் மைதானத்தில் உட்கார்ந்து கணபதி படித்துக் கொண்டிருந்தான். ரோட்டில் இருந்தபடி ஒருவர் அவனை அழைத்தார். அவன் எழுந்து வந்து கேட்டான். "இந்த அட்ரஸை கொஞ்சம் படிச்சுட்டு... எங்கே இருக்குன்னு சொல்லேன்?"

கணபதி அவர் நீட்டிய சீட்டை வாங்கிப் படித்தான். அடுத்த வினாடி... அவன் மூளையில் ஏதோ அதிர்ச்சி! அதற்குள்... அட்ரஸ் கேட்ட ஆள் வேகமாக நடக்க ஆரம்பித்தான். கூடவே... காம்பவுண்டைத் தாண்டி வந்து அவனையறியாமல் கணபதியும் நடக்க ஆரம்பித்தான்!

அடுத்த ஐந்தாவது நிமிடத்தில்.. இருவரும் ஒரு பஸ் ஸ்டாப்பிற்கு வந்தனர். சில வினாடிகளில் ஒரு டவுன் பஸ் வந்து நின்றது. அட்ரஸ்கேட்ட ஆள் பஸ்ஸில் ஏறினார். முடுக்கி விடப்பட்ட பொம்மையைப்போல் கணபதியும் அவனைப் பின்தொடர்ந்து ஏறினான். பஸ் புறப்பட்டது... அடுத்த அரை மணியில் இருவரும் மெயின் பஸ்ஸ்டாண்டில் இருந்தனர்.

பஸ் திடீர் ப்ரேக் போட்டு நின்றது. திடுக்கிட்டுக் கண் விழித்தான் கணபதி... அத்துடன்...அவனுக்குப் பழைய நினைவுகளும் மீண்டன... நாம் எங்கே... இந்த பஸ்ஸில்...?

ஆஹா.... அந்த ஆள் கொடுத்த காகிதத்தில் ஏதோ வசிய மருந்தைத் தடவியிருக்கிறான்! பிறகு...எல்லாமே தூக்கத்தில் நடக்கும் கனவு போல நடந்துள்ளது!

பஸ் நின்ற இடம் எது என்று வெளியில் எட்டிப் பார்த்தான். விழுப்புரம் என்று போர்டு காட்டியது. அவனை அழைத்து வந்தவனை அருகில் காணவில்லை....

கீழே இறங்கி எங்கேயாவது நிற்கிறானா என்று கணபதி நோட்டம் விட்டான். ஒரு கடையில் நின்று அவன் டீ குடித்துக் கொண்டிருந்தான்... அங்கிருந்தபடி பஸ்ஸிலே நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான்...!

வருவது வரட்டும் என்று கணபதி பஸ்ஸிலிருந்து இறங்கி வேகமாக நடக்க ஆரம்பித்தான் டீக்கடையில் இருந்த ஆள் அதைப் பார்த்து விட்டு வேகமாக ஓடி வந்தான்.

விழுப்புரம் பஸ் ஸ்டாண்டில் கணிசமான கூட்டம் இருந்ததால், கணபதியால் சுலபமாக



மறைந்து நழுவமுடிந்தது பஸ் ஸ்டாண்டுக்கு வெளியே வந்தான்....

கணபதியின் பெரியப்பா... சண்முக சுந்தரம் சமீபத்தில்தான் டில்லியிலிருந்து விழுப்புரத்துக்கு மாற்றலாகி வந்திருந்தார். இதுவரை அவரை கணபதி பார்த்ததே இல்லை! அவர் வந்த இரண்டொரு சமயம் அவன் ஊரில் இருக்கவில்லை. அவர் வங்கியில் வேலைபார்ப்பவர். அவர் விழுப்புரத்திற்குப் போகுமுன் வீட்டிற்கு வந்திருந்தார். அப்பொழுதும் கணபதி ஊரில் இல்லை. சாரணர் கேம்ப்புக்குக் கோவை போயிருந்தான்.

அடுத்து என்ன செய்வது என்று விழித்துக் கொண்டிருந்த கணபதியை ஒரு முரட்டுக் கரம் பிடித்தது!

"யார்...நீ..."

"ஐயா, நான் திருச்சியில் படிக்கிறேன். என்னை ஒருத்தன் வசியமருந்து தடவி, இங்கே கூட்டி வந்து விட்டான். விழுப்புரத்தில் பஸ் நின்ற போது எனக்கு விழிப்பும் சுய நினைவும் வந்தது. உடனே நைசாக இறங்கி வந்து விட்டேன். என்னை திருச்சியில் என்னுடைய பெற்றோரிடம் சேருங்கள் ஐயா."

"உன்னை உன் அப்பாவிடம் சேர்க்கிறேன். கவலைப் படாதே... முதலில் என் வீட்டுக்கு வா... டிபனை சாப்பிடு.... பிறகு மேலே நடப்பதைப் பார்ப்போம்...."

கணபதி அந்த ஆளை நம்பி அவருடன் புறப்பட்டான். அந்த ஆள் கணபதியை அழைத்துக் கொண்டு கடைவீதிக்குச் சென்றான்.

'அட... இதோ இருக்கே...சித்தப்பா வேலை செய்யும் வங்கி' என்று கூற நினைத்த கணபதி, ஏனோ வாயை மூடிக் கொண்டான்.

இருவரும் ஒரு ஹோட்டலுக்குள் சென்றனர். முதலாளி... கல்லாவில் உட்கார்ந்திருந்தார்..

"நீங்க கேட்டிங்களே... டேபிள் துடைக்க ஒரு ஆள் வேணும்னு... இதோ கூட்டி வந்துட்டேன்..."

கணபதிக்கு திக்கென்றது. 'அடப்பாவி... இவனும் ஒரு பிள்ளை கடத்தல்காரனா! இப்போது தப்புவது எப்படி...?' என்று மனதிற்குள் பதைபதைத்தான்.

"இந்தாப்பா ஐநூறு ரூபாய். இதே மாதிரி இன்னும் ரெண்டு பசங்க கிடைச்சாலும் கொண்டா..."

கணபதியுடன் வந்தவன், பணத்தை வாங்கிக் கொண்டு நழுவினான்...

ஹோட்டல் முதலாளி கணபதியிடம் கடுமையாகப் பேசினார்.

"ஹோட்டலை விட்டு ஒரு அடி கூட காலை எடுத்து வைக்கக் கூடாது. மீறி எடுத்து வெச்சா... காலை உடைச்சிடுவேன். போய் உனக்கு பிடிச்ச டிபனை சாப்பிட்டுட்டு வா..."

டிபனை சாப்பிட்டு முடித்தான். முதலாளிக்கு அருகே வந்தான்.

கணக்குப் பிள்ளை மாதிரி ஒருவர் முதலாளியிடம் வந்தார்.

"இதோ புதுப் பையன். படிச்சவன். இவனை வைச்சு, நோட்டை எண்ணி பாங்கியில் பணத்தைக் கட்டு" என்று முதலாளி உத்தரவிடவும், அவன் கணபதியை ஓர் அறைக்கு அழைத்துச் சென்றான். மேஜைமேல் ரூபாய்க் கட்டுகள். மேலே கட்டில் எத்தனை இருக்கிறது என்ற விவரம் குறிக்கப்பட்டிருந்தது.

"தம்பி இந்தப் பணத்தையெல்லாம்

இன்னொரு முறை எண்ணி சரிபார். நான் போய் டிபன் சாப்பிட்டுட்டு வந்துடறேன்.."– கணக்குப் பிள்ளை போய் விட்டார்.

கணபதிக்கு ஒரு ஐடியா தோன்றியது, "இந்தப் பணம் எதிரே உள்ள வங்கிக்குத் தானே போகப் போகிறது? அவன் அது வரை பார்க்காத பெரியப்பா அங்கு தானே வேலை பார்க்கிறார்? அவருக்கு நாம் இப்படி சிக்கிக் கொண்டிருப்பதைத் தெரிய வைத்து விட்டால் உடனே விடுதலை கிடைத்து விடுமே!

கணபதி மின்னல் வேகத்தில் செயல் பட்டான்.

சட்டைப் பையில் பள்ளிக்குக் கிளம்பும் போது வைத்திருந்த பேனா அப்படியே இருந்தது. அதை எடுத்து முதலில் பிள்ளையாரை வேண்டிக் கொண்டு எழுதினான்.

"உதவி...உதவி... திருச்சி ஜங்ஷனில் பணி புரியும் சிவசிதம்பரத்தின் மகன் கணபதி நான். பள்ளியிலிருந்து ஒரு நபரால் கடத்தப்பட்டேன். இந்த கணேஷ் ஹோட்டலில் விற்கப்பட்டுக் கிடக்கிறேன்! என் பெரியப்பா.. சண்முக சுந்தரம் சமீபத்தில் இந்த வங்கிக்கு மாற்றலாகி வந்துள்ளார். நான் அவரைப் பார்த்தது இல்லை. அவர் அட்ரஸும் தெரியாது. எப்படியாது என்னைக் காப்பாற்றுங்கள்..."

பொடிப் பொடியாக எழுதி, ஒரு ஐம்பது ரூபாய் கட்டின் இடையே நுழைத்து வெளியே தெரியாதபடி வைத்து விட்டான். பிறகு எண்ணி முடித்தது போல் முதலாளி எழுதியிருந்த எண்ணிக்கைகளை டிக் செய்தான்...!

சில நிமிடங்களில் கணக்குப் பிள்ளை திரும்பி வந்தார்.

"என்ன தம்பி எல்லாத்தையும் எண்ணினியா.. சரியா இருக்கா...?"

"சரியா இருக்குங்க...

கணக்குப் பிள்ளை கிளம்பிப் போனதும் முதலாளி கணபதியை அழைத்தார்.

"சாப்பாட்டு பெஞ்சை துடை. ரெண்டு நாள் ஆனப்புறம், உன்னை பில் போட வெச்சுக்கிறேன். தப்பிக்க மட்டும் முயற்சி செய்யாதே. நான் பொல்லாத ஆள்..."

"கணபதி நேராக டிபன் ஹாலுக்கு வந்தான்.

'நேரம் ஓடிக் கொண்டே இருந்தது. தான் எழுதிய கடிதத்தை யாராவது பார்த்திருப்பார்களா!' என்று கணபதி ஆவலுடன் காத்திருந்தான்.

ஒருமணிநேரம் கழிந்தபின்... முதலாளி எதற்கோ கல்லாவை விட்டு எழுந்தார். அப்போது இருவர் வந்து, முதலாளிடம் ஏதோ கூறினார்கள்.

உடனே முதலாளி கத்தினார்.

"கூப்பிடுய்யா, அந்த கணக்குப் பிள்ளையை"

தலைதெறிக்க ஓடி வந்தார் கணக்குப் பிள்ளை.

"ஏன்யா... பணத்தை ஒழுங்கா எண்ணினியா? இருநூறு ரூபாய் கூட இருக்காமே!"


"ஐயா... இன்னிக்கு நான் எண்ணலே... புதுசா வந்த பையன்தான் எண்ணினான்."

"அவனைக் கூப்பிட்டு, தோலை உரி..."

தூண் மறைவில் இருந்தபடி கவனித்துக் கொண்டிருந்த கணபதி அருகில் அழைக்கப்பட்டான். அவன் உடம்பு நடுங்கியது.

முதலாளி சிறினார்.





ஒரு கை விரல்

ஐந்து விரல்களும் வெவ்வேறாம்
அனைத்தும் ஒன்றாய்ச் சேர்வதில்தான்
சிந்தை நினைக்கும் செயல்களினைச்
செய்திட முடியும் யாராலும்.

ஐந்து விரல்களும் சேர்ந்தால்தான்
அத்தனை பலமும் கைகளுக்கு
ஐந்தில் ஒன்று குறைந்தாலும்
அள்ளித் தின்பதும் சிரமமன்றோ?

இந்திய நாட்டில் பலமதங்கள்
இந்திய நாட்டில் பலஇனங்கள்
இந்தியன் என்பவன் ஓரினம்தான்;
இவனில் பிரிவுகள் கிடையாது.

ஒருகை விரல்போல் வெவ்வேறாய்
ஒவ்வோர் இந்திய மொழியிருக்கும்.
ஒருகை என்பது விரல்களும்தான்;
உயர்புகழ் இந்தியா அதுபோல்தான்.

வேற்றுமை தனிலே ஒற்றுமையை
வேண்டிப் பெறுபவர் இந்தியராம்.
வேற்றுமை மொழியில் மதங்களில்தான்;
வெற்றியும் ஒன்றாய் இணைவதில்தான்.

- செல்ல கணபதி

''ஏண்டா பணத்தை ஒழுங்கா எண்ணினியா?''

கணபதி ஒரு வினாடி யோசித்தான், வந்தவர்கள் ஒருவேளை அவனைக் காப்பாற்ற வந்திருந்தால்...? அதற்கு ஏற்ப பதில் சொல்லுவோம்...

"ஐயா... நான் திருச்சியில் வி.எஸ்.கே. ஸ்கூலில் படிப்பவன்... அங்கேயெல்லாம் கணக்கைத் தப்பா போட்டால் கடுமையான தண்டனை உண்டு. ஆகவே தப்புப் பண்ணவேமாட்டேன்..."

அப்போது வந்தவர்கள் குறுக்கிட்டனர்,

"ஏன் தம்பி, 50 ரூபாய் நோட்டுக் கட்டை நீதான் எண்ணினியா..?"

அதைக் கேட்டதும் கணபதிக்குப் புரிந்து விட்டது. மனதில் மகிழ்ச்சி! இவர்கள் என் கடிதத்தைப் படித்து விட்டு வந்திருப்பவர்கள்தான். அப்போது ஒருவர் ஸ்கூட்டரில் வந்து இறங்கினார். ஏற்கனவே வந்திருந்தவர்கள் அவரைக் கண்டதும் வணங்கிவிட்டு, "சார், இவன் தான் கணபதி" என்றனர்.

முதலாளி உஷாரானார்.

"என்னையா ஒரேடியா புரளி பண்றீங்க?" என்று கத்தி விட்டு, "டேய் பையா. நீ உள்ளே போ" என்று உத்தரவிட்டார்.

ஸ்கூட்டர்காரர் கணபதிக்கு அருகே வந்து நின்று கொண்டார்.

"இவன் என் தம்பி மகன் கணபதி. இவனை நீங்க திருச்சியிலிருந்து கடத்தி வந்திருக்கீங்க..."

"இல்லவே இல்லை. இவனை ஐநூறு ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கேன். அதைக் கொடுத்துட்டு அழைச்சுக்கிட்டு போங்க..."

"அப்படியா? வாங்கப்பா... இந்த முதலாளி தன் ஓட்டலில் வேலை பண்ண, இப்படிப் பசங்களைக் கடத்திக் கிட்டு வரப் பண்ணி விலைக்கு வாங்கிக் கிறார்னு போலீஸில் புகார் கொடுப்போம்" என்றார் ஸ்கூட்டர் காரர்.

உடனே ஹோட்டல் முதலாளி பல்டி அடித்தார்.

"அதெல்லாம் வேண்டாம். உங்க பையனைக் கூட்டிக்கிட்டு போங்க... இது எனக்கு முதல் அனுபவம். இனிமே யார் இப்படிப் பசங்களைக் கூட்டி வந்தாலும் ஹோட்டலில் சேர்க்க மாட்டேன்.... மாறாக அவங்களை, என் செலவிலேயே அவங்க வீட்டில் சேர்ப்பேன்..."

"கணபதி, ஆபத்து சூழ்ந்த நெருக்கடி நேரத்திலும் கூடக் கலங்கி விடாது புத்தியைப் பயன்படுத்தினால் புது வழி பிறக்கும் என்பதை நிரூபித்துக் காட்டி விட்டாய்" என்று அவனை அழைத்துச் சென்றார் ஸ்கூட்டர் காரர். அவர்தான் பெரியப்பா.

'கணபதிக்கு ஜே' என்றனர் வங்கி ஊழியர். நாமும் சேர்ந்து சொல்வோம்.



2வது சாவி

த. ஜானகி

8 டைகர் செய்த உதவி

வரும்போதே மணி கோபத்தோடு காணப்பட்டான். கிருத்திகை அன்று பிச்சைக்காரன் வேஷத்தில் வந்து காத்திருந்து போனதால் ஏற்பட்ட ஏமாற்றம், நினைத்தபடி நினைத்தபோது வந்து சந்திக்க முடியாத நிலைமை என்று எல்லாமாகச் சேர்ந்து அவன் கோபத்தின் உச்ச கட்டத்திலே இருந்தான்.

"மணி! உட்காரு. இந்தா சாத்துக்குடிப் பழம். சாப்பிடு. நான் சொல்வதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேள்" என்றான் ராஜா அவனைத் தேற்ற.

ஆனால், மணி பழத்தைத் தொடவில்லை. உடல் நலக் குறைவால்தான் தன்னால் வர முடியாத நிலைமை ஏற்பட்டதை ராஜா நிதானமாக, தெளிவாக விளக்கிய பிறகே மணியின் கோபம் சற்றுத் தணிந்தது.

"சரி... சரி... இதுதான் நம்மோட கடைசி முயற்சி. வருகிற வெள்ளிக் கிழமை அன்று சஷ்டி தினம். அன்றும் முருகனுக்கு விராலி மலையில் விசேஷ பூஜை உண்டு. நீ... என்ன செய்வாயோ எனக்குத் தெரியாது. அன்னிக்கு சாயந்திரம் ஏழு மணி குமாருக்கு உன்னையும் அந்த சந்திப் பயலையும் விராலிமலை கோவில் வாசலிலே பார்த்தே ஆக வேண்டும்" என்றான் கோபத்தோடு.

"வெள்ளிக் கிழமையா?"

"ஆமா.... வெள்ளிக்கிழமைதான். என்ன யோசிக்கிறே? நீ கட்டாயம் வர்ரே. அது சரி... சாவி... உன் கிட்டே பத்திரமா இருக்கா?"

மணி தன்னை விரட்டுவது ராஜாவுக்கு எரிச்சலாக வந்தது. "சாவியா...! தேடிப்பார்க்கணும்" என்றான்.

• • • • •

இருட்டுத்தனமாக மணி நுழைவதைப் பார்த்து மயிலுதான் சந்திப்பிடம் விஷயத்தை தெரியவிக்க வேகமாக அவன் வீட்டிற்குச் சென்றான்.

"என்ன விஷயம் மயிலு. ஏதாவது நோட்டு வேணுமா?" என்று கேட்ட சந்திப்பை மெதுவாக வாசல் பக்கம் அழைத்து வந்தான் சந்திப்.

"என் தங்கச்சி பாப்பாவுக்கு ஒரே சளி. நெஞ்சுக்கட்டு. கஷாயம் வைக்க எங்கம்மா துளசி பறிச்சுக் கொண்டு வரச் சொன்னாங்க. அதனால பெருமாள் கோவிலுக்குப் போய் துளசி பறிச்சுட்டு வெளியே வந்தேன். பாரு, ஒரு ஆளு நம்ப ராஜா அண்ணன் வீட்டுக்குப் பின்னாலே ஒளிந்து கொண்டிருந்தான். இருட்டிலே மூஞ்சி சரியாகத் தெரியலை" என்று நடந்ததைச் சொன்னான்.

"நிஜமாகவா? அந்த அண்ணன் தன்னை

அனாதை என்று சொல்லிக் கொண்டாரே?"

"அதுதான் எனக்கும் ஆச்சரியமா இருக்குடா! பாட்டிகிட்டே ஏதாவது ஒரு காரணத்தை சொல்லி விட்டு வா. டைகரோடு போகலாம்."

"சரிடா" - சந்தீப் உள்ளே போனான்.

• • • • •

டொக்... டொக்....

கதவு தட்டும் ஒலி கூடக் காதில் விழாது மணியும் ராஜாவும் பேசிக் கொண்டிருந்தனர்.

தன் பலத்தையெல்லாம் திரட்டி மயிலு கதவைப் படபடவென்று தட்டிய போது ராஜா விழித்துக் கொண்டான். மணி திடுக்கிட்டான்.

"மணி, கொல்லைப்புறக் கதவைத் திறந்து கொண்டு எங்கேயாவது போய் ஒளிஞ்சுக்க. பிறகு பார்க்கலாம்" - மெதுவான குரலில் அவசரப்படுத்தினான்.

"பாவிங்க. பேசக் கூட விடாம தொந்திரவு செஞ்சுக்கிட்டு" என்று கடுப்படித்தபடி பின் கதவைத் திறந்து கொண்டு இருளில் மறைந்தான் மணி.


"வாசல் கதவைத்திறந்த ராஜா சந்தீப்பையும் மயிலையும் பார்த்து திடுக்கிட்டாலும், சமாளித்தபடி வினவினான்.

"என்ன இந்த நேரத்திலே, ரெண்டு பேரும் சேர்ந்தாப் போல வந்திருக்கிங்க....!"

"ஏன் சோகமா இருக்கிறே?"

"என் ஜாதகத்தை பார்த்த ஜோசியர் எனக்கு தண்ணீயில கண்டம் இருக்கிறதா சொல்லிட்டாரு....!"

— எம்.கே. வேங்கவேல்



தன் கேள்விக்குப் பதில் சொல்லாது இருவரும் தன் வீட்டைக் கண்களால் அலசி ஆராய்வதை ராஜா பார்க்கத் தவறவில்லை.

"அண்ணே! இங்கே யாரோ பேசிக் கொண்டிருந்தது மாதிரி இருந்ததே?"

"அதுவா மயிலு? வீட்டிலே ஒரே எலி. எம்மேல ஒரு எலி மேலே இருந்து பொத்துன்னு விழுந்துச்சு. பாரு. வந்த கோவத்திலே அதைக் கன்னா பின்னான்னு சத்தமா திட்டிக்கிட்டிருந்தேன். அது சரி சந்தீப் உனக்கு, ஏதாச்சியும் வேணுமா?"

"எனக்கு ஒண்ணும் வேண்டாம். ராத்திரி சாப்பாடும் வேண்டாம் என்று சண்முகத்து அண்ணன் கடையிலே சொல்லிட்டீங்களாமே! ஏன் சாப்பாடு வேண்டாம்? உடம்பு சரியில்லையா? பாட்டிகிட்டே சொல்லி எங்க வீட்டுலேருந்து சாப்பாடு கொண்டு வரட்டுமா? இதைக் கேட்கத்தான் வந்தேன்."

"சாயந்திரம் பாட்டி பஜ்ஜி நிறையக் கொடுத்தாங்க. தின்னுபுட்டேன். அதனால பசியில்லை."

அந்த சமயம் டைகர் ளொள்... ளொள் என்று பயங்கரமாகக் குரைத்தபடி ராஜாவின் வேட்டியை பிடித்து இழுத்தது.

"டைகர் என்ன சொல்றே?" என்று சந்தீப் கேட்பதை காதில் வாங்கியபடி மீண்டும் ராஜாவின் வேட்டியைப் இழுத்து அந்த இடத்தை விட்டு நகரும்படி குரைத்தது.

குரைத்த திக்கை நோக்கிய பொழுது மூன்று ஜோடிக் கண்களும் அச்சத்தினால் அப்படியே உறைந்து இமைக்கக் கூடா மறந்து பார்த்தபடியே இருந்தன.

ராஜாவுக்கு அருகில்.... மிக அருகில்...

பாம்பு ஒன்று படமெடுத்தபடி ஆடிக் கொண்டிருந்தது. 'விஸ்' என்று கத்தியபடி மயிலு சந்தீப்பை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டான்.

ஒரு நிமிடத்தில் நிலைமையை உணர்ந்த ராஜா டக்கென்று முன்பக்கம் தாண்டிக் குதித்தான். சுய உணர்விற்கு வந்த மயிலும் சந்தீப்பும்.... "பாம்பு... பாம்பு ஐயோ பாம்பு" என்று கத்தினர்.

சத்தத்தைக் கேட்டு விராலிமலையி



லிருந்து அத்தியூருக்குத் திரும்பி வந்து கொண்டிருந்த சண்முகமும், அவன் பக்கத்து வீட்டுக்காரன் பரமசிவமும் ராஜாவின் வீட்டிற்குள் நுழைந்தனர்.

"கம்பை எடு, குச்சியை எடு..." என்று ஆளுக்கு ஆள் சத்தம் போட்டபடி தேடிக் கொண்டிருந்தனர்.

ஆனால் அதற்குள் அந்தப் பாம்பு வளைந்து வளைந்து கொல்லைப்புறத்தை நோக்கி ஓடி கண் இமைக்கும் நேரத்தில் மறைந்து விட்டது.

அமர்க்களத்தைப் பார்த்து விட்டு கோவில் குருக்களும் அங்கு நுழைந்தார்.

"அண்ணே! டைகர் மட்டும் உங்களுக்கு எச்சரிக்கை கொடுக்காமல் இருந்தால்?" - உடலை அச்சத்தினால் குலுக்கிக் கொண்டான் மயிலு.

"உண்மைதான்! சமயத்தில் டைகர் தன்னைக் காப்பாற்றி இருக்காவிட்டால் என்னவாகியிருக்கும்? நினைக்கும் போதே ராஜாவின் மேனி அவனையும் அறியாமல் சிலிர்த்தது.

டைகரைப் பார்த்தான்.

"நீ என்னைக் கொல்ல நினைத்தாய். ஆனால், நான் உன் உயிரைக் காப்பாற்றி விட்டேன்" என்று கண்களால் சொல்வது போல் இருந்தது அதன் பார்வை.

மனத்திரையில் அந்த சம்பவம் தெளிவாகவே ஓட ஆரம்பித்தது.

ராஜா ஜுரமாகப் படுப்பதற்கு முன்பு நடந்தது அது.

அன்று, பள்ளி வேலை செய்யும் நாள். காலை மணி 11 இருக்கும். மேஜர் வீட்டின் பின்பக்கத் தோட்டத்தை சுத்தம் செய்து கொண்டிருந்தான் ராஜா. மேஜர் திருச்சி சென்றிருந்தார். மீனாட்சி அம்மாள் சமையல் அறையில் வேலையாக இருந்தார். பண்ணையாள் சுப்பு மாட்டிற்கு வைக்கோல் போட்டு விட்டு தாழ்வாரத்தில் ஓர் ஓரமாகப் படுத்துக் கொண்டு கண்ணயர ஆரம்பித்தான். டைகர் தோட்டத்தில் குதித்துக் குதித்து விளையாடிக் கொண்டிருந்தது.

தன்னை யாரும் கவனிக்கவில்லை. இதுதான் நல்ல சந்தர்ப்பம் என்று

நினைத்துத் தயாராகக் கொண்டு வந்திருந்த விஷம் தடவிய பிஸ்கட்டை எடுத்தான் ராஜா. "என்னோட வேலை நடை பெறுவதற்கு நீ தடைகல்லாக இருக்கிறாய். இன்றோடு நீ ஒழிந்தாய்" என்று மனதிற்குள் கூறிக் கொண்டு கீழே உட்கார்ந்து கொண்டு பிஸ்கட்டை நாய்க்குக் காட்டினான். டைகர் ஆவலோடு அருகில் ஓடி வரும் போது, பக்கத்து வாழை மரத்தில் அமர்ந்திருந்த குரங்கு பிஸ்கட்டைப் பார்த்ததும் டபாரென்று குதித்து பிஸ்கட்டைப் பிடுங்கிக் கொண்டது. டைகர் சும்மா இருக்குமா? ஆக்ரோஷத்தோடு குரைத்துக் கொண்டே குரங்கைத் துரத்த, குரங்கு மரத்திற்கு

''மண்ணுல போட்ட காசு வீண்போகாதுன்னு பையன்கிட்ட சொன்னதை தப்பா புரிஞ்சிக்கிட்டான்!''

''என்னாச்சு?''

''காசை எடுத்திட்டுப் போய் எங்கேயோ மண்ணுல வீசி எறிஞ்சிட்டான் சார்....!''

— சீர்காழி ரேவதி



மரம் தாவிச் சென்று பின்பக்கமுள்ள காம்பவுண்ட் சுவரில் தாவியபடி அமர்ந்து கொண்டது. அப்படித் தாவிய போது அதன் கையினின்றும் பிஸ்கட் நழுவி கீழே உள்ள சாக்கடை நீரில் விழுந்தது. அன்று தன் திட்டம் தோல்வியடைந்து டைகர் தப்பித்துக் கொண்ட போது ராஜாவுக்குக் கோபம் கோபமாக வந்தது.

ஆனால் இன்று? மனதில் வெண்ணெய் உருகுவது போல ஒரு மென்மை உணர்வு, உள்ளம் பூராக ஓட ஆரம்பித்தது.

"டொக்கென்று எதோ இலேசாக சத்தம் கேட்டது. தொடர்ந்து கொல்லை வாசற்படிக்கு அருகில் நின்று கொண்டிருந்த டைகர் திடீரென்று பயங்கரமாகக் குரைத்துத் தீனமாகக் குரல் எழுப்பியது. சந்தீப் பதறிக்கொண்டு ஓடினான். மற்றவர்களும் பின் தொடர்ந்து ஓடினார்கள்.

கொல்லை வாசற்படிக்கு அருகே டைகர் இரத்த வெள்ளத்தில் மயங்கிக் கிடந்தது. அரைச் செங்கல் ஒன்று அதன் தலையைப் பதம் பார்த்திருந்தது.

"டைகர்" என்று அலறினான் சந்தீப்.

"அடடா! சுவத்திலேந்து செங்கல் பெயர்ந்து நாயோட தலையில விழுந்துடுத்து போல இருக்கே!" என்றார் குருக்கள் பதற்றத்துடன்.

"எந்த ஜென்மத்திலே கட்டின வீடோ? இப்படித் தானாகப் பிரிந்து செங்கல் விழுந்திருக்கு. அட! செங்கல்தான் விழுந்ததே, இப்படி டைகரின் தலையிலே அடிபடும்படியாவா விழுனும்?" என்று நொந்து கொண்டான் ராஜா.

சந்தீப் எதுவும் பதில் கூறத் தோன்றாமல் "டைகர், என் டைகர்" என்று விசித்தான்.

"சந்தீப் நீ படித்த பிள்ளை. அழுது துக்கப்படுவதால் எதையும் சாதிக்க முடியாது. எனக்கு என்னவோ, டைகரை உடனடியா எதாவது கால்நடை மருத்துவர் கிட்ட தூக்கிக்கிட்டு போனால் எதாவது சிகிச்சை பண்ணி, அதை பிழைக்கவைக்க முடியும்னு தோணுது. அழுது காலத்தை விணாக்காம ஒரு கூடையிலே டைகரை போட்டுக்கிட்டு விராலிமலைக்குக் கொண்டு போக எற்பாடு பண்ணலாம்" என்றார் குருக்கள்.

"நான் போய் கூடையையும் எடுத்துக்கிட்டு, ஒரு வண்டியையும் ஏற்பாடு பண்ணிக்கிட்டு நொடியிலே வரேன்" என்று பறந்தார் பரமசிவம்.

சந்தீப்பின் விசும்பல் நின்றிருந்தது. ஆனாலும், அந்த அதிர்ச்சியிலிருந்து அவன் இன்னும் மீளவில்லை என்பது நன்றாகத் தெரிந்தது.

குருக்கள், சுவரிலிருந்து தானாக செங்கல் பெயர்ந்து விழுந்து டைகரின் தலையைப் பாதித்தது என்று கூறினாலும், ராஜா அதை ஆமோதித்தாலும் மயிலுக்கு என்னவோ அதை ஏற்க மனசு மறுத்தது. அதற்குக் காரணமும் இருந்தது. ராஜா





'' 'நோட் புக்'கை விட 'ஸ்லேட்' தான் சிறந்ததா! எப்படி?''


''சிலேட்டுல எழுதின ஹோம் ஒர்க் அழிஞ்சிடுச்சுன்னு சொல்லி அடிவாங்காம தப்பிச்சுடலாமே!''

— லட்சுமி பிரகாஷ்

"உங்க பையன் பணத்தை முழுங்கிட்டான்னு தெரிஞ்சும் பதட்டப்படாம இருக்கீங்களே..."

"ஹி.... ஹி... முழுங்கின பணம் எதிர் வீட்டுக்காரனோடதாச்சே!"


— கே. சோமசேகர்



"வசந்தகாலம் என்பது எது?"

"முழு ஆண்டுத் தேர்வு விடுமுறை விடறாங்களே, அந்த காலம்தான் சார்!"

— சீர்காழி வி. ரேவதி



இருந்த வீடு பழைய வீடுதான் என்றாலும் இப்படி தானாக செங்கல் சுவரிலிருந்து புரண்டு விழுந்து விடும் அளவுக்கு அது கிலமானதில்லை. செங்கல் அப்படியே எதிர்பாராத விதமாக தானாகவே டைகர் மேல் விழுந்திருந்தாலும், இப்படி டைகரின் மண்டையில் இரத்த வெள்ளம் எற்படும் அளவிற்கு பாதிப்பைக் கண்டிப்பாக எற்படுத்தியிருக்க முடியாது. அந்த அளவுக்கு அது வேகமாகத் தாக்கியிருக்காது. வேண்டுமென்றே யாராவது செங்கலை முழு வேகத்தோடு தூக்கிக் குறி பார்த்து எரிந்திருந்தால் மட்டுமே அப்படி இரத்த வெள்ள காயம் எற்படும் அளவிற்கு இருக்கும். அதனால் மயில் அவர்களுடைய கூற்றை நம்பத் தயாராக இல்லை.

ராஜாவுக்கு, டைகரை தாக்கிய செங்கல் எங்கிருந்து வந்திருக்கும் என்பது நன்றாகத் தெரிந்து விட்டது. குறி பார்த்து அடிப்பதில் வல்லவனான மணியின் திருவிளையாடல்தான் இது. அவனை சந்தித்துப் பேச வந்திருந்த போது, பாதியில் சந்தீப்பும் அவனது நண்பர்களும் வந்து கொடுத்த தொந்தரவைப் பொறுக்க முடியாது அவன் ஆத்திரத்தோடு வேறு வழியில்லாமல் கொல்லைப்பக்கம் ஒளிந்து கொள்ள கிளம்பினான். போகின்ற போக்கில் அவன்தான் அந்த செங்கலை ஆத்திரத்தோடு உருவி எடுத்துக் கொண்டு போனான். அவ்வளவு பரபரப்பான சூழ்நிலையிலும் மணி போகும் போது அந்தச் செங்கலை எடுத்துக் கொண்டு போனதை ராஜா கவனிக்க தவறவில்லை. அந்த செங்கல்தான் மணியின் திருக்கரத்தால் இந்தத் திருவிளையாடலைச் செய்து முடித்திருக்கிறது.

இரத்த வெள்ளத்தில் நினைவு இல்லாமல் இருந்த டைகரின் நிலையைக் காணக் காண ராஜாவின் கண்களிலும் நீர் மெதுவாக எட்டிப் பார்க்க ஆரம்பித்தது. டைகர் பிழைக்காது என்று உறுதியாக அவனுக்குத் தெரிந்து விட்டது. அவன் தன்னை அறியாது விசும்ப ஆரம்பித்தான்!

நானா அழுகிறேன்? என்னுடைய பாறை உள்ளத்திலிருந்தா இந்தக் கசிவு! எப்படி ஏன்? ஏன்? ராஜா... தடுமாறினான்.

(தொடரும்)

புள்ளிகளைச் சேருங்கள்







"எலியைப் பார்த்து பூனை ஏன் பயந்து ஓடுது?"
"பிளேக் நோய் வந்திடும்முன்னு."
- இஞ்சிக்கொல்லை எஸ். விஜயகுமார்.
"போன வாரம் ஏழு நாளும் ஏழு வருஷம் மாதிரி இருந்திச்சிடா."
"போன வாரம் உனக்கு பரீட்சைன்னு சொல்லு...?"
- சீர்காழி வி. ரேவதி
"ஏழு மைலுக்கு அப்பால உள்ள பள்ளிக்கூடத்திலதான் நீ படிக்கிறியாமே...?"
"ஆமா... பள்ளிக்கும் எனக்கும் வெகுதூரம்...!"
- சீர்காழி வி. ரேவதி
"எனக்கு 'டஸ்ட் அலர்ஜி'டா... உனக்கு...?"
"டென்ட் அலர்ஜி!"
- சீர்காழி வி. ரேவதி
சிரிப்...



மலை எலிகளுக்குப் பயந்து ஓடிய மக்கள் திரும்பினார்கள். எலிகளால் பாழ்பட்ட நகரைப் புதுப்பிக்கும் பணி தொடங்கியது.
ரத்தினபுரி ரகசியம்-2
கதை: வாண்டுமாமா சித்திரம்: செல்லம்
ராஜகுரு கௌதமர் அந்த விந்தைத் தாவரத்தில் மேலும் ஆராய்ச்சியை மேற்கொண்டார். அதில் வெற்றியும் பெற்றார்.
இந்தத் தாவரத்தின் விதைகளைச் சாப்பிட்டு உயிரோடுள்ளவன் இவன் ஒருவனே. வளர்ந்த மனிதன் உடலும் குழந்தை மனமும் கொண்ட இவன் மனமும் விரைவில் வளர்ச்சி பெறும். இந்தத் தாவரத்தின் அதீத சக்தியையும் கட்டுப்படுத்தி விட்டேன்.
குருவே! இனி இது போன்று ஏதும் நிகழக் கூடாது.
நிகழாது மன்னா. இத்தாவரங்கள் அழிக்கப்படும். இதை வளர்க்கும் ரகசியம் என் மனதிற்குள்ளேயே பூட்டி வைக்கப்படும்.
ராஜ்யத்தில் அமைதி நிலவிய பின்தான் வீரசேனரின் நினைவு வருகிறது மன்னருக்கு. விவரம் கேட்கிறார், சகரனிடம்.
எலிகளின் ரகசியத்தைக் கூறியபின் வீரசேனன் யார் கண்ணிலும் படவில்லை. எங்கோ மறைந்து விட்டான்.



பல நாட்களுக்குப் பிறகு திரிசூல் விவசாயி ஒருவன் நிலத்தை உழும்போது, கலப்பை முனைபட்டு பூமியிலிருந்து ஒருபேழை மேலே வருகிறது.
அந்தப் பேழையினுள் ஓலைச்சுவடிகள்.
அப்பா, இதை மன்னரிடம் ஒப் படைப் போம்.
—முதல் பாகம் நிறைவுற்றது.


~இரண்டாம் பாகம்~


ஓலைச்சுவடிகளை விவசாயி மன்னரிடம் ஒப்படைக் கிறான். ராஜகுரு அதில் வித்தியாசமான மொழியில் எழுதப் பட்டிருந்த விஷயத் தைப் படித்து அறிகிறார். திரிசூல் ராஜ்யம் தோன்றுவ தற்கு முன்பிருந்த ஒரு சாம் ராஜ்யத்தின் கதை அதில் கூறப்பட்டிருந்தது. அது இப் போது இல்லை. அழிந்துபோ யிற்று என்ற விவரங்களை கூறுகிறார் கௌதமர்.
உத்தேசமாக அந்த அழிந்த சாம்ராஜ் யம் எங்கு இருந்திருக்க வேண்டும் என்பதை மன்னருக்கு விளக்குகிறார். கௌதமர்
அந்த வீரமரபினர் வாழ்ந்தது நிஜமா னால்.... அரசே! அனேகமாக அது இங்குதான் இருந்திருக்க வேண்டும்
பூமியின் மையப்பகுதியில் உள்ள பெரும் கானகத்தில் ஓர் உயர்ந்த மலைத் தொடர் உள்ளது. அந்தப் பகுதியில் ஏதோ ஒரு கண வாயில் இந்த ரத்தினபுரியின் அடையாளங் களைக் காணலாம்.
மூப்பை வென்று என்றும் இளமையோடி ருக்கும் ரகசியம் அறிந்த தலைவர்களைக் கொண்டு அங்கு வாழ்ந்த மக்கள் என்ன ஆனார்கள்?
இந்தச் சுவடியில் குறிப்பிட் டுள்ளபடி பயங்கர நில நடுக்கமும் எரி மலையும் ஏற்பட்டு...




...தீக்குழம்புகள் வெடித்துச் சிதற... பந்து போன்ற தீக் கோளங்கள் ரத்தினபுரியின் மீது விழுந்து நாசமாக்கி இருக்கிறது...
கௌதமரே, வயோதிகத்தை வென்ற அந்த இனத்தவர் வாழ்ந்த இடத்தை ஆராயும் அதிகமாகிறது.
அங்கு இப்போது இடிபாடுகளைத்தான் காணமுடியும். பண்டைய நாகரீகம் பற்றி அறியலாம்.
ரத்தினபுரி நகரை அடைய, அபாயங்கள் நிறைந்த தேவஹுதி என்ற மகாநதியில் பயணம் செய்ய வேண்டும். நெடிதுயர்ந்த மலைகளில் ஏற வேண்டும். நதி நீரில் பயணிக்கவும்- அதே போதில் ஆகாயத்தில் பறந்து சென்று பார்க்கவும் கௌதமர் ஒரு யந்திரத்தை வடிவமைத்துக் கொடுத்தார்
(நமது ஓவியர், இன்றைய நவீன யந்திர வசதிகளை மனதில் கொண்டு அந்த சாதனத்தை உங்களுக்குக் காட்டி இருக்கிறார்!)
ரத்தினபுரியை ஆராய்வதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தபோது ஒருநாள் சகரன் எதிர்பாராத விதமாக வீரசேனனைக் காண்கிறான்.
வீரசேனரே.... நீங்கள்?
வணக்கம் இளவரசே!
காவலில் இருந்து தப்பிய கைதி நான். மன்னரின் நினைப்பில் நான் ஒரு துரோகி... தாய் நாட்டைக் காக்கும் என் கடமையைச் செய்து விலகிப் போனேன்.
சேனாபதியாரே ஏன் அப்படி திடீரென்று மறைந்து போனீர். அரசர் உம்மைத் தேடினார். நீர் இல்லாமல் போகவே வேதனைப் பட்டார்.


வீரசேனரே! நீர் குற்ற மற்றவர் என்பது சில நாட் களுக்கு முன்புதான் மன் னருக்குத் தெரிந்தது. உம்மைத் துரோகியாக்கி யது வேறு ஒருவன். உம்மிடம் மன்னிப்புக் கேட்க விரும்பினார் மன் னர். நீர் அவசரப்பட்டுத் தலைமறைவாகிவிட்டீர்
அப்படியா! என் மனம் இப்போதுதான் நிம்ம திப்பட்டது. ஆனாலும் நான் சுரங்கத்திலி ருந்து தப்பியோடி...
வீணாகக் குழம்பிக் கொள்ளாதீர்கள். மன் னரைக் காண்போம். வாருங்கள். ஒரு பய ணம் காத்திருக்கிறது உங்களுக்கு
மன்னர் திலீபனிடம் வீரசேனரை அழைத் துப் போகிறான் சகரன்.
அண்ணா... நீங்கள் தேடிக் கொண்டி ருக்கும் வீரசேனர்.
சேனாபதி, மகிஷா ன்களை வெற்றி கொள் வதற்குக் காரணமாக இருந்தீர். ஏன் மறைந்து போனீர்...? சூழ்நிலை உம்மை சந்தேகிக்கும் படி செய்து விட்டது. வருந்துகிறேன். நீர் நிரபராதி.
ரத்னபுரியைத் தேடிப் போகும் பயணத்தில் வீரசேனரையும் கலந்து கொள்ளும்படி கேட் டுக் கொள்ளுகிறார் மன்னர்.
தேவஹ்ருதி எவ்வளவு பெரியது... எத்தனை ஆழம்!
சகரா... நீ கருட வாகனத்தில் முன் னால் பறந்து போய்ப் பார்.
கருட வாகனம் என்னும் ஆகாயத்தில் பறக்கும் சாதனத்தில் கானகத்தின் மீதாகப் பறந்து நதியின் ஓட்டத்தை நோட்டமிட்டபோது...
ஐயோ, அதென்ன நதி நீரில்? ஏதோ அபாயம்...



அவன் கீழே இறங்கி மன்னரை எச்சரிக்க முற்படுமுன் அது நடந்துவிட்டது. ராட்சத நீர்யானைகள் படகைக் கவிழ்த்து விட்டன...
ஆஹ்...ஹ்...ஹ்!
மன்னர் படகிலிருந்து தூக்கி எறியப்பட்டு நீர்யானைகளால் சூழப்பட்டார்.
நினைவிழந்த மன்னர் திலீபனை நீர்யானை பந்தாடுகிறது.
ஆற்றில் விழுந்த வீர சேனர்,தம் உயிரையும் பொருட்படுத்தாமல் ராட்சத மிருகங்களி டையே புகுந்து, மன்ன ரை அணைத்துக் கொண்டு
சகரா! விரைந்து வா...
விரைந்து வருகிறான் சகரன். வீரசேனரின் ஒரு கை அந்த விமானத்தைப் பற்றிக் கொள்ள....
அதிர்ச்சியிலிருந்து மீண்ட திலீபன் வீரசேனரின் கரத்தைப் பற்றிக் கொண்டு -
உம் உயிரையும் பொருட்படுத் தாமல் என்னைக் காப்பாற்றினீர் வீரசேனரே! இந்தக் கடனை - உயிருக்கு உயிர் திருப்பிச் செலுத்துவேன்.
கரை காண முடியாமல் பரந்து கிடந்த தேவஹூதியாற்றில் தொடர்ந்து பயணப் பட்டு, பல அதிசயக் காட்சிகளைக் கண்டு பரவசப்பட்டார்கள்.



அந்த நெடும்பயணத்தின்போது....
அழிந்துபோன ரத்னபுரி ராஜ்யத்தையோ அல்லது அம்மக்களை ஆண்ட - என்றும் இளமையோடு வாழும் ரகசியம் அறிந்த பூசாரித் தலைவர்களைப் பற்றியோ தகவல்கள் கிடைக்குமானால் நாம் மேற்கொண்ட பயணம் பயனுடையதாக இருக்கும்.
வீரசேனர் சிந்தனை வயப்பட்டார்.
என்றும் இளமை - வலிமை! அந்த இரகசியத்தை அறிய என்ன பாடுபட்டாலும் தகும் - இல்லையா அரசே!
பல நாள் பயணத்துக்குப் பின் நெடிதுயர்ந்து நிற்கும் மலைத்தொடரைக் கண்டார்கள்.
இம்மலைத் தொடரின் ஏதோ ஒரு பள்ளத்தாக்கில்தான் அழிந்துபட்ட அந்த நகரம் உள்ளது. படகைக் கரை ஒதுக்கு...
மலையடிவாரத்தை அணுகினார்கள்.
இங்கு நாம் முகாமிடுவோம்.
இரவில் கூடாரத்தில் திலீபன் தம் திட்டத்தை விளக்கினார்.
விடியும்வரை நாம் மூவரும் முறை வைத்துக் காவல் இருப்போம். சூரியோதயத்துக்குப் பின் சகரன் மலைத்தொடரைப் பார்த்து வரட்டும்.


முதல் ஜாமக் காவலை வீரசேனர் ஏற்றார்.
திடீரென்று அவர் உடல் குலுங்கியது. சுரீர் என்று பூச்சிக்கடி போன்ற வலி.... அடுத்த விநாடி நினைவு இழந்து முகம் கவிழத் தரையில் விழுந்தார்.
அதிகாலையில் சகரன் தன் அண்ணாவைப் பரபரப்புடன் எழுப்பினான்.
அண்ணா... அண்ணா... வீரசேனர், அவரைக் காணோம்!
விடிந்து வெகுநேரம் வரை தேடினார்கள் - எவ்விதத் தடயமும் இல்லை
சகரா... நீ கருட விமானத்தில் ஏறிப் பறந்து தேடிப்பார்.
சரி அண்ணா.


சகரன் விமானத்தில் மலைமுகடு களை நோக்கி எழுந்தான்.
வீரசேனருக்கு என்ன ஆகி இருக்கும்?
மேலே மேலே உயர்ந்து பறந்தான் சகரன்.
இதற்குமேல் பறக்க முடியாது. அந்த மலை இடுக்கு வழியே நுழைந்து போய்ப் பார்ப்போம்.
இடைவெளி மூடிவில்லாமல் போகிறதே... குறுகலாகிறது.... திரும்பிவிடலாமா? ஆ... ஆண்டவா... அதோ... அங்கே...!
எவ்வளவு பெரிய நகரம்.... இதுதான் ரத்தினபுரியா? அழிந்த நகரம் என்றாரே
ரத்தினங்களைப் போலப் பொலிவுடன் ஜொலிக்கிறதே!
ஒரு பெரிய உப்பரிகையின் உச்சியில் தனது கருட விமானத்தை இறக்கினான் சகரன். பிரமிப்போடு அந்த அதிசய நகரைப் பார்த்துக் கொண்டிருக் கும்போது -
ஏதோ சப்தம் கேட்டுத் திரும்பினான்.



வித்தியாசமான உடையும் தோற்றமும் கொண்ட சிலர். அதில் ஒருவன் சகரனை நோக்கி வாயில் குழாயை வைத்து ஊத...
....அதிலிருந்து வெளிப்பட்ட எரிமுள் சகரனைத் தாக்க மறுவிநாடி அவன் நினைவிழந்து கீழே விழுகிறான்.
இவனையும் கொண்டுபோய் அந்த அயல் நாட்டுக் கைதிகளோடு கட்டிப் போடுங்கள். நான் இத்தகவலைத் தலைவர்களுக்கு அறிவிக்கிறேன்.
சகரனுக்கு நினைவு வந்தபோது தான் வீரசேனரின் அருகே கட்டித் தொங்கவிடப்பட்டிருப்பதை அறிகிறான்.
இளவரசே! நாம் ரத்தினபுரியில் இருக்கிறோம். அரசர் எண்ணியதுபோல் இது பாழடைந்த நகரமல்ல - பளபளக்கும் நகரம்.
நாம் விரைவில் இளமையின் ரகசியம் அறிந்த தலைவர்களை நேருக்கு நேர் சந்திக்கப் போகின்றோம்
இவர்களை வல்லமை மிக்க நம் தலைவர்கள் முன் கொண்டு செல்லுங்கள்.


திரிசூல் பிரஜைகளான சகரனும் - வீரசேனரும், பாதாளச் சிறையிலிருந்து - எதிரொலி கிளப்பும் பிரும்மாண்டமான தோர் அரங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.
இவ்விருவரும் அந்நிய நா_ _னர். உள வறிய வந்தவர்கள்.
வீரசேனரின் முணுமுணுப்பு மௌனத்தை கலைத்தது.
பூசாரித் தலைவர்கள் - குன்றா இளமையும் பலமும் பெறுவதற்கான ரகசியமறிந்தவர்கள்...
அந்த விந்தைத் தலைவர்கள் மேலிருந்து இவர்களை இமைக்காமல் பார்த்தார்கள்.
யார் நீங்கள்... ?
சகரன் கர்வத்துடன் கூறினான்.
என் பெயர் சகரன். திரிசூல் நாட்டின் இளவரசன். மன்னர் திலீபரின் சகோதரன். சமாதானத்தை நாடி வந்துள்ளோம்.
வெற்றி வீரர்கள் வாழும் பகுதிக்குள் புகுந்த அந்நியர் வாழ்நாள் முழுவதும் அடிமைகளாக இருக்க வேண்டியதுதான்.




ரத்தினபுரிக்கு வெளியே உள்ள நீர் இறைக்கும் ஏற்றத்தில் பணிபுரிய அனுப்பப்பட்டார்கள்.
அந்த நகரின் சாதாரண மக்களின் நிலையும் மோசமாகவே இருந்தது.காவலாளிகளின் சவுக்கு வீச்சுக்குப் பயந்து உழைத்தனர்.
ரத்தினபுரி மக்களில் ஒருவன் அவர்களின் தாகத்துக்கு நீர் அளித்தான். அப்போது -
முட்டாள்களே குடியுங்கள். நீங்கள் மூடர்கள்தான். இங்கு வலிய வந்து மாட்டிக் கொள்ளுவார்களா?
இங்கு பண்டைய நகரின் பாழடைந்த இடிபாடுகளே இருக்குமென்று நினைத்தோம்.
எரிமலை வெடிப்பினால் பண்டைய நகரம் அழிந்தது. மக்களின் வியர்வை வேதனையின் மீது புதிய நகரை உருவாக்குகிறார்கள் பூசாரிகள். வேலை செய்வது எங்கள் கடமை.
சகரனும் வீரசேனரும் பகல் முழுவதும் உழைத்தார்கள் - இருட்டியதும் சங்கிலியோடு தூங்கினார்கள். அவர்களை நாடி உதவி வந்து கொண்டிருந்தது.
தன்னை யாரோ உலுக்குவதை உணர்ந்த சகரன் கண் விழித்துப் பார்க்க -
அண்ணா, நீங்கள் எப்படி?
மலைமீது ஏறி உன்னைப் பின் தொடர்ந்தோம்.


விரைவில் அவர்கள் விலங்கை அகற்றினார்கள் திலீபனும் அவரது உதவியாளர்களும்.
ஐவரும் நகர வீதியைக் கடக்கும் போது...
நில்....!
உயிர் தப்ப ஓடுங்கள்!
இருள் மண்டிய தெருவினூடே ஓடினார்கள்.. காவலர்கள் துரத்திவர. ஒரு கதவு திறக்க....
உள்ளே வாருங்கள்....
திரிசூல் வாசிகளை உள்ளுக்கு இழுத்துக் கொண்டு கதவு மூடப்பட்டது.
அவர்கள் பிடிபடாவிடில்..
நம் தலை பறிபோகும்.
இதனிடையே திலீபரும் அவர் சகாக்களும் காப்பாற்றி அழைத்துச் செல்லப்பட்டனர்.
மக்கள் கூடியுள்ள மலைக்குகைக்கு வந்தார்கள்
சகரா இவர்கள் யார்?
இந்த நகரின் அப்பாவி மக்கள் என்று நினைக்கிறேன். கொடூரமான தலைவர்களால் துன்பப்படுகிறவர்கள்.



அந்த மக்கள் இவர்களை மௌனமாக வரவேற்றார்கள்.
நீங்கள் புரட்சியாளர்களா?
அந்நியர்களே! உங்களை எங்களில் ஒருவராகக் கருதுகிறோம். நீங்கள் தப்பியதற்காக பூசாரிகள் உங்களுக்கு மரண தண்டனை அளிப்பார்கள். உங்களை ஒளித்து வைப்போம்.
பூசாரிகளும் போர் வீர இனத்தவரும் எங்களைத் துன்புறுத்துவது குறித்து ரகசியமாகக் கூடி விவாதிக்கிறோம். விடுதலை பற்றிக் கனவு காண்கிறோம். வேறு என்ன செய்ய முடியும்?
சகரனின் வாள் உயர்ந்து தீவட்டி ஒளியில் மின்னியது.
எதுவும் செய்யலாம். இருளிலிருந்து வெளிச்சத்துக்கு வாருங்கள். விடுதலைக்காகப் போராடுங்கள்.
சகரனின் பேச்சு புரட்சியாளர்களிடையே புத்துணர்வை ஏற்படுத்தியது!
உத்தரவிடுங்கள். அதை நிறைவேற்ற உயிரையே விடுவோம்.
ஒரு தலைவர் கிடைத்தார்!
திலீபன் போராட்டத் திட்டம் வகுத்தார்
நாளை குடிமக்கள் அனைவரும் நெருப்பு ஆலயத்தில் கூடுவோம். பூசாரிகள் மர்மச் சடங்குகளைச் செய்வார்கள்.
நாம் நாளையே போராடத் தொடங்குவோம்.
தளபதி வீரசேனர் அன்றிரவு தூங்கவில்லை.
இறவா வாழ்வின் ரகசியம். மூப்பில்லா இளமை அடைய நான் எதையும் செய்வேன்.



ரத்தினபுரியின் மீது தன் இளங்கதிர்களைப் பரப்பியபடி ஆதவன் எழுந்த போது வீரசேனர் தம் மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டு நகர வீதிக்கு வந்தார்.
என்ன தேசபத்தி வேண்டிக்கிடக்கிறது? துரோகமிழைக்காமல் விசுவாசத்துடன் இருந்தால் என்றும் இளமையோடிருக்க முடியுமா?
காவலர்களின் பார்வையில்படக் கைதானார்.
நேற்றிரவு தப்பியவரில் ஒருவன் இவன்.
விந்தைத் தலைவர்களின்முன்னே விசாரணைக் கூடத்தில் நிறுத்தப்பட்டார் வீரசேனர்.
உங்கள் முன் தன்னைக் கொண்டு செல்லும்படி கேட்டுக் கொண்டான். புரட்சி பற்றிய ஏதோ ரகசியம் தெரியுமாம் இவனுக்கு.
கூறலாம்!
திரிசூல் நாட்டு மன்னர் திலீபர், உமது மக்களுக்குத் தலைமைதாங்கி உங்களை விரட்டப் போகிறார். திட்டத்தின் ரகசியங்களை நான் கூறுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை!
என்றும் இளமையும் வலிமையுமாக வாழும் ரகசியத்தைக் கூற வேண்டும்! என்ற வீரசேனரின் நிபந்தனையைக் கேட்ட பூசாரிகளின் முகத்தில் ஏளனப் புன்னகை நெளிந்தது.
நம்மில் ஒருவராக ஆசைப் படுகிறான்!
ஹ.... ஹ.... ஹா.... ஹா!


அதன் பின் -
உன் விருப்பம் நிறைவேற்றப்படும். புரட்சி ஒடுக்கப்பட்டதும் எங்கள் இளமை ரகசியத்தை உனக்குத் தெரிவிப்போம்!
நெருப்பு ஆலயத்தில் இன்று புரட்சி வெடிக்கப் போகிறது. திலீபரே அதைத் துவக்கி வைக்கப் போகிறார்!
புராதன வழக்கப்படி, ரத்னபுரி மக்கள் தீக்கோயிலில் அந்தப் புனித தினத்தில் வந்து குழுமினர். ஒரு பீடத்தில் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது நெருப்பு.
பூசாரி வீரர்களும் தலைவர்களும் தோன்றியதும் ஆலயத்தில் அமைதி நிலவியது. ஒரு பூசாரித் தலைவர் பேசினார்.
சாகாத் தன்மையையும் குன்றா இளமையையும் வலிமையையும் வழங்கும் புனிதமான இத்தீக்கு வணக்கம் தெரிவிக்கிறோம்.
அப்போது திலீபரின் குரல் ஓங்கி ஒலித்தது!
ரத்னபுரி மக்களே! எழுங்கள் - விடுதலைப் போராட்டத்தைத் தொடங்குங்கள்.


மறைத்து வைத்திருந்த ஆயுதங்களை வெளியிலெடுத்த பொது மக்கள் காவலர்கள் மீது பாய்ந்தனர்.
யீய்ய்ய்யீய்!
கொடுங் கோலாட்சி ஒழிக!
அடுத்தகணம் எக்காளம் முழங்க நாலாபக்கமிருந்தும் அம்புகள் மழையாகப் பொழியலாயிற்று
பொது மக்கள் சரிந்து விழுவதைக் கண்டு புரட்சி நசுக்கப்பட்டு விட்டதை உணர்ந்தார் திலீபர்.
ஆஹ்... அரசே!
நாம் பொறியில் சிக்கினோம்.
திரிசூல் மன்னரும் மற்றவர்களும் வளைக்கப் பட்டுக் கைதானார்கள். அப்போது திலீபன் பார்த்தார்...
வீரசேனர்...?
(தொடரும்)






எந்தக் கால் எதனுடையது?

- போட்டி

இங்கே பத்து விலங்குகளின் கால்கள் தரப்பட்டுள்ளன. அவைகளுக்கு உரிய பத்து விலங்குகளும் தனியாகத் தரப்பட்டுள்ளன. விலங்கின் காலை மட்டும் எடுத்து உரிய விலங்கின் படத்தில் ஒட்டி, கூப்பனையும் பூர்த்தி செய்து அனுப்புங்கள். வெளிநாட்டு வாசகர்கள் இந்தியாவில் உள்ள நண்பர் அல்லது உறவினர் ஒருவரின் முகவரியைத் தர வேண்டும். கூப்பனில்லாமல் வருபவை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.



எந்தக் கால் எதனுடையது ? - போட்டி

பெயர் : ....

வயது : ....

முகவரி : ....

....

பின்கோடு ....

முடிவு தேதி : 31.3.95

• முதல் பரிசு



இந்த முறை கேமல் சேம்ப் வண்ணந் தீட்டுங்கள் போட்டியில் பரிசுக்குரியனவற்றைத் தேர்ந்தெடுக்க வந்த பிரபல ஓவியர் மணியம் செல்வன் திக்குமுக் காடிப் போனார். எல்லாவற்றிற்குமே பரிசு தரக்கூடிய அளவுக்கு வண்ணக் கலவைகள்; கற்பனைகளைச் சேர்த்துத் திகைக்க வைத்திருந்தார்கள் கலந்து கொண் டவர்கள்.

முதல் பரிசு
T. ரமேஷ்குமார்
சென்னை - 63.

இரண்டாவது பரிசு
N.B. முருகன்,
பழனி.



• திரு. மணியம் செல்வன் பரிசீலிக்கிறார்

கேமல் சேம்ப் போட்டி முடிவு!

• இரண்டாம் பரிசு



மூன்றாவது பரிசு
N.S. பரத்,
சென்னை - 33.

பரிசு பெற்ற மூன்றும் இங்கு வெளியாகி உள்ளன. இவை தவிர நூறு ஆறுதல் பரிசுகளுக்கு உரியவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு சேம்ப் ஸ்டிக்கர்கள் அனுப்பப் பட உள்ளன. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி. பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.

புகைப்படம் : காமிரா திருஞானம்

• மூன்றாம் பரிசு



மூக்குக் கண்ணாடி போடுமா பேய்?

இரவு பன்னிரண்டு மணிக்கும் மேலாகி விட்டது. குளிர் காற்று காது வழியாக மண்டைக்குள் போய் நடுங்க வைத்தது. சுற்றிலும் ஒரே பயங்கர அமைதி. அதுவே கிலிபிடிக்க வைத்தது.

அந்த நட்ட நடு இரவில்; ஊரே உறங்கிக் கொண்டிருந்த குளிர் இரவில் தன்னந்தனி ஆளாக ஏரிக்கரைமேல் நடந்து கொண்டிருந்தான் வேலன். எதிரே கரை இறக்கத்தில் ஓர் ஆலமரம். கதைகளில் வரும் இராட்சசனைப் போல் தலை விரித்தாடிக் கொண்டு, சூழ்நிலையின் பயங்கரத்தை இன்னும் கூட்டிக் கொண்டிருந்தது.

அந்த ஏரிக்கரை ஆலமரத்தில் ஒரு பேய் இருப்பதாக கிராம மக்கள் உறுதியாக நம்பி வந்தனர். நான்காவது ஆட்டம் சினிமா பார்த்து விட்டு வந்த ஒரு தலைப்பாக்காரரை அந்தப் பேய் அடித்து விட்டு, மண்டையைப் பிளந்து விட்டதாம். அது நினைவுக்கு வந்ததும் வீட்டுக்குத் திரும்பி ஓடிவிடலாமா என்று கூட வேலன் எண்ணினான். ஆனாலும், அப்பா பயங்கரமான கண்டிப்புக்காரர். அவருக்குக் கோபம் வந்து விட்டால் வீடே நடுங்கும். ஏரியின் கீழ்க் கரையில் அவன் அப்பாவுக்கு ஒரு விளைநிலம் இருந்தது. அதில் நெல் சாகுபடி செய்திருந்தார். தினமும் காலையில் ஒரு முறை நிலத்தைப் பார்த்துவர, ஏரிக் கரைக்குப் போய்விட்டு வருவார். அன்று காலை போனபோது மறந்து போய் மூக்குக் கண்ணாடியை வயக்காட்டில் நெல்லி மரத் தடியில் வைத்து விட்டு வந்துவிட்டார். அதை எடுத்துவரத்தான் வேலனை அனுப்பியிருக்கிறார். அது இல்லாமல் அவன் திரும்பிப் போனால் அவ்வளவுதான்! அதை விட பேயிடமே சிக்கித் தவிக்கலாம் என்று எண்ணினான் வேலன்.

ஆக்க, இன்னும் இரண்டே எட்டு. அதைத் தாண்டிவிட்டால் ஆலமரத்தடி. அதையும் தாண்டி விட்டால் அவர்கள் நிலம்தான். நேராக ஓடி, நெல்லி மரத்தடியில் இருக்கும் அப்பாவின் மூக்குக் கண்ணாடியை எடுத்துக் கொண்டு ஓடிவந்துவிட வேண்டியதுதான்.

சட்டென்று 'ஹா' என்ற அலறல். மின்னலின் வெளிச்சத்தில் மரத்தடியில் ஓர் எலும்புக் கூடு நிற்பது தெரிந்தது. வேலன் கத்த நினைத்தான். பயத்தால் நாக்கு எழும்பவில்லை. மறுபடி ஒரு மின்னல். ஒரு நொடியில் அந்த எலும்புக்கூடு பளபளத்தது!

"டேய்! உயிர் மேல ஆசை இருந்தால் ஓடிப்போ!" என்று கொக்கரித்தது பேய்.

'சரி, இன்றோடு நம்முடைய வாழ்க்கை முடியப் போகிறது'



கே. ஜெகன்நாதன்

என்று முடிவு செய்து கொண்ட வேலன், சரி, நாம்தான் இப்படிப் பேய்க்குப் பலியாகப் போகிறோம். போகும் போது மற்றவர்களுக்கு ஏதாவது நன்மை செய்து விட்டுப் போகலாமே' என்று எண்ணினான்.

குனிந்து வயலில் இருந்த கெட்டிக் களிமண் உருண்டையை எடுத்து எலும்புக் கூட் டின்மேல் அடித்தான்.

"ஐயோ!" என்ற அலறல் கேட்டது! அடுத்து மின்னிய மின்னல் ஒளியில் எலும்புக் கூடு வயல் வரப்பில் ஓடுவது தெரிந்தது!

'பேய்களுக்குக் கால்கள் கிடையாது என்பார் களே! இந்த எலும்புக் கூட்டுப் பேய் இரண்டு கால்களால் வயல் வரப்பில் மனிதனைப் போல் ஓடுகிறதே!', என்று எண்ணிய படி, தங்கள் வயலுக்கு விரைந்தான் துணிந்து விட்ட வேலன். அப்பாவின் மூக்குக் கண்ணாடியை எடுத்துக் கொண்டு திரும்பி விரைந்தான்.


ஆலமரத்திற்குப் பக்கத்தில், வயல் வரப்பில் ஏதோ முனகல் சத்தம் கேட்டது. இருட்டில் எதுவும் தெரியவில்லை. பேயிடமிருந்து தப்பித்ததே பெரிய காரியம். எதற்காக வேண்டாத காரியத்தில் நாமாக இறங்கித் தவிப்பது?' என்று நடையைப் போட்டான் வேலன்.

மின்னல் ஒரு கணம் மின்னி மறைந்தது. சொக்கலிங்கனின் வயல் வெளியில் நீர்கட்டியிருந்தார்கள். அங்கே அந்த சொத சொதப்பான சேற்றில் எலும்புக் கூடு விழுந்து கிடந்தது தெரிந்தது! முனகல் சத்தம். அதனிடமிருந்துதான் வந்தது!

வந்தது வரட்டும் என்று வேலன் வய லில் இறங்கினான். காலில் ஏதோ தட்டுப் பட்டது. எடுத்துப் பார்த்தான். மூக்குக் கண் ணாடி!

''பேய் மூக்குக் கண்ணாடிகூடப் போடுமா!'' என்று வேலனுக்குச் சந்தேகம் எழுந்தது. ஒரே ஓட்டமாக ஊருக்கு ஓடிவந்து அப்பாவிடம் கூறினான். அடுத்த பதினைந்தாவது நிமிடம் ஹரிகேன் விளக்கை எடுத்துக் கொண்டு ஊர்க்காரர்கள் பின்தொடர, முன்னே வழிகாட்டிக் கொண்டு வந்தான் வேலன். பிறகு என்ன?

நள்ளிரவில் கள்ளச் சாராயம் காய்ச்ச ஆலமரத்தடியைத் தேர்ந்தெடுத்து, மனிதர்கள் யாரும் வந்து விடாது இருக்க, எலும்புக் கூடு உடையணிந்து பேயாக நடித்து ஊராரைப் பயப்படுத்தி வந்த சொக்கப்பன் பிடிப்பட்டான். அவன் பிடிபடக் காரணமாக இருந்த வேலனை ஊரார் பாராட்டினர்.



உங்கள் நூலகம்

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம், தொகுப்பு வள்ளிதாசன் & ம.மணிமாறன், பக்.48. ரூ.16/- சயன்ஸ் பப்ளிகேஷன்ஸ், 6. ஏ.ஆர்.கே.காலனி, (முதல் தளம்), எல்டாம்ஸ் சாலை, சென்னை- 18.

ஆங்கிலத்தில் activity என்று கூறப்படும் பொழுது போக்கு விளையாட்டுகள் பலவற்றை இந்த நூல் விளக்கு கிறது. வீட்டுக்குள் ஆடுபவையும் இருக்கின்றன. 'நாடக அறிமுகம்' என்ற பகுதி உரையாடல்களைப் பெருமளவிற் குத் தவிர்த்து, நடிப்பால் கதையை ஓட்டும் உத்தியை விளக்குகிறது. வயதான குழந்தைகளை இது மிகவும் கவரக் கூடிய பகுதி. விளக்கப் படங்கள் உயிர்த் துடிப்புடன் இருக் கின்றன.

குழந்தைகளுக்கான நீதிக் கதைகள் (இரண்டு) வாண்டுமாமா பக்.68 ரூ.20/- கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை-17.

வாண்டுமாமாவின் 43 அருமையான குட்டிக் கதைகள் அடங்கிய நூல் இது. ஒவ்வொன்றும் ஒரு நீதியை அல்லது பண்பை வலியுறுத்துகிறது. ஒவ்வொரு கதைக்கும் அழகான படம் இருப்பதும் பெரிய குண்டு எழுத்தில் அச்சாகி இருப்பதும் நூலுக்கு மேலும் மெருகூட்டுவதாக அமைகிறது. சிறுவர்களுக்கு மட்டுமல்ல, குழந்தைகளுக்கு என்ன கதை கூறுவது என்று தெரியாமல் திண்டாடுவோருக்கும் இது பயன்படக்கூடிய நூல்.

மாயமில்லே மந்திரமில்லே... தொகுப்பு ஏ.எஸ்.சூரியகாந்தம், பக்.48, சயின்ஸ் பப்ளிகேஷன்ஸ், 6. ஏ.ஆர். காலனி (முதல் தளம்), எல்டாம்ஸ் சாலை, சென்னை-18.

மற்றவர்களைத் திகைக்க வைக்கும் பல வித்தைகளைச் செய்யும் முறைகள் இதில் விளக்கப் பட்டுள்ளன. படிக்கப் படிக்க இப்படியும் செய்ய இயலுமா என்ற ஐயப்பாடு எழுகிறது. தீ பிடித்தலுக்கும், எரியும் கற்பூரத்தை வாயில் இட்டுக் கொண்டு அணைப்பதற்கும், மணிக் கணக்கில் சமாதி நிலையில் புதைந்திருப்பதற்கும் அடிப்படைக் காரணங்கள் என்ன என்பதை மிக அழகாக விளக்கி யிருக்கிறார் தொகுப்பாளர். அறிவியல் உண்மைகளின் அடிப்படைகளை விளக்கமாகக் குழந்தைகளுக்குத் தர முன்வந்திருப்பதை எத்தனை பாராட்டினாலும் தகும்.

பொற்காலம் பிறக்கிறது!

தமிழ் நாட்டுச் சிறுவர்களுக்கு ஒரு பொற்காலமே பிறந்து விட்டது என்று கூறலாம். வாங்கிப் பயனடைய வேண்டி புத்தகம். படிக்கும்போது நாமும் செய்து பார்க்கலாமே என்ற ஆர்வம் தோன்றுவது உறுதி. சிறுவர்கள், பெரிய வர்களின் உதவியோடுதான் சிலவற்றைச் செய்யலாம். படங்கள் மேலும் அழகூட்டுகின்றன.

இனிய மழலை முத்துக்கள்! கவிஞர் ஜெய்வாணன், பக்.96. ரூ.15/- விக்டரி பதிப்பகம், 21, இராஜேந்திர பிரசாத் சாலை, கே.கே.நகர், சென்னை-64.

குழந்தைகளுக்குப் பிடித்தமான பொருள்களில் இனிய சந்தங்களோடு எழுதப்பட்ட பாடல்களின் தொகுப்பு. பாடல்கள் எல்லாமே சொல் வளம் செறிந் தவை. மற்ற தொகுப்புகளில் அதிகம் இடம் பெறாத 'மருத்துவர்' பற்றிய ஒரு பாடலைப் பாருங்கள்.

கையை நீட்டச் சொல்லுவார்!
கண்ணைக் காட்டச் சொல்லுவார்!
நாக்கை நீட்டச் சொல்லுவார்!
நறுக்கென்று ஊசிப் போடுவார்! (பக்.72)

குழந்தைகள் கண்டிப்பாகத் தாளம் போட்டுப் பாடுவார்கள். நல்ல முயற்சி.

ஓரிகாமி காகிதம் மடிக்கும் கலை, (அரவிந்த் குப்தா) தமிழாக்கம் அ.அமலராஜன், பக்.40. ரூ.12/- சயின்ஸ் பப்ளி கேஷன்ஸ், 6. ஏ.ஆர்.கே.காலனி, (முதல்தளம்) எல்டாம்ஸ் சாலை, சென்னை-18.

ஆங்கிலத்தில் ஓரிகாமியைப் பற்றிப் பல புத்தகங்கள் வெளிவந்துள்ளன. ஜப்பானில் பிரபலமான இந்தக் காகிதக் கலை, சிறுவர்களின் கலைத்திறனை வளர்த்து, அவர்கள் கற்பனைக்கு ஒரு வடிகாலாகவும் அமையும். தமிழில் விரல் விட்டு எண்ணக்கூடிய புத்தகங்களே இப்பொருளில் வந் துள்ளன. இந்த நூலும்கூட தமிழாக்கமே. போதிய விளக்கப் படங்களுடன் மிகத் தெளிவாக ஒவ்வொரு செய் பொரு ளும் விளக்கப்பட்டுள்ளது. பயனுள்ள நூல். பரிசளிக்க ஏற்றது.

உங்கள் நூலகம் பகுதியில் சிறுவர்க்கான நூல்களும் அறிவியல் பொது நூல்களும் மட்டுமே மதிப்புரை செய்யப்படும். நூலின் இரு பிரதிகளை ஆசிரியர் கோகுலம், 47 ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை-97 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். கட்டணம் இல்லை. புத்தகம் வாங்க விரும்புவோர் பதிப்பாளர் முகவரிக்கே கடிதம் எழுத வேண்டும்.



அக்காவும் தங்கையும்

ஓர் ஊரில் இரு சகோதரிகள் வசித்து வந்தனர். மூத்தவள் பெயர் பூங்கொடி. அவள் பெயரில்தான் மென்மை இருந்ததே ஒழிய அவள் மனத்தில் சிறிதும் நல்ல குணங்கள் இருக்கவில்லை. இளையவள் பூங்கோதை. பெயருக்கேற்றபடி அன்பும், நல்ல பண்புகளும் கொண்டவள். தங்கைக்கு அக்கம் பக்கத்தாரிடம் உள்ள செல்வாக்கைக் கண்டு அக்காவுக்கு ஒரே பொறாமை. விடாமல் ஏதாவது ஒரு காரணத்தை வைத்துத் தங்கையைக் கொடுமைப்படுத்தி வந்தாள்.


தமக்கைக்குப் பாரமாக இருக்க விரும்பாத பூங்கோதை தன் பிழைப்புக்கு வழி தேடி வேற்றூர் செல்ல முற்பட்டாள். சிறிது கட்டுசாதமும், ஒரு சிறு மண் கூஜாவில் நீரும் எடுத்துக் கொண்டு தன் பயணத்தைத் துவக்கினாள். அக்கா கண்டுகொள்ளவில்லை.

வழியில் ஒரு பெருங்காடு தங்கையை வரவேற்றது. காட்டினுள் நெடுந்தூரம் நடந்து சென்ற பூங்கோதை ஓர் ஆற்றங்கரையை அடைந்தாள். பசியும், களைப்பும் மேலிட்டதால் தான் கொண்டு வந்த உணவை உண்டாள். நீரருந்தி சற்று இளைப்பாறிக் கொண்டாள்.

அந்த இடத்தை விட்டுக் கிளம்புமுன் காலியாகி விட்ட தண்ணீர் கூஜாவில் மீண்டும் நீர் நிரப்ப ஆற்றை நோக்கி நடந்தாள். ஆற்றின் கரையில் ஒரு பெரிய பாறை இருந்தது. அதன் அடியில் ஒரு குறுஞ்செடி வாடி வதங்கித் தவிப்பதைக் கண்டு மனம் வருந்தினாள். அப்போது செடி அவளை நோக்கி, "பெண்ணே, தயவு செய்து ஆற்றிலிருந்து நீர் மொண்டு இப்பாறை நனையுமாறு ஊற்றுவாயா?' என்று கெஞ்சிக் கேட்டது. மனமிரங்கிய பூங்கோதை கூஜாவில் நீர் முகர்ந்து வந்து பாறை மேல் ஊற்றினாள். ஆனால் எவ்வளவு நீர் ஊற்றியும் பாறை வறண்டே கிடந்தது. ஊற்றிய எல்லா நீரும் மாயமாய் மறைந்து கொண்டிருந்தது.

ஆயினும் பூங்கோதை சற்றும் சளைக்காமல் தொடர்ந்து நீரைக்

கி. ராஜராஜேஸ்வரி



''கதைக்கு கால் இல்லைனு சொல்லுவாங்களே, ஏன்னு தெரியுமா உனக்கு?''

''தெரியலையே....''

''கால் இருந்தா அதுதான் காதை ஆயிடுமே!''

— சீர்காழி வி. ரேவதி

கொண்டு வந்து ஊற்றிக் கொண்டேயிருந்தாள். உடம்பு களைத்துப் போனது. நெற்றி வியர்த்தது. அப்படி நெற்றியில் திரண்ட வியர்வைத் துளி ஒன்று பாறையில் விழுந்தது. மறுகணமே பாறையினின்றும் ஈரம் கசிந்து பாறை முழுவதும் நனைந்தது. பூங்கோதை திகைத்து நின்றாள். பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்தச் செடி ஒரு தேவதையாக உருவெடுத்தது!

அவளை நோக்கிப் புன்னகைத்த தேவதை, 'பெண்ணே உன் இரக்க சிந்தையைக் கண்டு மகிழ்ந்தேன். உனக்கு என்ன வேண்டும் கேள்?'' என்றது.

பூங்கோதை தேவதையைப் பணிந்து, "தாயே, நான் என்றும் இரக்க சிந்தையோடு வாழ அருள் புரிய வேண்டும்" என்று வேண்டினாள்.

பூங்கோதையின் தன்னலமற்ற குணத்தைக் கண்டு மகிழ்ந்த தேவதை, ஒரு மண் பாத்திரத்தை அவளுக்குக் கொடுத்தது. "இது சாதாரணமான பாத்திரம் அல்ல. வேண்டும் போது வேண்டிய உணவை இது உனக்குக் கொடுக்கும்" என்று கூறி மறைந்தது. பாறையில் மறுபடி குறுஞ்செடி தோன்றியது.

பூங்கோதை மகிழ்ச்சியோடு வீட்டுக்குத் திரும்பினாள். உணவுக்கு வழி கிடைத்து விட்டதால் மீண்டும் தன் தமக்கையிடம் சென்றாள். அவளைக் கண்ட பூங்கொடி கடுகடுப்புடன், "ஒழிந்து போனாய் என்று நிம்மதியாய் இருந்தேனே. எங்கு வந்தாய் மறுபடி?" என்று கனலாகக் கேட்டாள். பூங்கோதை நடந்தவற்றைக் கூறி தேவதை கொடுத்த பாத்திரத்தையும் காட்டினாள்.

அக்கா, அடக்க மாட்டாத கோபத்துடன் தங்கையைப் பார்த்தாள். "சுத்த அறிவிலியாக இருக்கிறாயே! தேவதையிடம் பொன்னும், மணியும் பெற்று வந்திருந்தால் உணவும் கிடைக்கும். ஆடம்பரமாகவும் வாழலாமல்லவா? இப் பாத்திரம் வெறும் உணவை மட்டும்தானே கொடுக்கும்? முட்டாளே" என்று ஆத்திரத்துடன் திட்டினாள். அன்று இரவு அக்கா ஒரு வெள்ளிக் குடத்துடன் காட்டை நோக்கிக் கிளம்பினாள்.

நெடுந்தூரம் சென்று தங்கை குறிப்பிட்ட ஆற்றை அடைந்தாள். அங்கிருந்த பாறையில் வதங்கிய செடியைக் கண்டதும், அது ஏதும் சொல்வதற்கு முன் தானாகவே குடத்தில் நீரை மொண்டு அதன் மீது 'கடகட' என்று ஊற்றினாள். இதனால் செடி பெரிதும் உடைந்தும், வளைந்தும் விட்டது. எனினும் பாறை நனையவுமில்லை; தேவதை தோன்றவுமில்லை! வெறுப்படைந்த

பூங்கொடி, பொறுமையிழந்து அந்தத் தேவதையைப் பல வாறாகத் திட்டத் தொடங்கினாள்.

இதனால் வெகுண்ட தேவதை கோபத்துடன் அவள் முன்தோன்றியது. தேவதையைக் கண்ட பூங்கொடி அவசரம் அவசரமாக, "என் தங்கையைப் போல என்னை ஏமாற்ற முடியாது. எனக்குப் பொன்னும் பொருளும் ஏராளமாக வேண்டும்" என்றாள். அவளது பேராசையைக் கண்டு ஆத்திரமடைந்த தேவதை பூங்கொடியை நாயாகப் போகுமாறு சபித்து விட்டு மறைந்தது.

நாயாக மாறிய பூங்கொடி வருத்தத்துடனும், வேதனையுடனும் வீடு திரும்பியது. பூங்கோதையின் முன்நின்று கண்ணீர் வடித்தது. நாயைக் கண்டு பரிதாபப்பட்ட பூங்கோதை அதற்கு உணவளித்தாள். ஆனால், நாய் அதைத் தொடாமல் தொடர்ந்து கண்ணீர் வடித்தது. பின் பூங்கோதையின் கையிலிருந்த மண் பாத்திரத்தைக் கண்டு குரைத்தது.

இதையெல்லாம் கவனித்த பூங்கோதை அந் நாய் தன் அக்காவாகத்தான் இருக்க வேண்டும் என்று உணர்ந்து கொண்டாள். பேராசை காரணமாக தேவதையின் கோபத்துக்கு ஆளாகி, இந்தக் கதியை அடைந்திருக்க வேண்டும் என்றும் ஊகித்துக் கொண்டாள். அக்காவின் நிலை கண்டு வருத்தமும் வேதனையும் அடைந்தாள். ஒரு முடிவுக்கு வந்தவளாய் தேவதை தந்த பாத்திரத்தையும் தன் கூஜாவையும்



எடுத்துக் கொண்டு நாயையும் உடனழைத்துக் கொண்டு காட்டிற்குச் சென்றாள்.

ஆற்றை அடைந்ததும் மனத்தில் தேவதையை வணங்கியவாறே கூஜாவில் ஆற்று நீரை எடுத்து வந்து பாறையின் மேல் ஊற்றினாள். உடனே தேவதை தோன்றியது. "பெண்ணே நீயா! மீண்டும் என்னை எதற்காக அழைத்தாய்?" என்று கேட்டது.

பூங்கோதை தேவதையை வணங்கி, "தாயே, முதலில் என்னை மன்னிக்க வேண்டும். என் அக்கா அறியாமல் செய்த பிழையை மன்னித்து அவளுக்கு சுயஉருவைத் தர வேண்டும். அத்துடன் பிரச்சினைக்குக் காரணமான இப் பாத்திரத்தையும் தாங்களே ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று பணிவுடன் வேண்டினாள்.

அவளது நல்ல உள்ளத்தைக் கண்டு மகிழ்ந்த தேவதை, "உன்னை நான் பாராட்டுகிறேன். கொடுத்த பொருளைத் திரும்பப் பெறுவது அழகல்ல. எனவே, அப் பாத்திரம் உன்னிடமே இருக்கட்டும். உனக்காக உன் தமக்கையை மன்னிக்கிறேன்" என்றது.

உடனே பூங்கொடி சுயஉருவையடைந்தாள். பின் தேவதையின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கோரினாள். தேவதையும் அவளை மன்னித்து வாழ்த்தியது.


பூங்கோதை யோசித்து யோசித்து தேவதையிடம், "தாயே நான் ஒன்று கேட்காலாமா?" என்று தயங்கினாள்.

தேவதை 'கேள்' என்றது.

"தாயே, தேவதையாகிய தாங்கள் இவ்வாற்றங்கரையில் பாறையினடியில் வாடிய செடியாக இருப்பதன் காரணம் என்ன?" என்று கேட்டாள்.

தேவதையின் முகத்தில் வருத்தம் குடிகொண்டது. மெல்லிய குரலில் தன் கதையைக் கூறியது. "நான் வானுலகில் வாழும் தேவதை. ஒருமுறை என் தோழிகளுடன் இக் காட்டிற்கு வந்த போது இவ்வாற்றில் ஒரு முனிவர் நீரருந்திக் கொண்டிருந்தார். நான் உடனே "முற்றும் துறந்த முனிவரால் தாகத்தை அடக்க முடிய வில்லையோ?" என்று கேலி செய்தேன். கோபமுற்ற அவர் என்னை இவ்வாறு சபித்து விட்டார். நீருக்கருகிலேயே இருந்தாலும் பாறையின் அடியில் இருப்பதால் நீரின்றி தாகத்தால் தவித்து வாடி வதங்கும் செடியாக சபிக்கப்பட்டேன். என் தவறை உணர்ந்து அவரிடம் மன்னிப்புக்கு மன்றாடினேன். என் நிலை

"ஒரு மணி நேரமா என்னடா படிக்கிறே?"
"நிமிடக்கதைடா!"
— சீர்காழி வி. ரேவதி






கண்டு மனமிரங்கிய முனிவர், 'இரக்க சிந்தையுள்ள மூவர் இவ்வாற்றிலிருந்து நீர் எடுத்து இப் பாறை நனையுமாறு ஊற்றினால் நீ உன் உருவை படிப்படியாகப் பெறுவாய்' என்று சாப விமோசனமளித்தார். அவரே முதலில் நீரெடுத்து ஊற்றினார். எனவே நான் செடியாக இருந்தவாறே பேசும் சக்தியைப் பெற்றேன். பின், நீ நீர் ஊற்றியதால் தற்காலிகமாக என் சுயஉருவைப் பெற முடிந்தது. அதனால்தான் உங்களிடம் இப்போது சுய உருவில் நின்று பேச முடிகிறது. ஆயினும் என் கால்கள் இப் பாறையில் புதைந்தே உள்ளன. மூன்றாவதாக யாராவது நீர் ஊற்றினால்தான் முழு சுய உருவையும் என்னால் பெற முடியும்' என்று முடித்தது தேவதை.

மனம் மாறித் திருந்தியிருந்த அக்கா, தேவதையின் கதையைக் கேட்டுக் கழிவிரக்கம் கொண்டாள். "நானே மீண்டும் முயன்று பார்க்கிறேனே?" என்று கேட்டுக் கொண்டே கூஜாவால்தானே நீர் மொண்டு வந்து பாறையில் ஊற்றினாள். மனம் திருந்திய அவள் கரத்தில் பட்டு வழிந்த நீர் பாறையைத் தொட்டதும் பாறை மறைந்தது. தேவதை முழு உருவத்தையும் பெற்றது.

பூங்கொடியும், பூங்கோதையும் மனமகிழ்ந்தனர். தேவதையும் மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு நன்றி கூறி மறைந்தது. சகோதரிகள் இருவரும் மகிழ்ச்சியுடனும், இரக்க சிந்தையுடனும் எல்லோருக்கும் உதவி செய்து ஒற்றுமையாகப் பல்லாண்டு வாழ்ந்தனர்.

ஜானியிடம் மூன்று வெள்ளாடுகள் இருந்தன. நாள் முழுவதும் அந்த ஆடுகள் அங்குமிங்கும் ஓடியும் துள்ளியும் குன்றுகளின் மேல் குதித்தும் விளையாடிக் கொண்டிருக்கும். பொழுது சாய்ந்ததும் ஜானி அவற்றைத் தேடிக் கண்டுபிடித்து வீட்டிற்கு ஓட்டி வருவான்.



ஒருநாள் அந்தப் பொல்லாத ஆடுகள் உயரமாகத் துள்ளிச் சென்று பக்கத்திலிருந்த கிழங்குத் தோட்டத்தின் முள் வேலியைத் தாண்டி உள்ளே குதித்து விட்டன. அவற்றை வெளியே வரச் செய்ய என்ன முயற்சி செய்தும் ஜானியால் முடியவில்லை. குதித்த இடத்திலேயே ஆடுகள் தங்கி விட்டன. அதனால் அங்கேயே உட்கார்ந்து அழ ஆரம்பித்து விட்டான் ஜானி.

அந்த வழியாக ஒரு முயல் வந்தது.

"ஏன் அழுகிறாய்?" என்று கேட்டது முயல்.

"கிழங்குத் தோட்டத்திலிருந்து என் ஆடுகளைக் கிளப்ப முடியவில்லை" என்றான் ஜானி.

"ப்பூ.. இவ்வளவுதானா? நான் போய் அவற்றை வெளியே துரத்துகிறேன்" என்று சொல்லி உடனே ஓடியது முயல்.

முயல் எவ்வளவு வேடிக்கை காட்டியும் ஆடுகளை எழுப்ப முடியவில்லை.

சோர்ந்து போய்த் தோல்வியுடன் திரும்பி வந்து ஜானியின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டது முயல்.

அந்தப் பக்கமாகப் பறந்து வந்த தேனீ ஒன்று, உட்கார்ந்திருந்த ஜானியையும் முயலையும் பார்த்து விஷயத்தைக் கேட்டது.

அவர்களுடைய கவலையின் காரணத்தை அறிந்ததும், 'இரண்டே நிமிடங்களில் நான் ஆடுகளை வெளியே வரச் செய்யட்டுமா?' என்று கேட்டது தேனீ.


ஜானியும் முயலும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

"அல்பமான வண்டே! உன்னால் அந்த ஆடுகளை விரட்ட முடியுமா? பெரியவர்களாகிய எங்களாலேயே ஒன்றும் செய்ய முடியவில்லை. காலையில் தோட்டக்காரன் பெரிய நீளமான கம்பை எடுத்து வந்துதான் விரட்ட முடியும். அதற்குத் தான் காத்திருக்கிறோம். போ... போ..." என்று கேலி செய்தனர் ஜானியும் முயலும்.

ஆனால் தேனீ ஒன்றும் பதில் சொல்லாமல், தோட்டத்துக்குள் பறந்து போயிற்று. ஒரு ஆட்டின் காலைக் கடித்தது. இன்னொரு ஆட்டின் காதுக்குள் நுழைந்து சப்தம் செய்தது. இரண்டு ஆடுகளும் பயந்து போய் மூன்றாவது ஆட்டின் மேல் விழவே, மூன்று ஆடுகளும் பயத்தால் துள்ளி ஓடிக் குதித்து வெளியே வந்தன.

தேனீயின் சாமர்த்தியத்தைப் பார்த்து முயலும் ஜானியும் வெட்கத்தால் தலை குனிந்தனர்.

எஸ். ஆனந்த்



நாரை எப்படி இரை தின்னும்?

ரேவதி

மாமாவிடமிருந்து வந்த புத்தாண்டு வாழ்த்து அட்டையை முத்து இருபநாவது முறையாக எடுத்துப் பார்த்து ரசித்தான். அந்த அட்டையின் ஒரு பக்கத்தில் ஒற்றைக் காலில் நிற்கும் வெள்ளை நாரையின் வண்ணப்படம் ஒன்று அச்சிடப்பட்டிருந்தது. அந்த நாரைக்கு ஒருகால் இருந்தது மட்டும்தான் அதிசயம் என்றில்லை. அதன் தலையையும் காணவே காணோம்! தலையை யாரோ வெட்டி எடுத்துவிட்ட மாதிரி இருந்தது. பின்பக்கம், புத்தாண்டு வாழ்த்தாக நான்கு பாடல் வரிகள். அதற்குக் கீழே மாமாவின் கையெழுத்து இருந்தது.

ஒரு காலையும் காணோம், தலையையும் காணோம்! தலையும், ஒரு காலும் இல்லாத ஒரு பறவையின் படத்தைப் போட்டா புத்தாண்டு வாழ்த்தை அனுப்ப வேண்டும் என்று வாழ்த்து அட்டையைப் பார்த்தவுடனேயே முத்துவுக்குத் தோன்றியது.

காலைக் காணோம்
கண்டீரா?
தலையைக் காணோம்
தருவீரா?

- என்று ஒரு பாடலை எழுதினான். நன்றி கூறி மாமாவுக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டான் முத்து. இரண்டு நாள் கழித்து அகமதாபாத்தில் இருந்து மாமா தொலைபேசியில் முத்துவை அழைத்தார்.

"ஏ அசட்டு முத்து, என்னடா பாடல் எழுதியிருக்கே! பெரிய கவிஞன்னு நினைப்போ?"

"தலையும் ஒரு காலும் இல்லாத கொக்கின் படத்தைப் பார்த்ததும் பாவமா இருந்தது மாமா. உடனே மனசுல தோன்றியதை எழுதியனுப்பினேன். என்ன மாமா, புத்தாண்டு

வாழ்த்தாக இப்படிப்பட்ட ஒரு படம் போட்ட வாழ்த்து அட்டையா அனுப்புவீங்க?"

"அசட்டு முத்து. அந்தப் படம் மிக அருமையாக எடுக்கப்பட்ட புகைப் படம். கொக்கின் ஒரு காலும் தலையும் அதன் உடம்புக்குள்ளேயே இருக்கு."

"என்ன மாமா கதை விடறீங்க?"


"கதை விடலே அசட்டு முத்து. இங்கே நீ வந்தால், நன்சரோவர் சரணாலயத்தில் இந்த மாதிரி இலட்சக் கணக்கான கொக்குகளைப் பார்க்கலாம். நானும் எத்தனையோ முறை உன்னைக் கூப்பிட்டுவிட்டேன். உங்க அப்பா அம்மா கூட வந்துட்டுப் போயிட்டாங்க. நீ மட்டும் வரலை. இந்த மார்ச் மாதம் நான் பணியில் இருந்து ஓய்வு பெறுகிறேன். ஏப்ரலில் சென்னைக்கு வந்து விடுவேன். அதற்கப்புறம் நீ இந்த நன்சரோவர் சரணாலயத்தைப் பார்க்க வந்தால், ஓட்டலில் தங்கித்தான் பார்க்கணும். இது மிகவும் பொருத்தமான சீசன். உடனே பொங்கல் விடுமுறை வருகிறதே? அப்பொழுது கூட நீ வரலாமே?"

"இப்பவே போய் ரயிலுக்கு ரிசர்வ் பண்றேன் மாமா. இந்தப் பொங்கல் விடுமுறையில் நான் உங்களோடு இருப்பேன். உங்களோடு வந்து நன்சரோவர் சரணாலயத்தில் தலையும் ஒற்றைக் காலும் இல்லாத நாரையைப் பார்க்கப் போகிறேன்."

"வரும்போது உன் காமிராவையும், பைனாகுலரையும் கொண்டு வா."

பொங்கல் விடுமுறையின்போது முத்து அகமதாபாத்தில் உள்ள மாமாவின் வீட்டில் இருந்தான். மாமாவின் குடும்பத்ினரோடு அவன் டூரிஸ்ட் கோச்சில் சரணாலயத்திற்குக் கிளம்பினான்.

அரபிக்கடலில் பம்பாய்க்கு அருகே உள்ள குஜராத் மாநிலத்தில் கட்ச் வளைகுடாவில் கடல் சரணாலயமாக நன்சரோவர் சரணாலயம் அமைந்துள்ளது என்பதையும், அங்கே ஆண்டுதோறும்



அக்டோபர் முதல் மார்ச் மாதம் வரை பிளமிங்கோக்கள் எனப்படும் பத்து லட்சம் பூ நாரைகள் தங்கி இனப்பெருக் கம் செய்கின்றன என்பதையும், இதைப் பறவை விரும்பிகள் பூ நாரைப் பட்ட ணம் (Flamingo City) என்று அழைப்பதை யும் சுற்றுலாக் கையேடு விவரமாகக் கூறியது.

டூரிஸ்ட் பஸ் கடற்கரையை ஒட்டிய சாலையில் வந்து நின்றது. எல்லோரும் இறங்கினர். ஏற்கெனவே இருந்த சுற்று லாப் பயணிகளுடன் இவர்களும் சேர்ந்து கொண்டனர். அயல்நாட்டினர் தான் ஏராளம்.

எதிரே தெரிந்த சேறும் சகதியும் குட் டையும் நிறைந்த பரந்த சதுப்பு நிலப்பரப் பில் கண்ணுக்கு எட்டிய தொலைவு வரை பூ நாரைகள் எனப்படும் பிளமிங் கோக்கள் காணப்பட்டன. சில ஒற்றைக் காலை மடித்தபடி நின்றன. சில, அலகை வளைத்து உடம்பைக் கோதிக் கொண் டிருந்தன. பவளம் போன்ற சிவப்பு வண்ணக் கால்களையும், பஞ்சைப் போன்ற வெள்ளையான உடம்பையும், பாம்பு போல் வளைந்த கழுத்தையும் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் இருந்தது.

முத்து, பார்வையாளர்களுக்காக அமைக்கப்பட்டிருந்த கோபுரத்தில் ஏறி பைனாகுலரால் பார்த்தான். புடைத்த தலையில் வளைந்த ரோஜா வண்ண அலகுகள். மேல்தாடை வளைந்து காணப்பட்டது. ஆங்காங்கே மிருதங் கத்தை அல்லது கல் உரலை நிமிர்த்தி வைத்தது போன்ற மண்மேடுகள். மேல் பக்கம், அதன் நடுவில் ஒரு குழி.

"மாமா, அந்தக் குழிக்குள் முட்டை கள் இருக்கு!" என்றான் முத்து.

"ஒன்று அல்லது இரண்டுதான் இருக் கும்" என்ற மாமா, "இந்த நாரைகள், முட் டைகளை அடைகாப்பது வேடிக்கை யாக இருக்கும். கால்களை மடக்கிக் கொண்டு, இந்த மண்மேடுகளில் இவை உட்கார்ந்து அடைகாக்கும்," என்றார்.

"அதற்கு வசதியாகத்தான், இப்படி உயரமாக மண்மேடு கட்டி, குழி அமைச்சு, முட்டையிடுகின்றனவா!" என்று வியந்தான் முத்து.

"ரஹூக்...!' என்று ஒரு கோரஸ் சத்தம் எழுந்தது. அவ்வளவுதான், பெரும் பாலான நாரைகள் படபடவென்று சிறகடித்துப் பறந்தன. கழுத்தை முன்னே நீட்டி சிவப்புக் கால்களை இடுக்கி, பின்னே நீட்டி, இலட்சக்கணக்கான பூநாரைகள் சிறகடித்த காட்சி பிரமிப் பைத் தரும்படி இருந்தது. முத்து காமி ராவை வேகமாக இயக்கிப் படம் பிடித்துக் கொண்டான். சிறிது நேரம் பறந்த நாரைகள் ஆங்கில 'வி' எழுத்தின் உருவில் வரிசை அமைத்துப் பறந்து வந்து படிப்படியாக ஒய்யாரமாகத் தரை இறங்கியபோது முத்து அசந்த மாதிரியே மற்றவர்களும் திகைத்து நின்றனர்.

சற்றுப் பெரிய குட்டையில் சில



நாரைகள் இறங்கி, வரிசையாக நின்றன. வளைந்த கழுத்துடன் கூடிய தலையை நீருக்குள் முக்கின. அலகின்மேல் பாகத் தைக் கீழே வரும்படி கவிழ்த்து வைத்து, நீருக்குள் சேற்றைக் கலக்கியபடி மெது வாக நடந்தன.

"என்ன மாமா! இவை என்ன பண்ணு கின்றன?" என்று கேட்டான் முத்து.

"இதுதான் பூ நாரைகள் இரையைச் சேகரிக்கும் முறை. நிற்கும்போது உள்ள

மேல் தாடை, இப்படித் தலையைத் தலைகீழாக வைக்கும்போது கீழே நீருக்குள் போய்விடும். இது நீரைக் கலக்கியபடி நடக்கும்போது, நீருக்குள் உள்ள புழு, பூச்சிகள், தாவர விதைகள் எல்லாம் சேற்று நீருடன் கலந்து உள்ளே போகும். அலகை மூடியதும், நீர் சலிக்கப்பட்டு வெளியேறி, இரை மட்டும் உள்ளேயே தங்கிவிடும்'' என்றார் மாமா.

"இத்தனை நாரைகள் ஒன்றாகக் கூடி, குஞ்சு பொரிக்கின்றனவே.. இவைகளுக்குத் தங்கள் குஞ்சுகளை அடையாளம் தெரியுமா?''

"தெரியும். இதுதான் இயற்கையின் அற்புதம். தப்பித் தவறி குஞ்சுகள் இங்கேயே நாரைக் கூட்டத்திற்குள் எங்கேயாவது போய்விட்டால், மற்ற பெண் நாரைகள் ஒரு குழு உணர்வுடன் அவைகளுக்கு இரையைக் கொண்டு வந்து ஊட்டி வளர்க்கும்.''

"இரவில் தூங்கும்போது கூட இப்படித்தான் ஒற்றைக் காலில் நிற்குமா?''

"இப்படி நின்றபடியும் தூங்கும். சில சமயம் தலையை சிறகுக்குள் வைத்து மூடிக் கொண்டும் தூங்கும். 'நாராய் நாராய் செங்கால் நாராய்' என்று புறநானூற்றுப் பாடல் இருக்கிறதே, அதில் வரும் செங்கால் நாராய் இந்த பூ நாரை தான். அதோடு உலகத்தில் இப்படி இலட்சக்கணக்கில் பூ நாரைகள் கூடி இனப்பெருக்கம் செய்யும் ஒரே இடம் இந்த நள்சரோவர் சரணாலயம்தான். செங்கால் நாராய் என்று எத்தனை பொருத்தமான பெயரை சங்க காலத்திலேயே இதற்கு வைத்திருக்கிறார்கள் என்பது வியப்பாக இல்லை?'' என்றார் மாமா. முத்து வியப்புடன் பார்த்தான்.

அறிவியல் உண்மைகள்

- இந்தியாவில் உள்ள பறக்கும் பறவைகளில் குறிப்பிடத்தக்கது பிளமிங்கோ **(Flamingo)**. இதைத் தமிழில் சராஸ் நாரை, பூ நாரை, செங்கால் நாரை என்றும் அழைப்பர். இது **Phoenicopteridae** குடும்பத்தைச் சேர்ந்தது.
- உலகத்தில் அதிக அளவு பிளமிங்கோ பறவைகள் இலட்சக் கணக்கில் கூடி இனப்பெருக்கம் செய்யும் இடம் குஜராத்தில் உள்ள கட்ச் வளைகுடாவின் நள்சரோவர் சரணாலயம்.
- இவை ஒரு காலை வெளியே தெரியாத அளவுக்கு உடலுக்குள் இழுத்து மறைத்துக் கொள்ளுவதில் திறமை பெற்றவை. இதேபோல் தலையையும் சிறகுக்குள் மூடிக் கொள்ளும். இதே நிலையிலும் தூங்கும்.
- இவை முட்டையிட, உரலைக் கவிழ்த்த மாதிரி மண்மேடையிட்டு, குழி செய்து, அதில் முட்டையிடும். அதிக அளவு இரண்டு முட்டைகள் இடும். நீண்ட கால்களை மடித்து, மண் மேடையில் உட்கார்ந்து அடைகாக்கும். குஞ்சுகள் மற்றவைகளோடு கலந்துவிட்டாலும் ஒரு குழு உணர்வோடு மற்ற நாரைகள் அவைகளுக்கும் உணவளித்து வளர்க்கும்.
- தலையைத் தலைகீழாக வைத்து மேல்தாடையைக் கீழ்ப்பக்கமாக வரும்படி செய்து, உழுவதுபோல் நடந்து, சேற்றை நிரப்பி, இரை தேடும். தாடையின் வடிகட்டி போல் உள்ள அமைப்பு. நீரை வெளி யேற்ற, இரை தாடைக்குள்ளேயே தங்கி விடும்.
- இவை பறக்கும்போது தலையைக் கழுத்தோடு சேர்த்து முன்னுக்குத் தள்ளிக்கொண்டும், கால்களைப் பின்னுக்கு உந்திக் கொண்டும் அம்பு போல் பறக்கும்.
- இவை நீந்துவதும், தனியாகப் பறப்பதும், அணிஅணியாகப் பறப்பதும் கண் கொள்ளா அழகு.
- சங்க காலம் தொட்டு இவை தமிழர்களுக்கு நன்கு அறிமுகமான பறவை. தஞ்சை கோடிக்கரை சதுப்பு நிலத்திலும் இவை கூட்டமாகக் கூடுகின்றன.

"விஜய்!" என்று அழைத்தபடி விஜயின் வீட்டிற்குள் நுழைந்தான் ஞானம். அவன் கையில் அந்த மாதத்திய மழலை மலர் சிறுவர் பத்திரிகை இருந்தது.

ஞானத்தைப் பார்த்ததும் விஜய் முகம் மலர்ந்தான்.

"வா ஞானம். எத்தனை நாள் ஆச்சு பார்த்து! பள்ளி விடுமுறை விட்டாலும் விட்டாங்க, ஊருக்குப் போனவன் இப்போதான் வருகிறாயா? தேர்வு முடிவுகள் வந்தாச்சு. நீயும் பாஸ். நானும் பாஸ்" என்றான் விஜய்.

"அதெல்லாம் எனக்கும் தெரியும். அதை விடு. இதோ பார். இந்த மழலை மலரில் சிறுகதைப் போட்டி வைத்திருக்கிறார்கள். முடிவு தேதிக்கு இன்னமும் பத்து நாள் இருக்கு. இதில் கலந்துக் கொண்டாயா என்றுதான் கேட்க வந்தேன்" என்றான் ஞானம்.

விஜய் சிறுகதை எழுதுவான். சிறுவர் பத்திரிகைகளில் அவனது கதைகள் நிறைய வந்துள்ளன. நகைச்சுவையோடு தனது கருத்தை, நீதியை கதைகளில் சொல்வான். அவனது கதைகளை ரசித்துப் படிப்பவன் ஞானம்.

"இதை நன் முதலிலேயே பார்த்துட்டேன்டா", ஆனா, நான் கலந்துக்கறதா இல்லே, விஜயின் குரலில் உற்சாகம் இல்லை.

"ஏண்டா! உனக்கு என்ன ஆச்சு?"

"கலந்து கொண்டு பரிசு கிடைக்கலைன்னா அவமானம். அதை விட சாதாரணமா எழுதி அனுப்பலாம்."

விஜய் அளித்த பதில் ஞானத்தைத் திகைக்க வைத்தது.



"என்னடா பேசறே நீ? தோல்வி தானே வெற்றியின் முதல் படி? வெற்றியை அடைய தன்னம்பிக்கைதான் முக்கியம். உனக்கு என்ன ஆச்சு? ஏன் இப்படிப் பேசறே? போட்டிகள் வைப்பது எதற்காக? ஒருமுறை தோற்றால் மறுமுறை கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்ததாக எண்ணி சந்தோஷப்பட வேண்டாமா? வெட்ட வெட்டத்தானே அனுபவம் கிடைக்கும்? அறிவு வளரும்? அதற்காகத்தானே போட்டிகள்? அவமானம் என்று ஏன் கருதுகிறாய்? போட்டியில் தோற்றவர்கள் பெயரெல்லாம் வெளியிட்டு இவர்கள் தோற்றார்கள் என்றா போடப் போகிறார்கள்? உண்மையில், வென்றவர்களை விடத் தோற்றவர்கள்தான் மகிழ்ச்சியடை வேண்டும். காரணம் அதை மறுபடியும் திருத்தும் வாய்ப்புக் கிடைக்கிறது. பட்டை தீட்டத் தீட்டத்தான் வைரம் ஜொலிக்கும். உன் பலவீன எண்ணத்தைத் தூக்கி எறிந்து விட்டுக் கலந்து கொள். வெற்றி பெற வாழ்த்துகிறேன்" என்றான் ஞானம் பரபரப்போடு.

விஜயின் கண்கள் கலங்கின. "ஞானம், என் கதைகள் மூலம் எவ்வளவோ உபதேசம் செய்திருக்கிறேன். ஆனால், நானே இருளில் இருந்து விட்டேன். என் அறிவுக் கண்களை நீதான் திறந்து விட்டாய். நான் கண்டிப்பாகப் போட்டியில் கலந்து கொள்வேன். வெற்றியும் வெறுவேன்" என்றான் புத்துணர்ச்சி பெற்ற விஜய்.

— வாண்டுதாசன்

வினையை விதைத்தால்

கோபினும் ராபினும் பணக்கார வீட்டுப் பிள்ளைங்க. படிப்புல அவ்வளவு கவனம் கிடையாது. அவங்களோட படிக்கிறவன்தான் இளங்கோவன். வசதியான குடும்பத்துல பிறந்தவன்தான். ஆனா, படிப்பும் நல்லா படிப்பான். பழகுவதிலும் நல்லா பழகுவான்.

கோபினும் ராபினும் மற்றவங்க துன்பத்துல சந்தோஷம் பார்க்கறவங்க. இளங்கோவனுக்கு இது அறவே பிடிக்காது. இதனால இளங்கோவனை, கோபினுக்கும், ராபினுக்கும் பிடிக்கவே செய்யாது. இதைக் காரணமா வச்சு அடிக்கடி இளங்கோவனோட ரெண்டு பேருக்கும் தகறாறு வந்துக்கிட்டே இருக்கும். அவங்க பகைச்சுக்கிட்டாலும் இளங்கோவன் சிரிச்சுக்கிட்டே பகைமையைப் பாராட்டாம போயிடுவான்.


அன்னிக்கு மாலையில பள்ளிக்கூடம் விட்டு வீடு திரும்பிக்கிட்டிருந்தாங்க, கோபினும் ராபினும். எதிரே கம்ப ஊனிக்கிட்டு, தள்ளாடித் தள்ளாடி ஒரு பெரியவர் வந்துக்கிட்டிருந்தாரு.

இவங்க வர சத்தம் கேட்டு அந்தப் பெரியவரு, "பேரப்புள்ளைகளா... எனக்குக் கண்ணு தெரியாதப்பா. அம்மன் கோயிலுக்குப் போகணும். கொஞ்சம் வழிய காட்டினிங்கன்னா இந்தத் தடியால தட்டிக்கிட்டே போயிருவேன்பா,"ன்னு சொன்னாரு.

கோபினும் ராபினும் கேலிச் சிரிப்போட, "தாத்தா... நேரே போங்க. ஒரேடியா போய்ச் சேர்ந்திடுவீங்க"ன்னு சொல்லி முள்ளும் சகதியும் நெறைஞ்ச பாதைய காட்டினங்க.

பெரியவரு முள்ளுலயும் சகதியிலேயும் தவிச்சுக்கிட்டிருந்த போது இளங்கோவன் பார்த்துட்டான். ஓடிப் போயி பெரியவரைத் தூக்கி, சுத்தப்படுத்தி, உதவி செஞ்சான். பெரியவரு அவனை வாயார வாழ்த்திப் புகழ்ந்தார்.

இது அந்தப் பொல்லாத ரெண்டு பசங்களுக்கும் புடிக்கவே இல்லை. என்ன பண்ணினால் இளங்கோவனை



மட்டம் தட்டலாம்னு யோசிச்சாங்க.

இளங்கோவன் அப்பா டிக்கெட்டு கொடுக்கற பஸ்ஸு இந்த வழியாத்தான் போவுது. சரியா காலையில எட்டு மணிக்கு இப்படி வரும். ரோட்டோரமா இருக்கற வாழைத் தோப்புக்குள்ளே நம்ப வானரப்பட்டாளத்தை மறைந் திருக்க வைச்சு சரமாரியா கல்லை வீசு வோம்னு கோபின் யோசனை சொன் னான்.

"நல்ல ஐடியா. நாம்ப இதுல நேரடியா தலை இட்டுக்க வேணாம். வானரப்பட்டாளத்தை வைச்சே இதை முடிப்போம். அப்பத்தான் நம்பளை யாரும் குற்றம் சொல்ல மாட்டாங்க. சந் தேகப்பட மாட்டாங்க" என்று ஆமோ தித்தான் ராபின்.

இருவரும் தங்கள் பாக்கெட்மணி சேமிப்பில் இருந்து வானரப்பட்டாளங் களுக்கு ஒட்டல்ல இனிப்பு வாங்கிக் கொடுத்தாங்க. இந்த வானரப்பட் டாளம்கறது துஷ்டப் பையன்களோட கூட்டம். இனிப்பு வாங்கித் தந்து சினி மாவுக்குக் கூட்டிக்கிட்டுப் போனா எந்த பொல்லாத்தனத்தையும் பண்ணும்.

தங்கள் செயலின் வெற்றியைக் காண கோபினும் ராபினும் எட்டுமணிக்குப் பிறகு நிதானமாக பஸ்ஸில் கிளம்பினர். வசதியாகப் பார்த்துக் களிக்க இருவரும் ஜன்னல் ஓர சீட்டைப் பிடித்துக் கொண் டனர். பஸ்ஸில் என்ன காரணமோ தெரியவில்லை, கூட்டமான கூட்டம். புளிமூட்டை மாதிரி எல்லோரையும் அடைத்துக் கொண்டு போனார்கள்.

ஊரைத் தாண்டி வாழைத்தோப்பை பஸ் நெருங்கியது. அங்கே இவங்க எதிர் பார்த்தபடி கூட்டமோ குழப்பமோ இல்லே! ஆனா, இவங்க பஸ் வாழைத் தோப்பை நெருங்கியதும் கும்மா சர மாரியா கற்கள் வந்து விழுந்தன! ஜன் னல் ஓரமா வேடிக்கை பார்க்கக் காத் திருந்த ரெண்டு பேருக்கும் செம அடி. ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கிட்டு போனாங்க.

எட்டுமணி பஸ் பிரேக்டௌனாம்! அதனால அதை ரிப்பேர் பண்ண இளங்கோவனோட அப்பாவையும் கூட்டிக்கிட்டு டிரைவர் பஸ்ஸை ஓட்டிக்கிட்டுப் போயிட்டாராம். அது னால, எட்டு மணி பஸ் கும்பல் புராவும், அடுத்த பஸ்ஸில ஏறியிருக்கு. இது தெரி யாம கோபினும் ராபினும் வேடிக்கை பார்க்க அதுல ஏறிட்டாங்க.

வினையை விதைச்சால் வினை தானே விளையும்? நல்லதே நினைச்சா நல்லதே நடக்கும். கோபினும் ராபினும் இப்போ அடியோட மாறி நல்லவங்களா யிட்டாங்க!

தாழை ஷேக்தாசன்



★ எஸ். குமார், காரைக்குடி.

? எலியினால் பரவும் நோய்கள் என்னென்ன?

! எலியினால் மனிதர்களுக்குப் பல நோய்கள் பரவுகின்றன. அவற்றுள் மிகவும் முக்கியமானவை இவை: பிளேக், லெப்டோஸ்பைரோசிஸ், சால்மோனெல்லோசிஸ், ஸ்கிரப் டைபஸ், முரைன் டைபஸ் மற்றும் எலிக்கடிக் காய்ச்சல்.



★ சி. பெருமாள், சித்தம் பூண்டி.

? மலம் வெளியேறும் போது இரத்தமும் கலந்து வருகிறது. வயிறும் அடிக்கடி வலிக்கிறது. இது எதனால் டாக்டர்?


! குடலில் 'அமீபா தொற்று' (Amoebiasis) ஏற்படும் போது மலத்துடன் இரத்தமும் வெளியேறும்; வயிறு வலிக்கும். இந்த நோய் 'எண்டமீபா ஹிஸ்டோலிடிகா' (Ent-amobea Histolytica) எனும் 'ஒட்டுண்ணி'க் கிருமிகளால் ஏற்படுகிறது. அசுத்த உணவு, சுகாதாரமற்ற குடிநீர் மூலம் இந்தக் கிருமிகள் உணவுப் பாதைக்குள் நுழைந்து குடலில் நோயைத் தோற்றுவிக்கிறது. இதை முழுமையாகக் குணப்படுத்துவதற்கு மருந்துகள் உள்ளன. மருத்துவரிடம் ஆலோசித்து சிகிச்சை பெறுவது நல்லது.

மஞ்சளுக்கும் மஞ்சள்காமாலைக்கும் சம்பந்தம் உண்டா?

★ எல். வெங்கடேஸ்வரன், அய்யம்பாளையம்.

? மஞ்சளை உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொள்வதற்கும் மஞ்சள் காமாலைக்கும் சம்பந்தம் உண்டா டாக்டர்?

! இல்லை, வெங்கடேஸ்வரன்! எப்படி 'காக்கை'க்கும் 'காக்காய் வலிப்பு'க்கும் தொடர்பில்லையோ... அப்படித்தான், 'மஞ்ச'ளை உணவில் சேர்த்துக் கொள்வதற்கும் மஞ்சள் காமாலைக்கும் துளியும் தொடர்பில்லை!



★ பி. சங்கரபாண்டி, திருநெல்வேலி.

? டாக்டர், சிறுநீர் பாதையில் கல் அல்லது சதை இருந்து சிறுநீர் சரியாக வராமல் இருந்தால் கல் அல்லது சதை கரைந்து வெளிவர எவற்றை உட்கொள்ள வேண்டும்? எவற்றை உட்கொள்ளக் கூடாது?


! சிறுநீர்ப்பாதையில் 'சதை' இருந்தால் அதைக் கரைப்ப

தற்கு உணவு முறை உதாவது. அதற்கு அறுவை சிகிச்சை தான் சிறந்த வழி. சிறுநீர்ப் பாதையில் கல் இருந்தால் அதைக் கரைத்து வெளி யேற்றுவதற்கு உணவுகள் உதவலாம். அதற்காக எல்லா கற்களும் கரைந்துவிடும் என்று உறுதி கூற முடியாது. கல் இருக்கும் இடம், கல்லின் அளவு, வகை இவற்றைப் பொருத்து கல் கரையலாம் அல்லது கரை யாமல் போகலாம். மிளகு அளவிற்கு உள்ள கல் சில உணவுகளால் கரைய வாய்ப்பு உண்டு. நெல்லிக் காய் அளவுக்கு அல்லது அதற்கு மேல் அளவு பெரி தாக உள்ள கல் கரைவது கஷ்டம். அந்த மாதிரிக் கற் களை அறுவை சிகிச்சை மூலம் அகற்றலாம்; 'லித் தோடிரிப்டர்' (Lithotriptor) எனும் கருவி மூலம் அறுவை செய்யாமல் கற்களைக் கரைத்து விடலாம். சிறிய சிறுநீர்க் கல் கரைவதற்கு வாழைத்தண்டுச் சாறு தினமும் 200 மி.லி. வீதம் சாப்பிட வேண்டும். தினமும் 3 லிட்டருக்குக் குறையாமல் திரவ ஆகாரங்களை சேர்த்துக் கொள்ள வேண்டும். இளநீர், மோர், பார்லி போன்றவை இதற்கு உதவும். நார்ச்சத்து நிறைந்த தானிய உணவுகளை (அரிசி, கோதுமை)யும், பழங்களை (வாழைப்பழம், தக்காளி, ஆப்பிள்)யும் அடிக்கடி சாப்பிட வேண்டும். கால்சியம் நிறைந்த வெள்ளைப் பூண்டு, கருணைக் கிழங்கு, தண்டக்கீரை, பசலைக்கீரை, முன்ளங்கி இவற்றைச் சாப்பிடக் கூடாது. நெய், வெண்ணெய், பால்கோவா, பால் அல்வா,









ஐஸ்கிரீம், சாக்லேட் போன்ற கொழும்பு உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. காப்பி மற்றும் தேநீர் பருக வேண் டாம்.

★ எம்.கே. சக்திவேல், சேலம்.

? 'டென்ஷன்' வரும் சமயத்தில் இதயம் வேகமாக அடித்துக் கொள்கிறதே... இது எதனால் டாக்டர்? இப்படி வேகமாக இதயம் இயங்குவதால் ஏதாவது பின் விளைவுகள் ஏற்பட வாய்ப்பு உண்டா, டாக்டர்?

! நமக்கு 'டென்ஷன்' மன அழுத்தம் அதிகமாகும் போது பரிவு நரம்பு மண்டலம் மிகையாகப் பணி செய்கிறது. இதனால் இதயம் வேகமாகத் துடிக்கிறது. அடிக்கடி 'டென்ஷன்' ஆவது ஆபத்து. இரத்தக் கொதிப்பு, மாரடைப்பு, சர்க்கரை வியாதி, இரைப்பைப் புண் இது போன்ற இன்னும் பல நோய்கள் வருவதற்கு அது வழி அமைக்கும்.

★ ஆ. சிவசங்கரி, சங்கராபுரம்.

? எனக்கு நகம் கடிக்கும் பழக்கம் உள்ளது டாக்டர்! அதை மறப்பதற்கு ஒரு வழி சொல்லுங்கள், ப்ளீஸ்!

! ஆபத்தில்லாத கசப்புப் பொருள்களை (உதாரணமாக வேப்பெண்ணெய்) விரலில் தடவிக் கொள்ளலாம்; கடிக்க இயலாத அளவுக்கு நகத்தை வளரவிடாமல் ஒட்ட வெட்டிக் கொள்ளலாம்; மற்றபடி நகம் கடிப்பது அசிங்கமானது, அசுத்தமானது, உடல் நலனுக்குக் கெடுதலானது என்பதைப் புரிந்து கொண்டால் போதும்! நகத்தைக் கடிக்க மனம் வராது.

டாக்டர் கு. கணேசன்

மனைவிக்கு மணிவிழா கொண்டாடியவர்!

வள்ளியம்மை வள்ளியப்பா

மணிவிழா என்பது, அறுபது வயது நிறைந்த ஆண்களுக்கெனக் கொண்டாடும் விழாவாகத்தான் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். கணவருக்கு மணி விழா என்பதால், அவரது மனைவி என்பதற்காக பெண்களுக்கும் சிறப்புச் செய்கிறார்கள். மனைவிக்கு அறுபது வயது நிறையும் போது அவர்களுக்கு என்று தனி விழா எடுக்கும் வழக்கம் எங்கும் இல்லை.



ஆனால் கவிஞரவர்கள் வித்தியாசமானவர். எல்லாவற்றிலும் அவரது தனித்தன்மையையும் சிறப்பையும் காண்பிப்பவர். அவர் தனது மனைவியான எனக்கு அறுபது வயது நிறைந்ததை ஒட்டி தம் வீட்டிலேயே ஒரு விழா வைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்தார். அதை ஒரு குடும்ப நிகழ்ச்சியாக மட்டும் இன்றி, நண்பர்கள், எழுத்தாளர்கள், ஆசிரியர்களும் கலந்து கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் செய்து, விருந்தும் வைத்தார். இந்தப் புதுமையான விழாவுக்கு அவரே அழைப்பும் அனுப்பி வைத்தார். இலக்கிய அன்பர்களும், நண்பர்களும் விழாவுக்குத் திரண்டு வந்தனர். கவிஞர் என்பால் வைத்திருந்த அன்பைக் கண்டு வியந்து போற்றினர்.

குடும்பத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் கவிஞர் என்னுடைய கருத்தையும் கேட்டு அதற்கு முக்கியம் அளிப்பார். தலைவராக இருந்து நடத்தும் இலக்கிய விழாக்கள் எல்லா வற்றிலும் தம் குடும்பத்தாரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். அப்படியேதான் செய்தும் வந்தோம்.


மனிதநேயம் மிக்க கவிஞர் மனத்தில், குழந்தைகளுக்கு என்று தனியாக ஓர் இடம் இருந்தது. அவர் உடல்நலம் குன்றி குணமாகி வீட்டில் ஓய்வில் இருந்த நேரம். எங்கள் வீட்டுக் குழந்தைகள் மட்டும் இன்றி அக்கம் பக்கத்துக் குழந்தைகளும் கட்டிலில் அவரது படுக்கையில் அமர்ந்து அவருடன் விளையாடிப் பேசிக் கொண்டிருந்தனர். ஓய்வெடுக்க முடியாது இப்படிப் படுத்துகிறார்களே என்று எனக்கு வருத்தமாக இருந்தது. "ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லிப் போகச் சொல்லட்டுமா?" என்று கேட்டேன்.

"வேண்டாம் இவர்களோடு இருப்பதுதான் எனக்கு ஓய்வும் மகிழ்ச்சியும்" என்றார்.

அறிந்தவர்கள் வீட்டுத் திருமணங்களுக்குப் போகும் போது என்னையும் அழைத்துப் போவார். திண்டுக்கல்லில் ஒரு திருமணம். நானும் போயிருந்தேன். மணமக்களை வாழ்த்தும் போது, எல்லோரும் "வள்ளுவரையும் வாசுகியையும் போல வாழுங்கள்" என்று வாழ்த்துவார்கள். ஆனால் கவிஞரவர்கள் "என்னையும் என் மனைவியையும் போல ஒற்றுமை யாய் வாழுங்கள்" என்று வாழ்த்தி எனக்குத் தனிப் பெருமை தேடித் தந்தார்.

குழந்தைக் கவிஞரின் மனைவி என்று கூறிக் கொள்வதில் அளவில்லாத பெருமைப்படுகிறேன்.

நான் பார்த்துக்கறேன்!



காட்சி : 1

(அதிகாலை நேரம். அருண் வீட்டுக் கூடம். உள்ளே அம்மா பம்ப்பில் தண்ணீர் அடிக்கும் 'டக் டக்' சத்தம். அருண் தூங்கிக் கொண்டிருக்கிறான். அழைப்பு மணிச் சத்தம் கேட்கிறது.)

அம்மா : *(உள்ளே இருந்தபடி)* அருண், டேய் அருண். பால்காரர்தான் பால் பாக்கெட்டை வாசப் படிக்கட்டில் வைச்சுட்டு பஸ்ஸரை அழுக்கிட்டுப் போயிருக்கார். சீக்கிரம் போயி, உள்ளே கொண்டு வந்துவை. இல்லைன்னா யாராவது எடுத்துக்கிட்டுப் போயிடுவாங்க. எழுந்திருடா அருண்.

அருண் : *(சலித்தபடி புரண்டு)* நான் பார்த்துக்கறேம்மா. *(தூக்கத்தைத் தொடர்கிறான்.)*

(சிறிது நேரம் கழித்து அழைப்பு மணிச் சத்தம் கேட்க, அம்மா வந்து கதவைத் திறக்கிறாள். அப்பா வருகிறார். அருணின் தூக்கம் தொடர்கிறது.)

அப்பா *(வந்து கொண்டே)* : நான் வரும்போது ஒரு நாயைப் பார்த்தேன். அழகா பால் பாக்கெட்டை வாயில் கௌவிக்கிட்டுப் போகுது! கையிலே காமரா இல்லை. இருந்திருந்தா அருமையா ஒரு படம் புடிச்சிருப்பேன். இனிமே காலையிலே ஜாகிங் போகும் போது காமிராவையும் கழுத்துல கட்டிக்கிட்டுப் போகப் போறேன். காப்பி ரெடியா இருக்கா?

அம்மா : ஆமாம், காலங்கார்த்தால நீங்க ஜாகிங் போயிடுங்க. உங்க பையன் தூங்கிக்கிட்டே இருப்பான். நான் பம்ப்புல தண்ணி அடிச்சு மாயறேன். பால் பாக்கெட்டைக் கொண்டு வந்து உள்ளே வைக்க அருணை எழுப்பறதுக்குள்ளே எனக்குப் போதும் போதும்னு ஆயிடுத்து. நான் எங்கே காப்பி போட? பேசாம நாளைக்கு நீங்க அந்த நாயை நம்ம வீட்டுக்குத் தூக்கிக்கிட்டு வந்திடுங்க. அதுக்கு பால் பாக்கெட்டை உள்ளே கொண்டுவந்து வைக்கிறது, பம்ப்புல தண்ணி அடிக்கிறது, காப்பி போடறது எல்லாத்துக்கும் பழக்கி வைக்கிறேன். உங்களுக்கும் வசதியா இருக்கும். என் கஷ்டமும் குறையும்.

அப்பா : அப்போ, நாளைக்குக் காலையில நாயைப் புடிச்சுக்கிட்டு வந்து அது போட்டால்தான் இந்த வீட்டுல காப்பி கிடைக்குமா? இப்படின்னு தெரிஞ்சிருந்தா வரும்போதே ஓட்டல்ல காப்பி குடிச்சிட்டு வந்திருப்பேனே?

அம்மா : *(சிரித்துக் கொண்டே)* இந்தக் கிண்டலுக்குக் குறைவில்லை. என் ளிக்கித்தான் அப்பாவுக்கும் புள்ளைக்

கும் என் கஷ்டம் புரியப் போகுதோ? முதல்ல அருணை எழுப்புங்க. இதோ ஒரு நொடியில் காப்பி போட்டுத் தரேன். *(போகிறாள்)*

(அப்பா, அருணை எழுப்ப முயல, அம்மாவின் குரல் சமையலறையில் இருந்து கேட்கிறது.)

அம்மா : என்னது பால் பாக்கெட்டைக் காணோம்! அருணைக் கொண்டு வந்து வைக்கச் சொன்னேனே? *(வந்து கொண்டே)* ஏய், அருண், பால் பாக்கெட்டை உள்ளே கொண்டு வந்து வைக்கச் சொன்னேனே? செய்தியா? பால் கவரையே காணோமே?

அருண் *(பதறி உட்கார்ந்து கொண்டு):* அடடா... நான் பார்த்துக்கறேன்னு சொல்லிட்டு அப்படியே தூங்கிட்டேம்மா. இதோ போய் எடுத்துக்கிட்டு வரேன்.

அம்மா : ஆமா, நீ போய் எடுத்துக்கிட்டு வரும்வரை பால் கவர் இன்னும் அப்படியே கிடக்கும்னு நினைப்பா? உன்னை நம்பி ஒரு காரியத்தை ஒப்படைச்சால் அதோகதிதான். நான் பார்த்துக்கறேன், நான் பார்த்துக்கறேன்னு பெரிசா பதில்தான். எந்தக் காரியத்தையும் சொன்னவுடன், உடனுக்குடனே பண்ணாட்டா இந்தக் கதிதான். *(வருத்தத்துடன்)* நீ எப்பத்தான் மாறப் போறியோ?

அப்பா : அப்படின்னா, நான் பார்த்த நாய் வாயில கௌவிக்கிட்டிருந்தது நம்ம வீட்டுப் பால் பாக்கெட்டைத்தானா?

அம்மா : இதிலே இன்னும் சந்தேகமா? நாளைக்கு காமிராவோட போயி அந்த நாயைப் பால் பாக்கெட்டைக் கௌவிப் பிடிக்கிற மாதிரிபோட்டோ எடுத்துப் பெரிசா கூடத்துல மாட்டி வையுங்க. அப்பவாவது உங்க பையன் மனசு மாறி, ஒரு காரியத்தைச் சொன்னவுடன் ஒத்திப் போடாமல் உடனுக்குடன் செய்யறானான்னு பார்ப்போம். இன்னிக்கிக் காப்பி போடற சிரமம் மிச்சம். எல்லோருக்கும் புளிச்ச மோர் சாதம்தான். *(போகிறாள்)*



காட்சி : 2

(அருண் வீட்டுக் கூடம். அருண் நண்பர்களோடு கேரம் ஆடிக் கொண்டிருக்க, அம்மா வருகிறாள்.)

அம்மா *(வந்து கொண்டே):* சனி, ஞாயிறு விடுமுறைன்னா, விளையாடித் தான் பொழுதைக் கழிக்கணும். அன்னிக்கிக் கூட வீட்டுக்கு ஒத்தாசையா ஒரு துரும்பைக் கூட அசைக்கக் கூடாது. அப்படித்தானே?

அருண் : *(சலிப்புடன்)* சனிக்கிழமை தானேன்னு நண்பர்களோடு நான் கேரம் போர்டு ஆடினாக் கூட உங்களுக்குப் பிடிக்காதே. உங்களுக்கு இப்போ என்ன பண்ணணும்மா?

அம்மா : வீட்டுல துளி காப்பிப் பொடி இல்லே. அரைக்கக் கொடுத்



துட்டு வந்திருக்கேன். இரண்டு மணி நேரம் பொறுத்து வரச் சொல்லியிருக்கான். அரவை நிலையத்துல இட்லிக்கு மாவு தந்திருக்கேன். ஒரு மணி பொறுத்து வரச் சொல்லி இருக்கான்.

அருண் : இது இரண்டையும் வாங்கிக் கொண்டு வந்து வைக்கணும். அவ்வளவுதானே? ரெண்டு டோக்கனை யும் டீ.வி. ஸ்டாண்டுல வைச்சிடுங்க. நான் பார்த்துக்கறேன்.

அம்மா : நம்மோட குடியிருந்த சோமுவோட பாட்டிக்கு உடம்பு சரி யில்லையாம். நான் தாம்பரம் வரை போய்ப் பார்த்துட்டு சாயங்காலம் வந்துடறேன். உனக்கும் அப்பாவுக்கும் பூரி சட்னி பண்ணி டப்பாவுல வைச் சிருக்கேன்.

அருண் : *(சலிப்புடன்)* என்னம்மா தொணதொணன்னு விட மாட்டேங் கறீங்களே? எங்கிட்ட சொல்லிட் டீங்கள்ளே? நான் பார்த்துக்கறேன்.

அம்மா : ஆமாம், நீ பார்த்துண்ட அழகைத்தான் பார்த்துக்கிட்டே இருக் கேனே? காப்பிப் பொடியையும், மாவை யும் வாங்கிக்கிட்டு வந்து காலாகாலத் துல வைக்கலே, நாளைக்குக் காப்பி கிடையாது. திங்கட்கிழமை பள்ளிக் கூடத்துக்கு டிபன் கிடையாது. பழைய சாதம்தான். *(போகிறாள்)*

காட்சி : 3

(இரவு. அருண் வீட்டுக் கூடம். டீ.வி. யில் அருண் மேட்ச் பார்த்துக் கொண் டிருக்கிறான். அப்பா வருகிறார்.)

அப்பா *(வந்து கொண்டே)* : என்னது, சமையலறை இருண்டு கிடக்கு! லைட் போடலை? உங்கம்மா இல்லையா அருண்?

அருண் : ஆமாம்பா, சோமுவோட பாட்டிக்கு உடம்பு சரியில்லைன்னு பார்த்துட்டு வர தாம்பரம் போயிருக் காங்க. *(சட்டென்று நினைவு வந்தவ னாக)* அடடா, அம்மா காப்பிப் பொடி யையும், மாவையும் வாங்கிவரச் சொல்லி டோக்கன் தந்தாங்களே, மறந்தே போச்சே! *(எழுந்து)* உங்கள் சைக் கிளைக் கொடுங்கப்பா. போய் வாங்கிக் கிட்டு வரேன்.

அப்பா *(எரிச்சலுடன்)* : ஆமாம், நீ போய் வாங்கறவரை கடையைத் திறந் திருப்பாங்களாக்கும்? நான் வரும்போதே பார்த்தேன். ரெண்டு கடையும் மூடிக் கிடந்தது. எந்த ஒரு காரியத்தையும் சொன்ன உடனே செய்யாம ஒத்திப் போட்டால் இந்தக் கதிதான். *(வருந்தி)* எப்பத்தான் நீ மாறப் போறியோ?

அம்மா *(வந்து கொண்டே)* : நினைச்ச படியே ஆச்சு. இப்படிப் ஆகும்னு தெரிஞ்சுதான் நான் பஸ் ஸ்டாண்டுக் கடையில் வரும்போதே காப்பிப் பொடி கொஞ்சமாவும், ரவையும் வாங்கிக் கொண்டு வந்தேன். *(வருந்தி)* நீ மாறி னால் உனக்கு நல்லது. மாறாம இருந்

தால் அதன் பாதிப்பும் உனக்குத்தான்.

காட்சி : 4

(வகுப்புக்கு வெளியே நண்பர்களுடன் அருண் போய்க் கொண்டிருக்கிறான். ஆசிரியர் வருகிறார்.)

ஆசிரியர் : அருண், இங்கேயா இருக்கே? இந்த ஆண்டும் சென்னை நகரப் பள்ளிகளுக்கு இடையே மாணவர் மன்றம் ஒரு 'விநாடி வினா' போட்டி நடத்தறாங்களாம். நம்ம பள்ளியில் இருந்து ஏகமனதா உன்னைத் தேர்ந்தெடுத்திருக்காங்க. போன ஆண்டு மாதிரியே நீ இந்த ஆண்டும் முதலாவதாக வந்து நம்ம பள்ளிக்குப் பெருமை சேர்க்கணும்.

அருண் : கண்டிப்பா சார். உங்க வாழ்த்துக்கும் பலன் இருக்கும் சார். நீங்களெல்லாம் என்னிடம் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு ஏற்றவனாக இருப்பதைப் பற்றிப் பெரிதும் பெருமைப்படறேன் சார்.

ஆசிரியர் : பெருமைப்படறது அப்புறம் இருக்கட்டும். முதல்ல இந்தக் கடிதத்தைப் போட்டி நடத்தறவங்க கிட்டே திங்கட்கிழமை காலை பத்து மணிக்குள் கொண்டு போய்ச் சேர்த்துடணும். அப்பத்தான் போட்டியில் கலந்துக்க முடியும். உனக்கு அனுமதி தரேன். நீ இப்பவே போய்க் கொடுத்துட்டு வா. *(தருகிறார்)*

அருண் : திங்கட்கிழமை பத்து மணிக்குத்தானே சார்? நான் பள்ளிக்கு வரும் வழியில்தான் இந்த இடம் இருக்கு. வரும்போது கண்டிப்பா சேர்த்துடறேன். சைக்கிளோ இருக்கு, என் பொறுப்பு சார். நான் பார்த்துக்கறேன்.

"சே... உலகத் தமிழ் மாநாடு இன்னும் ரெண்டு நாள் நடந்திருக்கலாம்டா!"

"தமிழ்லே அத்தனை விருப்பமா?"

"நீ வேற! இன்னும் ரெண்டு நாள் லீவு கிடைச்சிருக்குமேன்னு சொன்னேன்...!"

- சீர்காழி வி. ரேவதி



காட்சி : 5

(அருண் வீடு. அருண் பள்ளிக்குக் கிளம்பிக் கொண்டிருக்கிறான். அம்மா வருகிறாள்.)

அம்மா : இன்னுமா கிளம்பலே அருண்? மணி ஒன்பதாயிடுத்தே? போற வழியில், க்விஸ் போட்டிக்குப் பெயர் தர மாணவர் மன்றத்துல கடிதத்தைக் கொடுக்கணும்னு சொன்னே?

அருண் : பத்து மணிக்குள் தானேம்மா தரணும்? நான் போற வழி தான். சைக்கிள் இருக்கு. ஒரு மிதி மதிச்சால் பத்தே நிமிஷத்துல போயிடுவேன். வரேம்மா. *(போகிறான்)*

காட்சி : 6

(சைக்கிள் பழுது பார்க்கும் கடைக்காரச் சிறுவன் வேறு சைக்கிளைக் கவனித்துக் கொண்டிருக்க, அருண் பொறுமை இழந்து கேட்கிறான்.)

அருண் : தம்பி, எனக்கு அவசரமா போகணும்பா. போற வழியில திடீர்னு பங்க்சராகிப் போச்சு. பத்து மணிக்குள் ஒரு இடத்தில் இருந்தாகணும்.

பையன் : சார், உங்களுக்கு முன்னாடி வந்தவங்க ரெண்டு பேர் இருக்காங்க சார். அவங்களைக் கவனிச்சிட்டுத்தான் உங்களைக் கவனிக்க முடியும்.



அப்படி அவசரம்னா, சைக்கிளை இங்கேயே விட்டுட்டுப் போங்க. நான் பங்க்சர் போட்டு வைக்கிறேன்.

அருண் : அப்படித்தான் பண்ணணும். மணி ஒன்பதே முக்கால் ஆயிடுத்தே! (ஆட்டோ வருகிறது) ஆட்டோ... ஆட்டோ... அண்ணா சாலை மாணவர் மன்றம் போகணும்.

ஆட்டோக்காரர் : இப்படிக் கிட்ட இருக்கிற இடங்களுக்கெல்லாம் யாரும் வரமாட்டாங்க. இரட்டிப்புக் கட்டணம் தர்றியா?

அருண் : சரி தரேன் (கைக்கடிகாரத்தைப் பார்த்து) ஐயோ... மணி ஒன்பது ஐம்பதாயிடுத்தே! இன்னும் பத்து நிமிஷம்தானே இருக்கு? டிரைவர், கொஞ்சம் சீக்கிரம் போங்க.

ஆட்டோக்காரர் : தம்பி, உன் அவசரத்துக்கு ஹெலிகாப்டர்தான் லாயக்கு. அண்ணா சாலையில் ஏதோ மறியல்

ஊர்வலம் வேற. அதனால சுத்திக் கிட்டுத்தான் போகணும். என்ன சொல்றே?

அருண் : எப்படியாவது போனா சரிங்க.

(கிளம்புகிறார்கள்)

காட்சி : 7


(மாணவர் மன்ற அலுவலகம் : செயலர், வேறு சிலர்)

அருண் : (பதறியபடி வந்து) வணக்கம் சார், நான் திரு.வி.க. பள்ளியில் இருந்து வரேன். விநாடி வினா போட்டியில் பங்கு கொள்ளக் கடிதம் கொண்டு வந்திருக்கேன்.

செயலர் : தம்பி, வெள்ளிக்கிழமையே கடிதத்தைக் கொடுத்தனுப்பி விட்டதாகத் தொலைபேசியில் உங்கள் தமிழாசிரியர் சொன்னாரே? அதைக் கொடுக்கவே இத்தனை நாளா? மணியைப் பார்த்தியா, பதினொன்னு பத்து! பத்து மணிக்குள் வரணும்னு கண்டிப்பாத் தெரிவிச்சிருந்தோமே! இவங்களெல்லாம் பத்தரை மணிக்கு வந்தவங்க. சரியா பத்து மணிக்கு எங்க பதிவை முடிச்சுட்டோம். இந்தியர்கள் என்றாலே காலம் தவறி, தாமதமா எதையும் பண்ணுபவர்கள் என்ற எண்ணம் உலகம் முழுவதும் பரவியிருக்கு. இந்த இழிவுப் பெயரை மாத்தறது எங்க முதல் இலட்சியம். உங்களை மாதிரி இளந்தலைமுறையினர் முயன்று இதை மாற்ற வேண்டியது போய், நீங்களே இப்படி இருந்தால் நம் நாட்டுக்கு எங்கே விமோசனம்? நீ போகலாம்.

(நின்று கொண்டிருக்கும் சிறுவர்களில் ஒருவன் வந்து)

சிறுவன் : உன் பெயர் அருண் தானே? கடந்த ஆண்டு விநாடி வினாப் போட்டியில் முதல் பரிசு வாங்கியது நீதானே?





அருண் *(திகைத்து):* ஆமாம்.

சிறுவன் *(மகிழ்ச்சியுடன்)* : என்னை வாழ்த்து அருண். போன ஆண்டுப் போட்டியில் இரண்டாம் பரிசு வாங்கியவன் நான்தான். இந்த ஆண்டு நீ கலந்துக்க முடியாம போனதால் எனக்குத்தான் முதல் பரிசு கிடைக்கப் போகிறது. அதற்காக என்னை அட்வான்சாகப் பாராட்டு அருண் *(போகிறான்)*

செயலர் : தம்பி அருண், உன் நிலையைப் பார்த்தாயா? உன்னிடம் திறமை இருக்கிறது. நீ போட்டியிட்டால் தங்களுக்குப் பரிசு கிடைக்காது என்று உறுதியாக மற்றவர்கள் நம்பும் அளவுக்கு உன்னிடம் திறமை இருக்கிறது. ஆனால், எதையும் உடனடியாகச் செய்யாமல் காலம் நீடித்துச் செய்யும் தாமத குணத்தால் இந்த வெற்றி வாய்ப்பை நீ இழந்து விட்டாய். இது உன்னை மட்டுமா பாதித்துள்ளது? பள்ளிக்குக் கிடைக்க வேண்டிய பெருமையையும் அல்லவா கிடைக்காமல் செய்துவிட்டது? *(அருண் தலைகுனிய)* எதையும் உடனுக்குடன் முன்னதாகவே செய்து விட்டால் இழப்பு இல்லை. இன்னும் கேட்டால் நன்மைதான். இது இல்லையேல் முன்னேற்றமே இருக்காது. இதைத் திருவள்ளுவர் மனிதனை அழிக்கவல்ல நான்கு அழிவு குணங்களில் முதலாவதாகச் சொல்கிறார். உடனடியாகச் செய்யாமல் காலத்தை நீடித்து வைத்துச் செய்தல், மறதி, சோம்பல், பணி நேரத்தில் உறக்கம் என்ற நான்கும் மனிதனை அழிவில் ஆழ்த்திவிடுமாம்.

அருண் *(மனம் வருந்தி)* : ஐயா, இதன் பாதிப்பு இதுநாள்வரை என் வீட்டோடு இருந்தது. அம்மா அப்பா இருவரும் இதனால் பெரிய தொல்லைக்கும் இழப்புக்கும் ஆளானார்கள். அப்பொழுதும் என் மனம் பெரிதாக நினைக்கவில்லை. இப்பொழுது பள்ளியின் பெருமையையும் பாதிக்கத் தொடங்கி விட்டது. நான் மாறிவிட்டேன்.

(போகிறான்)

நெடுநீர், மறவி, மடி, துயில்

நான்கும்

கெடும்நீரார் காமக் கலன் (605)


அழகின் பெருமை!

அடர்ந்த காடு ஒன்றில் ஆண் மயில் ஒன்று தன் குடும்பத்தோடு வசித்து வந்தது. அதற்கு அடர்த்தியான; கனமான தோகை இருந்தது. மகிழ்ச்சி வந்து விட்டால் மயிலுக்குத் தலை கால் புரியாது. தனது தோகையை விரித்துக் கொண்டு ஆடும். காட்டில் உள்ள எல்லாப் பறவைகளும், விலங்குகளும் அங்கே வந்து கூடிவிடும். மயிலின் ஒய்யார ஆட்டத்தைப் பார்த்து நேரம் போகாது வியக்கும்.

அவைகளின் புகழுரையைக் கேட்டுக் கேட்டு மயிலுக்கு தற்பெருமை ஏற்பட்டு விட்டது.

ஒரு நாள் காட்டில் இருந்த தாமரைக் குளத்திற்கு மயில் சென்றது. அதன் கரையில் ஆட ஆரம்பித்தது.

''மயிலக்கா ஆடுது. வாங்க வாங்க'' என்று குயில் கூவியது. ''சீக்



படிக்க ஓர் ஈசாப் கதை!

கிரம் வாங்க. மயிலம்மா ஆடுது'' என்று நரி ஊளையிட்டது. எல்லா விலங்குகளும் பறவைகளும் மயிலின் ஒய்யார ஆட்டத்தைப் பார்க்கக் கூடிவிட்டன. மயில் அசைந்து அசைந்து ஆடியது. எல்லாம் கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தன.

அந்த நேரத்தில் வெள்ளைக் கொக்கு ஒன்று வந்து தாமரைக் குளத்தில் இறங்கியது. அது, கரையில் நடை பெற்றுக் கொண்டிருந்த மயிலின் அழகான ஆட்டத்தைக் கண்டு மயங்க வில்லை. இன்னும் கேட்டால் அப்படி ஓர் ஆட்டம் நடை பெறுவதை அது கவனித்ததாகவே காட்டிக் கொள்ள வில்லை! தன் பாட்டுக்கு ஒரு காலை மடக்கிக் கொண்டு, மற்றொரு காலால் நின்று கொண்டு, மீனுக்காகக் காத்திருக்கத் தொடங்கியது.

கொக்கின் செய்கை, மயிலுக்குக் கோபமூட்டியது.

''ஏ கொக்கே! நான் எவ்வளவு அழகாக ஆடுகிறேன்! என் ஆட்டத்தைப் பார்க்க இத்தனை மிருகங்களும் பறவைகளும் காத்திருக்கின்றன. உனக்கு மட்டும் என்ன வந்தது? என் ஆட்டத்தை இலட்சியமே செய்யவில்லை நீ!'' என்று மயில் கோபத்துடன் கேட்டது.


கொக்கு மயில் கோபமாகக் கேட்டதைக் கூடக் காதில் வாங்கிக் கொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை. தன் பாட்டுக்கு நீரைப் பார்த்துக் கொண்டிருந்தது.

மயிலுக்கு எரிச்சலான எரிச்சல்! இப்படி யாருமே அதை அலட்சியப் படுத்தியது கிடையாது.

''ஏ கொக்கே! நான் கேட்டது உனக்கு கேட்கலே?'' என்று கேட்டது.

கொக்கு மிகவும் அலட்சியமாக மயிலைப் பார்த்தது.

''உனக்கு இந்தக் காட்டை விட்டால் வேறு இடம் தெரியாது. காட்டை விட்டு வெளியே போகாதவன் நீ. நான் அப்படி இல்லை. பல



நாடுகளைச் சுற்றியவன். உன் அழகினால் உனக்கு ஒரு பயனும் கிடையாது. ஆபத்து வந்தால் உன் அழகு வந்து உதவி புரியாது. இன்னும் கேட்டால் ஆபத்தான நேரங்களில் இந்த அழகான கனத்த தோகை தப்பிப் போக உனக்குப் பெரிதும் தடையாக இருக்கும். இப்படி ஆடிப் பழகுவதை விட, பறந்து பறந்து மிகவேகமாகப் பறக்கப் பழகிக் கொள். அது தான் உனக்குப் பாதுகாப்பு. முதலில் தற்காப்பு. பிறகு தான் அழகு, ஆட்டம், பாட்டம் எல்லாம்'' என்றது கொக்கு.

“உனக்கு என்னைப் பார்த்து; என் அழகான தோகையைப் பார்த்துப் பொறாமை. அதுதான் இப்படிப் பேசுகிறாய்'' என்று சாடியது மயில். கொக்கு பதில் கூடக் கூறவில்லை. ஒற்றைக் காலில் நின்று மீனுக்காகக் காத்திருந்தது.

திடீரென்று வேட்டை நாய்கள் குரைப்பது கேட்டது. மயிலின் ஆட்டத்தை ரசித்துக் கொண்டிருந்த எல்லாப் பறவைகளும், விலங்குகளும் கண்மூடித் திறப்பதற்குள் தப்பி ஓடி விட்டன! கொக்கும் நொடியில் தப்பிப் பறந்து விட்டது.

மயிலால் கனத்த தோகையைத் தூக்கிக் கொண்டு எளிதில் உயரே பறக்க முடியவில்லை. நாய்கள் வந்து மயிலைப் பிடித்துக் கொள்ள, வேட்டைக்காரன் பின்னாலேயே ஓடி வந்து மயிலைப் பிடித்துக் கொண்டான்.

முதலில் தற்காப்பு. பிறகுதான் அழகு, ஆட்டபாட்டம் எல்லாம் என்ற உண்மையை மயில் ஆபத்தில் சிக்கிக் கொண்ட பிறகே உணரத் தொடங்கியது.

‘கண்டுபிடி’ போட்டி முடிவு

இந்தப் போட்டியில் ஏழு படங்களே தரப்பட்டிருந்தன. ஆனால் விவர அறிவிப்பில் எட்டுப் படங்கள் என்று தவறாகத் தரப்பட்டு விட்டது. இரண்டாவதாகத் தரப்பட்ட எட்டு எழுத்துக் கட்டத்திற்கு, வாசகர்கள் தங்கள் கற்பனைப்படி எழுதியுள்ளனர்! எனவே, வந்த விடைகளைப் பரிசீலனை செய்ய, எல்லாவரிசைக் கட்டங்களிலும் மாற்றி மாற்றி எழுதப்பட்ட சரியான விடைகள், எல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவைகளுள் பரிசுக்குரியவற்றைத் தேர்ந்தெடுக்க குலுக்கல் முறையே கைகொடுத்தது.

சரியான விடை

குடை; பாலாடை, சல்லடை; வேகத்தடை; கோழிச்சண்டை(அ)சேவற்சண்டை(அ) சேவல் சண்டை; தேங்காய்க்கடை(அ) செட்டியார் கடை; கிரிக்கெட் மட்டை

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்:

1. ஆர்.கோபிநாத், ஆரணி.
2. ஆ.க.ஜாப்ரி, சென்னை-14.
3. இ.எழிலரசி, புதுவை - 10.
4. இரா. செந்தில் முருகன், கடலூர் - 1.
5. வெ.சேஷாத்ரி, சின்ன புளியம்பட்டி, அருப்புக்கோட்டை.
6. எஸ். ஹஸீனா, பொன்மலை.
7. எல்.ஆ.முகமது அலிஷா, கூத்தா நல்லூர்.
8. ந.தமிழ்ச் செல்வி, திருவானைக்கா.
9. ச. இளங்கதிர், நாமக்கல்-2.
10. கே.பெரியசாமி, தருமபுரி.
11. எஸ். கவிதா, குடிமேனை அள்ளி அகரம் போஸ்ட்.
12. து.வேங்கட்ரமணன், வடக்குப் பணையூர்.
13. க. ஐயப்பன், காரைக்கால்.
14. என்.பி. ஷோபனா, தூத்துக்குடி.
15. பி.சரோஜா, நாப்பிராம்பட்டி
16. ஜி.சௌம்யா, சென்னை -17.
17. எஸ்.ஸ்ரீதர், சேலம் - 1
18. சி.சுப்புராஜ், சாத்தூர்.
19. எச். உதயகமல், சென்னை - 23
20. ஜி.வைதேகி, கோட்டாத்தூர் போஸ்ட்.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

கம்மர்கட் கண்ணப்பர்!



குட்டிக் கரணபுரத்தின் மன்னர்தான் கண்ணப்பர். பார்ப்பதற்குத்தான் கண்ணப்பர் ராஜா மாதிரி இருந்தாரே தவிர மனதளவில் அவர் ஒரு குழந்தையாகவே இருந்தார். பலூன் ஊதி விளையாடுவார். மந்திரிப் பிரதானிகளுடன் வோர்ட்ஸ் பில்டிங் ஆடி, டாங்கி பட்டம் கிடைத்தால் 'ஓ' வென்று அழுவார். யார் அதிகப் பொட்டுக் கடலையை ஐந்து நிமிஷங்களில் தின்கிறார்கள் என்று போட்டி வைத்துத் தானும் கலந்து கொண்டு, தோற்றுவிட்டு தண்டனையாகத் தோப்புக் கரணம் போடுவார்.

அரசராக இருந்தாலும் கண்ணப்பரின் மனத்தில் தீராத ஓர் ஆசை இருந்தது. அவருக்குக் கம்மர்கட் என்றால் தனியான ஆசை. அவர், மாணவனாக இருந்தபோது, அதே பள்ளியில் சிவராஜ் என்று ஒரு வியாபாரியின் மகனும் படித்தான். இருவரும் நண்பரானார்கள். சிவராஜ் அடிக்கடி தன் வீட்டில் இருந்து கம்மர்கட் கொண்டு வருவான். கண்ணப்பர் உட்பட எல்லோருக்கும் தருவான்.

கண்ணப்பரின் தந்தை பெரிய மகாராஜா, பயங்கரமான முன்கோபக்காரர். அவரிடம் சென்று, அரண்மனையில் கம்மர்கட் பண்ண வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்தார் கண்ணப்பர்.

"கம்மர்கட்டெல்லாம் ஏழைங்க பலகாரம். இன்னும் கேட்டால் அது பலகாரமே கூட இல்லை. நாம்ப ராஜ பரம்பரை. நமக்கு உரிய பலகாரங்களான முறுக்கு, தேன்குழல், அதிரசம், லட்டு போன்றவைகளை மட்டுமே அரண்மனையில் பண்ணலாம். நீ கம்மர்கட்டுக்கு ஆசைப்படுவதே இழிவு" என்று அவருடைய ஆசையை முளையிலேயே கிள்ளி எறிந்து விட்டார் மகாராஜா.

கண்ணப்பர் அரசராகப் பதவி ஏற்றதற்கு அடுத்த நாளே அவர் அரண்மனை சமையற்காரனை அழைத்துவரச் சொல்லி, கம்மர்கட் பண்ணும்படி உத்தரவு போட்டார்.

சற்று நேரத்திற்கெல்லாம் அரசியார் அவரைத் தேடிக் கொண்டு அவசரம் அவசரமாக வந்தார்.

"அரசகுலத்தில் பிறந்து, மன்னரும் ஆகிவிட்ட பிறகு இப்படி கம்மர்கட் போன்ற

சின்னபாபு



அரைப் பசங்க பலகாரத்திற்கெல்லாம் ஆசைப்படுவது மிகக் கேவலம். வெளியே தெரிந்தால் தலை குனிவு. நல்லவேளை, சமையற்காரர் எனக்குச் செய்தியனுப்பினார். உடனே வந்து தடுத்து விட்டேன். இந்த மாதிரி அவமானப் படும்படியான செயல்களைச் செய்யாதீர்கள். உங்களுக்கு மன்னராக இருக்கும் தகுதியே இல்லை என்று எதிரிகள் பிரச்சாரம் பண்ணுவார்கள்'' என்று கண்டித்து விட்டுப் போனார் அரசியார்.

சில நாட்கள் வரை கண்ணப்பர் கம்மர்கட்டை மறந்திருந்தார். ஆனால் அதன் மேல் அவருக்கு இருந்த ஆசை மட்டும் குறையவில்லை. அதைத் தின்ன முடியவில்லையே என்ற ஏக்கமும் குறையவில்லை.

அமைச்சரின் பேரக் குழந்தைக்குப் பிறந்த நாள் என்று அரசரை அமைச்சர் அழைத்திருந்தார். மன்னர் அரசியாருடன் போயிருந்தார். அமைச்சர் வீட்டு மொட்டை மாடியில் சில சிறுவர்கள் கோலி ஆடிக் கொண்டிருந்தார்கள். கண்ணப்பர் அங்கே சென்று ஆட்டத்தைக் கவனித்தார். ஆடிக் கொண்டிருந்த சிறுவர்களில் ஒருவன் கம்மர்கட் தின்று கொண்டிருந்தான். அதைக் கண்ணப்பரும் கவனித்து விட்டார். அடக்க முடியாத ஆசையைச் சுமந்து கொண்டு கண்ணப்பர் சிறுவனை நெருங்கினார்.

''தம்பி! நானும் கோலி ஆட வரட்டுமா?''

சிறுவன் அடக்க முடியாத அதிசயத்துடன் கண்ணப்பரை நோக்கினான்.

"ராஜா கோலி ஆடலாமா?''

''ராஜா கோலி ஆடக்கூடாது என்று சட்டம் ஏதாவது இருக்கிறதா?''

''தோற்றுப் போனால் முட்டி தள்ளுவீர்களா?''

''கண்டிப்பா. ஆனால் நீ தோற்றுப் போனால் என்ன பண்ணுவே?''



"நானும் முட்டி தள்ளுவேன்."

''அது வேண்டாம். எனக்கு ஒரு கம்மர்கட் கொடு. அது போதும்."

சிறுவன் ஒப்புக் கொள்ள, எல்லோரும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்க, ராஜா கண்ணப்பர் சிறுவனுடன் அபாரமாகக் கோலி ஆடி, அவனைத் தோற்கடித்தார்.

''உங்கள் கோலி ஆட்டத்தைப் பார்த்தா, அரசாட்சி நடத்துற மன்னர் மாதிரியே தெரியலே! தினமும், இருபத்திநான்கு மணி நேரமும் கோலி ஆடிப் பயிற்சி பண்ணுகிறவர் மாதிரித் தோன்றுகிறது!'' என்று தன்னுடைய மதிப்புரையை வழங்கிய சிறுவன், தன் கையில் கடைசியாக மீதி வைத்திருந்த ஒரே ஓர் கம்மர் கட்டை அவர் கையில் வைத்தான்.

எத்தனையோ ஆண்டு






களுக்குப் பிறகு, கண்ணப்பர் தனது கரத்தால் கம்மர்கட்டைத் தொட்டார்! எப்படியெல்லாம் அவர் அதற்கு ஏங்கினார்! யார் யாரிடமோ வெட்கத்தை விட்டுக் கேட்டாரே! அப்படிப்பட்ட அற்புதப் பலகாரம் அவருக்குக் கடைசியில் கிடைத்தே விட்டதே! கண்ணப்பர் அடக்க இயலாத மகிழ்ச்சியுடன் கம்மர்கட்டை வாயில் போட்டுக் கொள்ளப் போனார். அதற்குள் எங்கிருந்தோ ஓடி வந்த அரசியார் அதைத் தட்டி விட்டார்!

''ராஜாவான நீங்க, இப்படி மொட்டைப் பசங்க மாதிரி கம்மர்கட் தின்பது எத்தனை கேலிக்குரிய செயல் என்பதை எத்தனை தடவை கூறியிருப்பேன்? இது மரியாதைக்குரிய ஒரு ராஜா பண்ணக் கூடியதல்ல என்று எத்தனை தடவை கூறியிருக்கிறேன்? உங்களுக்கு நினைப்பில்லை? வீசி எறியுங்கள் அதை'' என்று ஆத்திரத்துடன் தட்டி விட்டார்.

காத்துக் கொண்டிருந்த காகம் ஒன்று அதைக் கொத்திக் கொண்டு பறந்தது. இப்படி எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு கண்ணப்பரின் கைக்கு எட்டிய கம்மர்கட் அவரது வாய்க்கு எட்டாமலேயே போய்விட்டது! பாவம், கண்ணப்பர். கம்மர்கட் ஆசை அவரை மீண்டும் வந்து பிடித்துக் கொண்டது. கம்மர்கட் ஏக்கத்தால் அரசர் கண்ணப்பர் உடல் மெலிந்தார்!

ஒரு நாள் கண்ணப்பர் மாறு வேடத்தில் நகர சோதனைக்காகக் கிளம்பினார். அமைச்சர் வரவில்லை. இரவில் போவதாக இருந்தால்தான் அமைச்சர் வருவார். குடியானவர் தெருவில், ஒரு வீட்டின் முன்னால் கீற்றுக் கொட்டகை போட்டிருந்தார்கள். அதில் அடுப்பை மூட்டி, ஒருவர் என்னமோ பலகாரம் பண்ணிக் கொண்டிருந்தார். கமகமவென்று வாசனை மூக்கைத் துளைத்தது. மன்னர் பரவசம் அடைந்தார். காரணம், அது கம்மர்கட் பண்ணும் வாசனை! மன்னர் அவன் முன்னால் போய் நின்றார்.

''என்னப்பா பண்றே? கம்மர் கட்டா? ''எனக்குக் கொஞ்சம் கொடேன்? விலை தந்து விடுகிறேன்?'' என்று கண்ணப்பர்



கெஞ்சினார்.

''நாளைக்கு என் பேரனுக்குப் பிறந்தநாள். அதற்காகத்தான் அதிரசம் பண்ணிக்கிட்டிருக்கேன். பசங்க தொந்தரவு பொறுக்கு முடியாம, கடைசியில மிஞ்சிய பாகில் கம்மர்கட் போட்டேன். விலைக்குத் தரும்படி இல்லே. வேணுமானா ஒன்று கொண்டுபோ'' என்று ஒரே ஓர் கம்மர்கட்டை எடுத்துக் கொடுத்தார் அவர்.

அடக்க முடியாத ஆவலுடன் இருகரங்களையும் நீட்டி, பணிவாகவும் பயத்துடனும் அதை வாங்கிக் கொண்டார் கண்ணப்பர். அந்த நேரம் பார்த்துத்தானா அங்கு வந்த ஒரு நாய் குறுக்கே பாய்ந்து அந்த கம்மர்கட்டைப் பறித்துக் கொண்டு போகவேண்டும்? தீராத ஏக்கம் தொடர, கண்ணப்பர் மீண்டும் ஏக்கத்தால் உடல் மெலிந்தார்.

ஒரு மாதத்திற்குப் பிறகு ஒருநாள். மன்னர் அரசியாருடன் பல்லக்கில் அடுத்த ஊரில் நடை பெற்ற திருவிழாவுக்குக் கிளம்பினார். போகின்ற வழியில் சாலை ஓரத்தில், புளிய மரத்தினடியில் ஒரு தொண்டு கிழவி கோணித் துண்டைப் பரப்பிக் கடை வைத்திருந்தாள். அதில் கொடுக்காப்புளியங்கா, நாவல்பழம், வேர்க்கடலை, சர்க்கரை மிட்டாய் போன்றவை கூறுகட்டி வைக்கப்பட்டிருந்தன. கூடவே அவைகளுக்கு நடுவே மூடிபோட்ட கண்ணாடி பாட்டில் நிறையக் கம்மர் கட்டுகள்!



கம்மர்கட்டைப் பார்த்த பிறகு மன்னருக்கு இருப்பே கொள்ளவில்லை. நெளிந்தார். அரசியார் மட்டும் இல்லா திருந்தால் தானே சென்று பாட்டிலோடு கம்மர்கட்டை வாங்கிக் கொண்டு வந்திருப்பார். ராணியை அனுப்பிவிட்டு தான் மட்டும் சென்று வாங்கிவர மன்னர் ஒரு தந்திரம் பண்ணினார்.

"ராணி, என் மோதிரம் எங்கேயோ விழுந்து விட்டது. நான் இறங்கிப் போய்த் தேடி வருகிறேன்!" என்று பல்லக்கை நிறுத்தச் சொல்லி இறங்கிக் கொண்டார்.

"அழகுதான். பல்லக்கின் முன்பும் பின்பும் காவலர்களும் பணியாட்களும் இருக்கிறார்கள். அவர்களை அனுப்பித் தேடச் சொல்வதை விட்டு நீங்களே ஏன் போக வேண்டும்?'' என்று ராணியார் கேட்டார்.

''அது அதிசய சக்திவாய்ந்த மோதிரம். எத்தனை பணம் தந்தாலும் கிடைக்காது. ஆட்களை நம்ப முடியாது. நானே போய்ப் பார்க்கிறேன். நீ பயணத்தைத் தொடர். நான் விரைவில் உன்னோடு வந்து சேர்ந்து கொள்கிறேன்'' என்று இறங்கிக் கொண்டார் மன்னர். காவலனின் குதிரை7யை வாங்கிக் கொண்டு பறந்தார்.

புளிய மரத்தடி. மன்னர் ஆவலுடன் கம்மர்கட் பாட்டியைத் தேடினார். அது ஒன்றைத் தவிர மற்றவை எல்லாம் இருந்தன!

"கம்மர்கட் வேண்டும் பாட்டி'' என்றார் கண்ணப்பர்.

"ஏகாதசிக்குக் கண் முழிக்கிறாங்களாம். மெதுவாத்திங்க தோதா இருக்கும்னு பாட்டிலோட இப்பதானே வாங்கிக்கிட்டுப் போறாங்க" என்று கைவிரித்தாள் பாட்டி.



கண்ணப்பர், நிறைவேறாத கம்மர்கட் ஆசையால் மன நோய்க்கு ஆளானார். துரும்பாக இளைத்துப் படுத்த படுக்கையானார்.

"அரசியாரே, மன்னருக்கு நோய் உடலில் இல்லை. உள்ளத்தில் இருக்கிறது. உடல் நோயாக இருந்தால் எங்களால் குணப்படுத்த முடியும். உள்ள நோய்க்கு எங்களால் எப்படி மருந்து தர முடியும்? அவர் மனதிற்குள் ஏதோ ஏக்கம் இருக்கிறது. அது என்ன



என்பதைக் கண்டறிந்து நிறைவு செய்யுங்கள். கால தாமதம் உயிருக்கே ஆபத்தாக முடியும்" என்று தெளிவாகக் கூறிவிட்டார் தலைமை அரச வைத்தியர்.

ராணியார் பதைபதைத்தார். "ராஜாவான உங்களுக்கு என்ன மனக்குறை? என்னிடம் கூறுங்கள். கண்டிப்பாக நிறைவேற்றுகிறேன்" என்று கண்ணப்பரிடம் மன்றாடினார்.

கூறினால் கண்டிப்பாக நிறைவேற்றுவதாக உறுதிமொழி வாங்கிக் கொண்டு, கண்ணப்பர் கூறினார்.

"எனக்குக் கம்மர்கட் வேண்டும்!"

ராணியார் திகைத்தார். முகத்தில் கவலை படர்ந்தது.


"இத்தனை அற்பமான பண்டத்தை மன்னர் தின்னக் கூடாது என்றுதான் தடுத்தேனே தவிர, அது இப்படிப் பெரும் ஏக்கமாக மாறி உங்கள் உடலைப் பாதிக்கும் அளவுக்கு வளந்திருக்கும் என்பதை நான் எதிர் பார்க்கவே இல்லை. இனி நமது அரண்மனையிலேயே கம்மர்கட் பண்ணச் சொல்கிறேன். நீங்கள் வேண்டும் அளவுக்கு சாப்பிடுங்கள்" என்று கூறிய ராணியார், "ஆனால், ஒரு வேண்டுகோள். என்னைக் கம்மர்கட் சாப்பிடும்படி மட்டும் கட்டாயப் படுத்தாதிர்கள்", என்று கேட்டுக் கொண்டார்.

"ஏன் மகாராணி!"

"நான் சிறுமியாக இருக்கும்போது முழுக் கரும்பைக் கடிக்கும்போது என் முன்வரிசைப் பற்கள் நான்கும் பாதிக்கப்பட்டு விழுந்து விட்டன. அது வெளியில் தெரியாது இருக்க பொய்ப் பற்களைக் கட்டிக் கொண்டிருக்கிறேன். கம்மர்கட் கடித்தால் அந்த நான்கு பொய்ப்பற்களும் விழுந்து விடும்" என்றார் அரசியார்.

'இதனால்தான் என்னுடைய கம்மர்கட் ஆசைக்குத் தடை போட்டாயா? என்று சிரித்தார் கண்ணப்பர். அவரது ஏக்கம் பறந்து போயிருந்தது.

சார் தபால்



★ 'ரத்தினபுரி ரகசியம்' இது வரை வாண்டு மாமா எழுதிய சித்திரக் கதைகளின் சிகரமாக இருக்கும் என்று நம்புகிறேன். முதல் பகுதியே அசத்தால்தான் போங்கள்! படங்கள் அற்புதம்! பேசுகின்றன! பெரியவர்களும் படிக்கப் போட்டி போடுகிறார் கள்! - காரைக்குடி, மா. பூபதி, மேல் மலையனூர், எஸ். சர வணன், ஆனைகல்மேடு, சி. மாதேஸ்வரன், மேலப்பாதி ராஜ லட்சுமி நாகராஜன், காளாப்பூர் எஸ். தென்றல் பிரியன், காளாப் பூர் எஸ். காமராஜ், கொண்டரசம் பாளையம் எம்.எஸ். பெருமாள் நண்பர்கள், கச்சிராபாளையம் க. கோவிந்தராஜ், சிவகங்கை இரா. கண்ணன், சேலம் எம்.கே. வேங்கவேல், ஆரணி கே. யுவ ராஜ், விசலூர் ஜி.ஜி. கிருஷ்ணன், கச்சிராபாளையம் கே. முருகன், மற்றும் பலர்.

★ "வலி எப்படி இருக்கும்?" மனதை நெருடிவிட்டது சார்! - சர்க்கார் கொல்லப்பட்டி ஆர். தெய்வலட்சுமி ரமேஷ், மேல கிருஷ்ணன்புதூர் கே.எல். சுபா கனி, மற்றும் பலர்.

★ "மரங்கொத்தி மரத்தைக் கொத்துவது ஏன்?" - படிக்கப் படிக்க புதிய செய்திகளைத் தந்து அதிசயக்க வைத்தது. - திருமலை ரா. கணபதி ராஜா, மதுராந்தகம் கு. பாஸ்கரன், கே.ஆர். பாளையம் சுதா சங்கர், மற்றும் பலர்.

★ வள்ளுவர் புறங் கூறாமைக்கு ஓர் அதிகாரம்தான் படைத்தார். கோகுலம் 'வௌவால் வேணு'வாக ஒரு நாடகமே படைத்து மனசில் நிறுத்தி விட்டது. பெரம்பலூர் என். கோகுலப் பிரியன், விருத்தாசலம் வி. பிரபாகர், கச்சிராபாளையம் ஜெ. ஜெய்சங்கர், மற்றும் பலர்.

★ 'குரட்டையூர் பெருஞ்சித்தன்!' மன்னன் என்பவன் எப்படியெல்லாம் இருக்கக் கூடாது என்பதைச் சிரிக்கச் சிரிக்க எழுதியிருக்கிறார் சின்ன பாபு - மேலப்பாதி எஸ். நாகராஜன், பெரம்பலூர் என். சின்னதுரை, கச்சிரப்பாளையம் ஜெ. ஜெய்சங்கர், கவிக்கம்பன், மற்றும் பலர்.

★ கொட்டாங்குச்சி ஆமையைப் பண்ணி வீட்டில் வைத்திருக்கிறேன். ஒரே புகழ் விசாரணைதான் போங்கள்! - சின்னமனூர் கா. வரதராஜன், திருக்கண்ணங்குடி நீ. சிவா னந்தம், கச்சிராபாளையம் அபிநயா, மற்றும் பலர்.

★ பெரிய எழுத்து ஈசாப் கதை எங்கள் தாத்தா பாட்டியைபார்த்து விட்டது. ஒவ்வொரு இதழிலும் இதைப் போடவும். - சிங்கவரம் நா. பொன்மணி, எவரடி யான்பட்டி மா. முருகன், திருவாரூர் த. பரதன், தன கோபாலன், மற்றும் பலர்.

★ 'நான் கோகுலம் ஆசிரியரானால்?' பகுதி இதுவரை யாருமே செய்யத் துணியாத புதுமை! பாராட்டுகள்! தங்கள் இலட்சியங்களைத் தெரிவிக்க வாசகர்களுக்கு அருமையான வடிகால். ஆக்கபூர்வ ஆலோசனைகளை ஆசிரியர் குழு ஏற்குமா? அட்டைப் படம் பிரேம் போட்டு வைக்கத் தூண்டியது. இப்படி ஒவ்வொரு ஆண்டு விழாவையும் கொண்டாட புகைப்படம் வெளியிடலாமே? வெளியூர் வாசகர்களுக்கும் வாய்ப்புத் தரக்கூடாதா? - மாத்தாம்பள்ளி, வி. கனகமணி, காவேரிப்பட்டிணம், கே. சோமசேகர், ஆலந்தூர் டி. சுதா, சர்க்கார் கொல்லைப்பட்டி பெரு. இளங்கம்பன், கச்சிராபாளையம் அபிநயா, விசலூர் ஜி.ஜி. கிருஷ்ணன், திருவாரூர் த. வரதன்.

(கண்டிப்பாக. யோசனைகள் பரிசீலனை செய்யப்பட்டு, சாத்தியமான அனைத்தும் செயலாக்கப்படும் - ஆசிரியர்.)

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி, ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.



இனிப்பு எதுவும் வேண்டாங்க
இரண்டு பொம்மை போதுங்க!